# தமிழ்மொழியும் இலக்கியமும்

## ஆசிரியர் வழிகாட்டி

(2016 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது)

## தரம் 11





தமிழ்மொழித்துறை
தேசிய கல்வி நிறுவகம்,
மஹரகம,
ஸ்ரீ லங்கா

# தமிழ்மொழியும் இலக்கியமும்

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் 11

**(2016 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது)**

தமிழ் மொழித்துறை
தேசிய கல்வி நிறுவகம்,
மஹரகம,
ஸ்ரீலங்கா

# தமிழ்மொழியும் இலக்கியமும்

## ஆசிரியர் வழிகாட்டி

# தரம் 11

**(2016 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது)**

தமிழ் மொழித்துறை,
தேசிய கல்வி நிறுவகம்,
மஹரகம,
ஸ்ரீலங்கா.
இணையத்தளம் : **www.nie.lk**
மின்னஞ்சல் : **info@nie.lk**

தமிழ் மொழியும் இலக்கியமும்

ஆசிரியர் வழிகாட்டி

தரம் - 11

© தேசிய கல்வி நிறுவகம், மஹரகம.

ISBN

முதலாம் பதிப்பு : 2016

தேசிய கல்வி நிறுவகம்

தமிழ் மொழித்துறை,

மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்

தேசிய கல்வி நிறுவகம்

ஸ்ரீலங்கா.

இணையத்தளம் : **www.nie.lk**

மின்னஞ்சல் **: info@nie.lk**

பதிப்பு:

தேசிய கல்வி நிறுவகம்

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

இலங்கையின் இடைநிலைக் கல்வியில் புதிய தேர்ச்சி மையப் பாடத்திட்டத்தின் முதற் கட்டம் 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. எட்டு ஆண்டுகளுக்கொருமுறை மேற்கொள்ளப்படும் கலைத்திட்ட மறுசீரமைப்பின் மூலம் இது அறிமுகப்படுத்தப்பட்டது. தேசிய மட்டத் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கின் அடிப்படையில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கமைய அப்போது நடைமுறையிலிருந்த உள்ளடக்கம் சார்ந்த கல்வி முறைமை இதன் மூலம் மாற்றியமைக்கப்பட்டது.

தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தின் இரண்டாம் கட்ட மறுசீரமைப்பானது 2016 ஆம் ஆண்டிலிருந்து தரம் 7, 11 ஆகிய வகுப்புக்களுக்கு அமுல்படுத்தப்படவுள்ளது. இந் நோக்கத்தை அடையும் பொருட்டுத் தேசிய கல்வி நிறுவகம் ஆய்வை அடிப்படையாகக் கொண்ட பேறுகளையும் ஆர்வலர்களுடைய பல்வேறு ஆலோசனைகளையும் பலதரப்பட்டவர் களிடமிருந்தும் பெற்றுக்கொண்டது. அவற்றின் அடிப்படையில் நியாயப்படுத்தப்பட்டதொரு செயன்முறையை அறிமுகப்படுத்தியதுடன் அதற்கமைவான பாடத்திட்டங்களையும் மேற்படி தரங்களுக்காக விருத்தி செய்துள்ளது.

இந்த நியாயப்படுத்தற் செயன்முறையிற் கலைத்திட்ட மறுசீரமைப்பின் போது நிலைக்குத்தான ஒருங்கிணைப்பு முறை பயன்படுத்தப்பட்டு, கீழிருந்து மேல்நோக்கிய அணுகுமுறையில் அனைத்துப் பாடங்களுக்குமான தேர்ச்சி மட்டங்கள் முறைமையாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும்,அடிப்படை விடயங்களிலிருந்து உயர் மட்டத்தை நோக்கிச் செல்லும் வகையில் அவை ஒழுங்குபடுத்தப்பட்டும் உள்ளன. பாட உள்ளடக்கத்திற் காணப்படும் கூறியது கூறல் மற்றும் பாட உள்ளடக்கச் சுமை என்பவற்றை இழிநிலைக்கு இட்டுச் செல்லவும் மாணவர் நேயமானதும் நடைமுறைக்கேற்றதுமான கலைத்திட்டமொன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கவும் பாடத்தைத் திட்டமிடவும் கற்பிக்கவும் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் அளவீடு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளவும் உதவுமுகமாக ஆசிரியர் வழிகாட்டியிற் புதிய வடிவமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ் வழிகாட்டல்கள் ஆசிரியர்கள் வகுப்பறையில் மென்மேலும் உற்பத்தித் திறனுள்ளதும் விளைதிறன் மிக்கதுமான வகையிற் துலங்குவதற்கு உதவும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் மாணவர்களது தேர்ச்சிகளை விருத்தி செய்யும் வகையிற் தர உள்ளீடுகளையும் மேலதிக செயற்பாடுகளையும் தெரிவு செய்வதில் ஆசிரியர்களுக்குச் சுதந்திரத்தை வழங்கியுள்ளது. இப்புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் பாட உள்ளடக்கச் சுமையை விடுத்து, விதந்துரைக்கப்பட்ட பாடநூல்களின் மூலம் பாட உள்ளடக்கத்தைப் பூரணப் படுத்தியுள்ளது. ஆகவே, ஆசிரியர்கள் புதிய ஆசிரியர் வழிகாட்டிகளைப் பயன்படுத்தும் அதேவேளை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினாற் தயாரிக்கப்பட்ட பாடநூல்களையும் பொருத்தமான வகையிற் பயன்படுத்துதல் வேண்டும்.

ஆசிரியர் மையக் கல்வி முறைமையிலிருந்து மாணவர் மையக் கல்வி முறைமைக்குத் தளமாற்றம் செய்வதும் வேலையுலகிற்கு ஏற்ற வகையிற் பொருத்தமான மனித வளங்களை விருத்தி செய்வதும் தேவையான தேர்ச்சிகளையும் திறன்களையும் பாடசாலையிலிருந்து வெளியேறும் மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான செயற்பாடு சார்ந்த கல்வி முறைமையை விருத்தி செய்வதும் மேற்படி நியாயப்படுத்தப்பட்ட பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் வழிகாட்டியின் புதிய வடிவமைப்பு என்பவற்றின் அடிப்படை நோக்கங்களாகும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டியை உருவாக்குவதிற் பங்களிப்புச் செய்த தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விசார் அலுவல்கள் சபை மற்றும் பேரவை உறுப்பினர்களுக்கும் அனைத்து வளவாளர் களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகின்றன.

**பணிப்பாளர் நாயகம்**
**தேசிய கல்வி நிறுவகம்**

## பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட எந்தவொரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியாயமற்றவற்றைக் களைவதற்கும், நல்லவற்றைப் பயன்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கான கருவியாக அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதி மிக்கவை எவையோ அவையும் கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். இவ்வகையில், கலைத்திட்டத்தில் அடங்குகின்ற பாடத்திட்டம், ஆசிரியர் வழிகாட்டிகள், வசதி செய்து கொடுப்போர்(Facilitator) போன்றவையெல்லாம் கல்வித்துறையில் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை நவீன செல்நெறிகளையும், பண்டைய அருஞ் செல்வங்களையும் கலக்கச் செய்து, தனது கல்விக் கோலத்தை உருவாக்கிக் கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கு அமைய, எட்டாண்டுகளுக்கு ஒரு தடவை கல்வி மறுசீரமைப்புகளினூடாக இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இந்த ஆசிரியர் வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

தேசிய மட்டத்தில் பாடக் குறிக்கோள்களின் ஒத்த தன்மை பேணப்படுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியில் தரப்பட்டுள்ள கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் சற்றேனும் மாறுபடாது, அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்கு உரியவை அல்ல. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காக பாட விடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காக, கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை ஆக்கபூர்வமானதாக மாற்றி அமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் எவ்வித ஐயமுமில்லை. மாணவரது அடைவு மட்டத்தை உயர் சதவீதத்துக்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதல் அளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள இந்த ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி, மாணவரும் பெற்றோரும் கூடப் பயன்படுத்த முடியும். குறித்த பாடத்தின் பாட நூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இந்த ஆசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அல்ல என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பாக மதிப்பீடு நடத்தும், தேசிய மட்ட பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்படும் அடைவுகளை மாணவர்கள் அண்மிக்கச் செய்தல் வேண்டும். அவ்வகையில் பாடத்தைக் கற்பிப்பதற்கு வழிகாட்டி, வசதிசெய்து கொடுப்பவர்களால் வகுப்பறையில் குறிப்பிட்ட பாடத்துக்குரிய கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் இறுதியில் மதிப்பீடு நடத்தப்பட வேண்டும். அவ்வாறான களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இந்த ஆசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**பிரதிப் பணிப்பாளர் நாயகம்**
**மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்**
**தேசிய கல்வி நிறுவகம்**

## கலைத்திட்டக் குழு

**ஆலோசனையும் அனுமதியும்**

கல்விசார் அலுவல்கள் சபை,
தேசிய கல்வி நிறுவகம்.

**பாட விடய ஆலோசனை**

பேராசிரியர், எஸ். தில்லைநாதன்
தகைசார் ஓய்வுநிலைப் பேராசிரியர்.
திரு.க. இரகுபரன்
சிரேஷ்ட விரிவுரையாளர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
கலாநிதி. ஸ்ரீ.பிரசாந்தன.
முதுநிலை விரிவுரையாளர்
ஸ்ரீ ஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகம்.
செல்வி. வ. விஜயலெட்சுமி
பணிப்பாளர், தமிழ்மொழித் துறை,தேசிய கல்வி நிறுவகம்.

**இணைப்பாக்கம்**

திருமதி. நா.சீதரன். சிரேஷ்ட விரிவுரையாளர்,
தமிழ் மொழித்துறை, தேசிய கல்வி நிறுவகம்.

**வளப் பங்களிப்பு**

செல்வி. மாக்றித்தா வேதநாயகம், சிரேஷ்ட ஆசிரியர், கொழும்பு இந்துக் கல்லூரி, பம்பலப்பிட்டி.
திரு. எஸ். கேசவன், ஆசிரியர், இரத்மலானை இந்துக் கல்லூரி, இரத்மலானை.
திரு. பா. மகாலிங்கசிவம், விரிவுரையாளர், யாழ் / கோப்பாய் ஆசிரியர் கலாசாலை, கோப்பாய்
ஜனாப். ஆர். சதாத், தி / தாருல் உலூம் மகா வித்தியாலயம், கிண்ணியா.
திரு. எஸ். கணபதிப்பிள்ளை, ஆசிரிய ஆலோசகர், வலயக் கல்வி அலுவலகம், ஹற்றன்.
திரு. என். அருளானந்தம், பிரதிக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், மாத்தளை.

**மொழிச் செவ்விதாக்கம்**

திருமதி. நா. சீதரன்.
தமிழ் மொழித்துறை, தேசிய கல்வி நிறுவகம்.

**கணினிப் பதிப்பு**

திரு. சீதரன் அச்சுதன்.

## ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்

பாடசாலைக் கலைத்திட்டத்தில், தமிழ் மொழியும் இலக்கியமும் எனும் பாடம், வாரம் ஒன்றுக்கு ஐந்து பாடவேளைகளாக 06 - 11 ஆந் தரங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் இத் தரங்களுக்குரிய பாடத்திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டை நடத்த எதிர்பார்க்கப்படுகின்றது. மாணவர்கள் பொருளுணர்ந்து வாசிப்பதற்கும், எழுத்துப்பிழை, சொற்பிழை, தொடர்ப்பிழை, வாக்கியப்பிழை, பொருட்பிழை, மரபுப்பிழை இன்றி எழுதவும் பேசவும் மொழியைப் பொருத்தமாகப் பயன்படுத்த வேண்டும்.

06 - 11 ஆந் தரங்களுக்காக தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையின் படி, தமிழ் மொழியும் இலக்கியமும் என்ற பாடத்துக்கான கலைத்திட்டம் கட்டியெழுப்பப் பட்டுள்ளது. கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள இந்த ஆசிரியர் வழிகாட்டியானது பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குரிய அறிவுறுத்தல்களைக் கொண்டமைந்துள்ளது. ஒருவருடைய எழுத்து, வாசிப்பு, பேச்சு, கேட்டல் திறன்களுக்கு மொழி அவசியமானதாகும். மொழியினைப் பொருளுணர்ந்து கற்க வேண்டும். இதற்காக மரபுவழி இலக்கணக் கருத்துக்களோடு, நவீன மொழியியல் கருத்துக்களையும் இணைத்துக் கற்பிக்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தமிழ் மொழியும் இலக்கியமும் எனும் பாடத்தின் மூலம் மாணவரிடத்தே கட்டியெழுப்ப எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளை விருத்தி செய்யும்போது, பாடங்களும் அப்பாடங்களைப் பயிலுவதற்காகப் பயன்படுத்தும் முறையியல்களும் முக்கியமானவை. தமது ஆக்கவியல் திறமைகளைப் பயன்படுத்தி, வகுப்பறைத் தேவைக்கேற்ப இச்செயற்பாடுகளை மேலும் விருத்தி செய்து கொள்வதோடு, புதிய செயற்பாடுகளையும் ஆசிரியர்கள் தயாரித்துக் கொள்ளலாம். தமிழ் மொழியும் இலக்கியமும் எனும் பாடம் செயன்முறைச் செயற்பாடுகளையும் அடிப்படையாகக் கொண்டது. ஆசிரியர், பாடத் தலைப்புக்குப் பொருத்தமான தரவிருத்தி உள்ளீடுகளைப் பயன்படுத்திக் கொள்வதுடன், மாணவர்களுடைய திறன்களை விருத்தி செய்யக்கூடிய கற்பித்தல் சாதனங்களை அவர்களது நிலைக்கேற்பத் தயாரித்து, கற்றல் - கற்பித்தல் முன்கொண்டு செல்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. பொருத்தமாகத் திட்டமிட்டு, சந்தர்ப்பங்களை வழங்குவதன் மூலம் மாணவர்களுடைய திறனை மேலும் வலுப்படுத்த முடியும்.

கற்றல் - கற்பித்தல் செயலொழுங்கு மாணவர் மையமாகக் கொண்டு வகுப்பறையில் இடம்பெறுவதனால், அதற்கேற்ப இந்த ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதன்படி கற்றற் பேறுகளில் ஆசிரியர்கள் கவனம் செலுத்த வேண்டியது அவசியமானதாகும். ஒரு அலகைக் கற்பித்த பின்னர் எதனைத் தெரிந்திருக்க வேண்டும், அல்லது எதனை மதிக்க வேண்டும், அத்தகைய பேறுகளை எந்தளவுக்கு அடைய வேண்டுமென்பதில் ஆசிரியர்கள் கவனம் செலுத்த வேண்டும். அதாவது, மாணவர்களின் குறிப்பான செயல் அவதானிக்கப்பட வேண்டும்; அவர்களது செயற்பாடுகள் அளவிடப்பட வேண்டும். அத்தகைய செயற்பாடுகள் மாணவர்களாலே மேற்கொள்ளப்படவேண்டுமென்பதில் கவனம் செலுத்துவது அவசியமான தாகும். ஆசிரியர் வழிகாட்டியில் தேர்ச்சி மட்டங்களுக்குத் தரப்பட்டுள்ள பாட முன்னாயத்தங்களைப் பயன்படுத்தி, அதனடிப்படையில் ஏனைய விடய உள்ளடக்கங்களுக்கும் தயார் செய்து வகுப்பறையில் பயன்படுத்த வேண்டும்.

தமிழ் மொழியும் இலக்கியமும் எனும் பாடத்தினைச் செம்மையாகக் கற்பிப்பதனூடாக, மாறிவரும் உலகுக்குப் பொருத்தமான இளஞ் சந்ததியினரை உருவாக்க வழிகாட்டுவதே இந்த ஆசிரியர் வழிகாட்டியின் எதிர்பார்ப்பாகும். இந்த வழிகாட்டி தொடர்பாக உங்களது ஆக்கபூர்வமான கருத்துக்களை எமக்கு அனுப்பி வைக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**தமிழ் மொழித்துறை,**
**தேசிய கல்வி நிறுவகம்,**

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 01. | பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | iii |
| 02. | பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | iv |
| 03. | கலைத்திட்டக் குழு | v |
| 05. | ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்குரிய அறிவுறுத்தல்கள் | vi |
| 06. | தேசிய இலக்குகள் | viii |
| 07. | அடிப்படைத் தேர்ச்சிகள் | ix - x |
| 08. | பாடத்திட்டம் | xi - xxi |
| 09. | கற்றல் - கற்பித்தற் செயன்முறைக்குரிய வழிகாட்டல் | 1-125 |

# தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது, தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசியத் தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக, நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத்திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக்கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினை தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவிற்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு, தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்.

5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப, இணங்கி வாழவும் மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு, சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக்கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

**(தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை - 2003 திசெம்பர்)**

## அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

### 1. தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழில்நுட்பத் தகைமை.

எழுத்தறிவு : கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும் செம்மையாகவும் எழுதுதல், பயன்தரும் வகையிலான கருத்துப் பரிமாற்றம்.

எண்ணறிவு : பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல். எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்.

சித்திர அறிவு : கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல். விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றை கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்.

தகவல் தொழில்நுட்பத் தகைமை : கணினி அறிவு - கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.

### 2. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டுபிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத் தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்.
- மன எழுச்சிகள், நுண்ணறிவு.

### 3. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சூழலோடு (சமூகம், உயிரியல், பௌதிகம்) தொடர்புறுகின்றன.

சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறையும்.

உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல் சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு.

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும் வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**4. வேலை உலகத்திற்கு தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்**

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.

- பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்.
- அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்.
- அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்.
- பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்.

**5. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்.

**6. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்.

**7. "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்**

விரைவாக மாறுகின்ற, சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக, மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

**(தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை - 2003 திசெம்பர்)**

# பாடத்திட்டம்

# கற்றல் - கற்பித்தற் செயன்முறைக்குரிய வழிகாட்டல்

**தரம் - 11** **கேட்டலும் பேச்சும்**

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 1.0 பல்வேறு நோக்கங் - களுக்கும் சந்தர்ப்பங் களுக்குமேற்ப, வினைத் திறனுடன் கேட்டுக் கிரகித்துத் துலங்குவார். | 1.1 எழுத்துக்களின் ஒலிப்புக்கேற்ப, சொற்களைச் செம்மையாக உச்சரிப்பார். | • சொல்<br>• சொற்றொடர்<br>• வாக்கியம் | • தமிழின் மாற்றொலிகளை இனங்கண்டு, சரியாக உச்சரிப்பார்.<br>உ- ம்: தடல் (k)<br>சங்கம் (g)<br>மதன் ( h) | 02 |
| | 1.2 பாடலை / செய்யுளைப் பொருளுணர்ந்து சொல்லுவார் / ஓதுவார். | • விழுமியப் பண்பும், ஓசை நயமும், சொல் நயமும், பொருள் நயமும் கொண்ட<br>• செய்யுள்/ கவிதை<br>• நாட்டார் பாடல்கள் | • பாடலை / செய்யுளை மனனம் செய்வார்.<br>• பாடலை / செய்யுளை ஓசையோடு ஓதுவார்.<br>• பாடலை / செய்யுளை உச்சரிப்புத் தெளிவுடன் ஓதுவார்.<br>• பாடலை / செய்யுளைப் பொருள் விளங்க ஓதுவார்.<br>• பாடலை / செய்யுளை உணர்ச்சி வெளிப்பாட்டுடன் ஓதுவார். | 02 |
| | 1.3 கேட்டுக் கிரகித்தவற்றைச் செம்மையாகக் கூறுவார். | • செய்யுள் /பாடல்<br>• கதை<br>• அறிவித்தல்<br>• அறிவுறுத்தல்<br>• நற்சிந்தனை<br>• உரையாடல்<br>• செய்தி (வானொலி, தொலைக்காட்சி)<br>• மேடைப் பேச்சு<br>• துண்டுப் பிரசுரங்கள்<br>• நாடகம் | • பிரதான கருத்தை இனங்கண்டு கூறுவார்.<br>• துணைக் கருத்துக்களை இனங்கண்டு கூறுவார்.<br>• கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிப்பார்.<br>• நயந்த பகுதியினைக் கூறுவார்.<br>• குறித்த விடயம் பற்றிய தமது அபிப்பிராயத்தை / கருத்துக் - களை முன்வைப்பார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 1.4 செயற்றிறனும் வினைத்திறனும் உள்ள கேட்போராகச் செயற்படுவார். | • செய்யுள் / கவிதை<br>• உரைநடை<br>• நாட்டார் பாடல்<br>• சொற்பொழிவு<br>• நாடகம் | • கேட்டலில் விருப்புடன் ஈடுபடுவார்.<br>• விடயத்தைக் கிரகித்துக் கூறுவார்.<br>• தகவல்கள், விடயங்கள் பற்றிய சொந்த அபிப்பிராயங்களைக் கூறுவார்.<br>• தகவல்கள், தரவுகள் அடிப்படையில் முடிவுக்கு வருவார்.<br>• குறித்த பகுதியில் நயந்தவற்றைக் கூறுவார். | 04 |
| 2.0 சந்தர்ப்பத் - துக்கும் சூழ்நிலைக் - கும் ஏற்ற வகையில் உரையாடுவார். | 2.1 தமது உணர்வுகளும் எண்ணங்களும் தெளிவாகப் புலப்படும் வகையில் உரையாடுவார். | • உரையாடல்<br>• விவாதம்<br>• விவரணச் சித்திரம்<br>• நேர்காணல் | • கருத்துக்களை அறிந்து கூறுவார்.<br>• உரையாடலின்போது விடயத்தினைத் தெளிவுடன் வெளிப்படுத்துவார்.<br>• தமக்கு ஏற்படும் பிரச்சினைகளை மற்றவர்களுக்கு எடுத்துக் கூறுவார்.<br>• பிறர் ஏற்றுக்கொள்ளும் வகையில் தமது கருத்துக்களைப் பண்புடன் கூறுவார்.<br>• கலந்துரையாடலின் போது, மற்றவரது பேச்சை அவதானித்து, தமது கருத்துக்களை முன்வைப்பார்.<br>• எடுத்துக் கொண்ட விடயங்களைத் தமது சொந்த அனுபவத்தின் அடிப்படையில் விபரிப்பார்.<br>• தமது விருப்பு, வெறுப்புக்களைப் பண்பாக வெளியிடுவார்.<br>• தாம் அறிந்த விடயங்களைத் தொகுத்துக் கூறுவார். | 03 |
| 3.0 பல்வேறு பாத்திரங்களை ஏற்று, அவற்றின் இயல்புகளையும் உணர்ச்சிகளை - யும் வெளிப் படுத்திப் பேசுவார். | 3.1 பாத்திரங்களின் இயல்புகளுக்கேற்ப, நடித்துப் பேசுவார். | • நாடகம்<br>• நாட்டார் கதை<br>• கதைப் பாடல்<br>• தனிநடிப்பு | • பாத்திரத்தின் உணர்வுகளை வெளிக்கொணரும் வகையில், உச்சரிப்புத் தெளிவுடனும் பொருத்தமான தொனி, முகபாவம், அங்க அசைவுகளுடனும் பேசுவார்.<br>• பல்வேறுபட்ட பாத்திரங்களாகப் பாவனை செய்து பேசுவார்.<br>• ஒரே சமயத்தில் ஒருவரே பல்வேறுபட்ட பாத்திரங்களை ஏற்றுப் பேசுவார்.<br>• ஏனையோருடன் ஒத்திசைவாகச் சேர்ந்து நடித்துப் பேசுவார். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| | 3.2 பாவனை செய்து பேசுவார். | • அறிவிப்பு<br>• நிகழ்ச்சித் தொகுப்பு<br>• விளம்பரம்<br>• கதை<br>• நேர்முக வர்ணனை | • தனது வகிபாகத்தை அறிந்து, பாவனை செய்து பேசுவார்.<br>- அவையினை விளித்துப் பேசுதல்<br>- தொனி வேறுபாடுகளுடன் பேசுதல்<br>- சரளமாகப் பேசுதல்<br>- கேட்போரை ஈர்க்கும் வகையில் பேசுதல்<br>• ஒரே சமயத்தில் ஒருவரே பல்வேறுபட்ட பாத்திரங்களின் தொனியை ஏற்றுப் பேசுவார். | 03 |
| 4.0 தமது எண்ணங்களைக் கேட்போர் உளங் - கொள்ளத்தக்க வகையில் எடுத்துரைப் - பார். | 4.1 ஆக்கச் சிந்தனை வெளிப்படும் விதத்தில் தெளிவாகப் பேசுவார். | • செய்யுள்கள்<br>• முடிவுறாக் கதைகள்<br>• சம்பவ விபரிப்பு<br>• அனுபவக் கட்டுரைகள் | • கொடுக்கப்பட்ட விடயத்தினைத் தெளிவாகக் கூறுவார்.<br>• வழங்கப்படும் விடயத்தின் தொடர்ச்சியைக் கற்பனை செய்து, விரித்துக் கூறுவார்.<br>• விடயங்களைத் தொடர்புபடத் தெளிவாகக் கூறுவார்.<br>• தாம் பெற்ற உணர்வுகளைப் பிறரும் உணரும் வகையில் கூறுவார். | 03 |
| | 4.2 எடுத்துக் கொண்ட விடயத்துக்குப் பொருத்தமாக, பொருட் செறிவோடு பேச்சு நுட்பங் - களைக் கையாண்டு பேசுவார். | • சொற்பொழிவு<br>• விவாதம் | • பொருத்தமான தலைப்பினைத் தெரிவு செய்து, ஏற்ற சட்டகத்தினை அமைத்துப் பேசுவார்.<br>• நோக்கத்துக்கும் சபைக்கும் ஏற்றவாறு பேசுவார்.<br>• பொருத்தமான முகபாவத்தோடும் தொனியோடும் பேசுவார்.<br>• நேரக் கட்டுப்பாட்டினை அனுசரித்துப் பேசுவார்.<br>• முக்கிய கருத்துக்களுக்கு அழுத்தம் கொடுத்து, தர்க்கித்துப் பேசுவார்.<br>• மேற்கோள் முதலியவற்றைக் கையாண்டு பேசுவார். | 03 |

## வாசிப்பு

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 5.0 ஆக்கபூர்வமான செயற்றிறன் உடைய வாசகராகச் செயற்படுவார். | 5.1 விடயத் தெளிவோடு, வாசிப்புப் பொறிமுறைகளை அனுசரித்து வாசிப்பார். | • செய்யுள் / கவிதை<br>• உரைநடை<br>- சிறுகதை<br>- நாடகம் | • விடயத்தினைத் தெளிவாக உச்சரித்து வாசிப்பார்.<br>• எழுத்துக்களின் ஒலிபேதங்களை இனங்கண்டு, உரிய தொனியோடு வாசிப்பார்.<br>• உரிய அழுத்தம் கொடுத்து வாசிப்பார்.<br>• நிறுத்தக் குறிகளை அனுசரித்து வாசிப்பார்.<br>• கருத்தூன்றி வாசிப்பார்.<br>• கொண்டு கூட்டி வாசிப்பார்.<br>• சந்தி பிரித்து வாசிப்பார்.<br>• ஆக்கங்களின் அமைப்பை அனுசரித்து, ஏற்ற உணர்ச்சி வெளிப்படுமாறு வாசிப்பார். | 06 |
| 6.0 கிரகித்துப் பொருள் உணர்ந்து வாசிப்பார். | 6.1 மௌனமாக வாசித்துக் கிரகித்துத் துலங்குவார். | • செய்யுள் / கவிதை<br>• உரைநடை | • பிரதான கருத்து, துணைக் கருத்துக்களைக் கூறுவார்.<br>• வாசித்த பகுதியைச் சுருக்கி, சொந்த மொழிநடையில் கூறுவார்.<br>• அரும்பதங்களை அறிந்து கூறுவார்.<br>• பாத்திரங்களின் இயல்புகளைக் கூறுவார்.<br>• படைப்புக்களினூடே வெளிப்படும் ஆசிரியரின் கருத்துக்களைக் கூறுவார்.<br>• படைப்பின் பின்னணி, மொழிநடை பற்றிக் கூறுவார். | 03 |
| | 6.2 பல்வேறு நோக்கங் களுக்காக வாசிப்பார். | • செய்யுள் (நீதி நூல்கள்)<br>• உரைநடை<br>- கடிதம்<br>- அழைப்பிதழ்<br>- துண்டுப்பிரசுரம்<br>- விளம்பரம் | • தகவல்களைச் சேகரிப்பதற்காக வாசிப்பார்.<br>• ஆக்கங்களின் அமைப்பை அறிந்து வாசிப்பார்.<br>• பொருளுக்கேற்ப உரிய தொனியோடு வாசிப்பார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாட வேளை |
|---|---|---|---|---|
| 7.0 இரசனைக்காக வும் ஆக்கத் திறனை விருத்தி செய்யும் வகையிலும் வாசிப்பார். | 7.1 படைப்புக்களை நயந்து வாசிப்பார். | • செய்யுள் / கவிதை<br>• உரைநடை<br>- சிறுகதை<br>- நாடகம் | • படைப்பின் உள்ளடக்கத்தை அறிந்து வாசிப்பார்.<br>• படைப்பு நுட்பங்களை உணர்ந்து வாசிப்பார்.<br>• ஓசை நயம், அணிகளை இனங்கண்டு வாசிப்பார்.<br>• சிறுகதை, நாடகம் முதலானவற்றின் களம், பாத்திரங்கள், சமூகப் பின்னணி முதலியன பற்றி அறிந்து வாசிப்பார். | 15 |

vOj;J

| Nju;r;rp | Nju;r;rp kl;lk; | tpla cs;slf;fk; | fw;ww; NgWfs; | ghl Ntis |
|---|---|---|---|---|
| 8.0 அவதானமாகக் கிரகித்து, எழுத்துப் பொறி முறைகளை அனுசரித்து, இலக்கண வழுவின்றி உரிய நிறுத்தக் குறிகளுடன் ஆக்கங்களைத் தெளிவாக எழுதுவார். | 8.1 எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து, வழுவின்றி, நேர்த்தியாக எழுதுவார். | • எழுத்து<br>• சொல்<br>• சொற்றொடர்<br>• வாக்கியம்<br>• பந்தி | • எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து, உரிய நிறுத்தக் குறிகளோடு வழுவின்றி, சுயமாக எழுதுவார்.<br>• தெளிவாக எழுதுவார்.<br>• பந்தி முதலிய உறுப்புக்கள் அமைய ஆக்கங்களை எழுதுவார்.<br>• விடயத்தினைச் சுருக்கியும் விரித்தும் தெளிவாக எழுதுவார். | 02 |
| | 8.2 அவதானித்துக் கேட்டுக் கிரகித்தவற்றை வழுவின்றி எழுதுவார். | • எழுத்து<br>• சொல்<br>• சொற்றொடர்<br>• வாக்கியம்<br>• பந்தி<br>• சிறுகதை<br>• கட்டுரை<br>• பாடல்<br>• விடுகதை<br>• பழமொழி | • அவதானமாகக் கேட்டுக் கிரகித்து எழுதுவார்<br>• உரிய வரிவடிவில் எழுதுவார்.<br>• நிறுத்தக் குறிகளைப் பொருத்தமாகக் கையாண்டு எழுதுவார்.<br>• சுயமாக ஆக்கங்களை எழுதுவார்.<br>• ஆக்கங்களின் தனித்துவத்தை அறிந்து, அதற்கேற்ப எழுதுவார். | 02 |
| 9.0 வாசித்துக் கிரகித்த - வற்றைத் தெளிவாக எழுதுவார். | 9.1 வாசித்த விடயம் தொடர்பான கருத்துக்களை உள்வாங்கி எழுதுவார். | • செய்யுள்<br>• கதை<br>• கடிதம்<br>• உரைச்சித்திரம்<br>• கட்டுரை<br>• உரையாடல்<br>• நாடகம்<br>• நாட்டார் பாடல் | • கேட்கப்படும் வினாக்களுக்கு விடை எழுதுவார்.<br>• பிரதான கருத்தை இனங்கண்டு எழுதுவார்.<br>• துணைக் கருத்துக்களை எழுதுவார்.<br>• சுருக்கியும் விரித்தும் எழுதுவார்.<br>• பாத்திர இயல்புகளை அறிந்து, விளங்கி எழுதுவார்.<br>• படைப்புக்களின் சிறப்புக்களை இனங்கண்டு எழுதுவார்.<br>• வாசித்த விடயம் தொடர்பான அபிப்பிராயத்தை எழுதுவார்.<br>• ஆக்கங்களை விமர்சித்து எழுதுவார். | 18 |


xvii

| Nju;r;rp | Nju;r;rp kl;lk; | tpla cs;slf;fk; | fw;ww; NgWfs; | ghl Ntis |
|---|---|---|---|---|
| 10.0 எழுத்தாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி, வழுவின்றி எழுதுவார். | 10.1 வழுக்களின்றி, வாக்கிய அமைதியோடு எழுதுவார். | • வாக்கியம் | • எழுவாய், பயனிலை முதலிய உறுப்புக்கள் அமைய வாக்கியம் எழுதுவார்.<br>• திணை, பால், எண், இடம், காலம் என்பன இயைபுபட வாக்கியம் எழுதுவார். | 04 |
| | 10.2 கருத்துப் புலப்படுமாறு பந்தி எழுதுவார். | • பந்தி<br>• கட்டுரை<br>• பத்திரிகைச் செய்தி | • பந்தி அமைக்கும் முறையை அறிந்து கருத்துப் புலப்பட, பந்தியை எழுதுவார்.<br>- தலைமைப் பொருளை எழுதுதல்<br>- துணைக் கருத்துக்களை எழுதுதல்<br>- கருத்துத் தொடர்புடன் எழுதுதல்<br>- வாக்கிய இயைபுடன் எழுதுதல்<br>- ஒழுங்கு முறையில் எழுதுதல்<br>- நேர்த்தியாக எழுதுதல்<br>- நிறுத்தக் குறியீடுகள் இடுதல்<br>- எடுத்துக்காட்டு, மேற்கோள் என்பவற்றைப் பயன் படுத்தல்<br>- நியாயம் காட்டுதல்<br>- நிகழ்ச்சியை விரித்துரைத்தல் | 02 |

| Nju;r;rp | Nju;r;rp kl;lk; | tpla cs;slf;fk; | fw;ww; NgWfs; | ghl Ntis |
|---|---|---|---|---|
| 11.0 படைப்புக்களை வாசித்த அனுபவங்களின் ஊடாக, படைப்பாக்க நுட்பங்களை அறிந்து, ஆக்கங்களைச் சுயமாக எழுதுவார். | 11.1 பல்வேறு ஆக்கங் களை எழுதுவார். | • செய்யுள் / கவிதை<br>• கட்டுரை<br>• கதை<br>• உரையாடல்<br>• உரைச்சித்திரம்<br>• நாடகம் | • ஆக்கங்களின் வடிவம், அமைப்பு, தலைப்பு முதலானவை பொருத்தமுற எழுதுவார்.<br>• அவதானிப்புகள், அனுபவங்கள், சிந்தனைகளை உள்வாங்கி, எழுதுவார்.<br>• பந்திகளைத் தொடர்புபட அமைத்து, தெளிவாக எழுதுவார்.<br>• பொருத்தமான மொழிநடையில் தெளிவாக எழுதுவார்.<br>• வாசிப்போருக்குப் புரியும் வகையில் எழுதுவார். | 04 |
| | 11.2 நடைமுறைத் தேவைகளுக்காக எழுதுவார். | • உரைநடை ஆக்கம்<br>- கடிதம்<br>- அழைப்பிதழ்<br>- விளம்பரம்<br>- அறிக்கை<br>- துண்டுப்பிரசுரம்<br>• செய்தி<br>- பத்திரிகை<br>- வானொலி<br>- தொலைக்காட்சி<br>• விமர்சனம்<br>• நேர்காணல் | • அமைப்பு பொருத்தமாக இருக்குமாறு எழுதுவார்.<br>• தலைப்புக்கு / கேட்கப்பட்ட விடயத்துக்குப் பொருத்தமாக எழுதுவார்.<br>• விடய உள்ளடக்கத்தைத் தெளிவாகவும் தர்க்கரீதியாகவும் நேர்த்தியாகவும் எழுதுவார்.<br>• இலக்கண வழுவின்றி எழுதுவார்.<br>• உணர்வைத் தூண்டும் வகையில் கவர்ச்சிகரமாக எழுதுவார்.<br>• எழுத்து நாகரிகத்துடன் எழுதுவார்.<br>• விமர்சன ரீதியாக எழுதுவார்.<br>. | 13 |

nkhopj;jpwd;

| Nju;r;rp | Nju;r;rp kl;lk; | tpla cs;slf;fk; | fw;ww; NgWfs; | ghl Ntis |
|---|---|---|---|---|
| 12.0 சொற் களஞ்சியத்தை விருத்திசெய்து, பொருத்தமான வகையில் பிரயோகிப்பார். | 12.1 சொற்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து, செம்மை - யாகப் பிரயோகிப்பார். | • செய்யுள் / கவிதை<br>• உரைநடை<br>- கட்டுரை<br>- கதை<br>- நாடகம் | • சொற்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து, பிரயோகிப்பார்.<br>- கலைச்சொற்கள்<br>- பிரதேச வழக்குச் சொற்கள்<br>• அரும்பதங்களை விளக்கி எழுதுவார்.<br>• முன்னொட்டு, பின்னொட்டுக்களைப் பிரயோகித்துச் சொற்களை ஆக்குவார்.<br>• சொற்களை, ஆக்கங்களில் செம்மையாகப் பிரயோகிப்பார். | 06 |
| | 12.2 சொற்றொடர்களின் பொருளையும் வகையையும் அறிந்து, செம்மையாகப் பிரயோகிப்பார். | • செய்யுள்<br>• உரைநடை | • சொற்றொடர்களின் இயல்பு, வகை, பொருள் என்பவற்றை அறிந்து, பிரயோகிப்பார்.<br>- அருஞ்சொற்றொடர்<br>- அடுக்கிடுக்குத் தொடர்<br>- தொகைச் சொற்கள் | 15 |
| 13.0 மொழியின் இலக்கணத்தை அறிந்து, அதற்கமைய மொழியைச் செம்மையாகக் கையாள்வார். | 13.1 எழுத்துக்களின் ஒலிப்பு முறை - யையும் வகை, தொகையையும் அறிந்து பயன் - படுத்துவார். | • செய்யுள்<br>• உரைநடை | • எழுத்துக்களின் ஒலிப்பு முறையை அறிந்து பயன்படுத்துவார்.<br>- மாற்றொலி<br>• எழுத்துக்களின் வகை, தொகையை அறிந்து பயன்படுத்துவார்.<br>- முதலெழுத்து - சார்பெழுத்து<br>- சுட்டெழுத்துக்கள் - இன எழுத்து<br>- வினாவெழுத்து - அளபெடை<br>- முதனிலை - இறுதி நிலை<br>- போலி - மெய்ம்மயக்கம்<br>• எழுத்துக்களைச் செம்மையாகப் பயன்படுத்துவார். | 12 |

| Nju;r;rp | Nju;r;rp kl;lk; | tpla cs;slf;fk; | fw;ww; NgWfs; | ghl Ntis |
|---|---|---|---|---|
| | 13.2 சொற்களின் வகையையும் இயல்பையும் அறிந்து, அவற்றைப் பிரயோகிப்பார். | • செய்யுள்<br>• உரைநடை | • சொற்களின் வகையை அறிந்து பிரயோகிப்பார்.<br>• சொற்களின் இயல்பை அறிந்து பிரயோகிப்பார்.<br>• சொற்களை அறிந்து, அவற்றைப் பொருத்தமுறப் பயன் - படுத்துவார்.<br>• பெயர்ச்சொற்களை இனங்கண்டு, அவற்றைப் பொருத்தமுறப் பயன்படுத்துவார்.<br>- மூவிடப் பெயர் - காரணப் பெயர்<br>- இடுகுறிப் பெயர் - காரண இடுகுறிப் பெயர்<br>• வினைச்சொற்களை இனங்கண்டு பிரயோகிப்பார்.<br>- உடன்பாட்டு வினை - எதிர்மறை வினை<br>- செய்வினை - செயப்பாட்டு வினை<br>- ஏவல் வினை - வியங்கோள் வினை<br>- இணைப்பிடைச் சொல்<br>• இடைச் சொல்லை இனங்கண்டு பிரயோகிப்பார்.<br>• இயல்புவழக்கு, தகுதிவழக்கு என்பவற்றை இனங்கண்டு, பிரயோகிப்பார். | 07 |
| | 13.3 சொற்றொடர், வாக் - கியம் என்பவற்றின் வகையையும் அவற் - றின் இயல்பையும் அறிந்து, அவற்றைப் பிரயோகிப்பார். | • பொருத்தமான உரைநடை<br>- உரைச்சித்திரம்<br>- உரையாடல் | • சொற்றொடர், வாக்கியங்கள் என்பவற்றின் வகையையும் இயல்பை - யும் அறிந்து, அவற்றைப் பிரயோகிப்பார்.<br>• வாக்கியங்களைச் செம்மையான அமைப்பில் பிரயோகிப்பார்.<br>- எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்<br>- திணை, பால், எண், இடம், காலம்<br>• வேற்றுமை இயல்பை அறிந்து பிரயோகிப்பார்.<br>• அடைமொழிகளின் வகைகளை அறிந்து பிரயோகிப்பார்.<br>• வாக்கிய வகைகளை அறிந்து பிரயோகிப்பார்.<br>- கூற்று<br>- வினா<br>- மெய்ப்பாடு<br>- ஏவல்<br>- வியங்கோள் | 13 |

# முதலாந் தவணை


| இல | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | பக்கம் |
|---|---|---|---|---|
| 01 | 5.0 | 5.1 | பேதைமை | 02-03 |
| 02 | 1.0 | 1.1 | மாற்றொலி | 04 |
| 03 | 12.0 | 12.1 | கலைச்சொற்கள் | 05-06 |
| 04 | 10.0 | 10.1 | வாக்கியம் அமைத்தல் | 07 |
| 05 | 1.0 | 1.2 | பாவோதல் | 08 |
| 06 | 12.0 | 12.1 | கிளைமொழிகள் | 09-10 |
| 07 | 12.0 | 12.1 | பிறமொழிச் சொற்கள் | 11-13 |
| 08 | 1.0 | 1.3 | சங்கச் செய்யுள் - குறுந்தொகை | 14-15 |
| 09 | 6.0 | 6.2 | கடிதம் எழுதுதல் | 16-18 |
| 10 | 7.0 | 7.1 | சங்கச் செய்யுள் - புறநானூறு | 19-20 |
| 11 | 2.0 | 2.1 | உரையாடல் | 21-22 |
| 12 | 13.0 | 13.1 | முதலெழுத்துக்களும் சார்பெழுத்துக்களும் | 23-24 |
| 13 | 13.0 | 13.1 | இனவெழுத்துக்களும் போலியெழுத்துக்களும் | 25-26 |
| 14 | 8.0 | 8.1 | பந்தி அமைத்தல் | 27-28 |
| 15 | 13.0 | 13.1 | சுட்டெழுத்தும் வினாவெழுத்தும் | 29-30 |
| 16 | 10.0 | 10.2 | கட்டுரை எழுதுதல் | 31-32 |
| 17 | 6.0 | 6.1 | இலட்சியமும் சமநோக்கும் | 33-34 |
| 18 | 13.0 | 13.1 | முதனிலை, இறுதிநிலை எழுத்துக்கள் | 35-36 |
| 19 | 13.0 | 13.1 | இடைநிலை மெய்ம்மயக்கம் | 37-38 |
| 20 | 11.0 | 11.2 | அழைப்பிதழ் | 39 |
| 21 | 13.0 | 13.2 | மூவிடப் பெயர்கள், காரண, இடுகுறி, காரணஇடுகுறிப் பெயர் | 40-42 |
| 22 | 1.0 | 1.4 | கிரகித்துக் கூறல் | 43-44 |
| 23 | 11.0 | 11.2 | பத்திரிகைச் செய்தி | 45-47 |

**தேர்ச்சி** : 5.0 ஆக்கபூர்வமான செயற்றிறனுடைய வாசகராகச் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம்** : 5.1 விடயத்தெளிவோடு வாசிப்புப்பொறிமுறைகளை அனுசரித்து வாசிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : திருக்குறள் (பேதைமை)

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள் :**

- பேதைமை அதிகாரத்தில் இடம் பெறும் குறட்பாக்களை பொருள் விளங்கும் வகையில் சந்தி பிரித்தும் கொண்டு கூட்டியும் வாசிப்பார்.
- குறட்பாக்களில் இடம்பெற்ற அரும்பதங்களுக்குப் பொருளறிந்து வாசிப்பார்.
- குறட்பாக்களின் பொருளைத் தெளிவாகக் கூறுவார்.
- பேதைமை என்னும் அதிகாரத்தில் கூறப்படும் கருத்துக்களைத் தொகுத்துக் கூறுவார்.
- குறட்பாக்களில் கையாளப்பட்டுள்ள உத்திகள், அணிகளை இனங்கண்டு ஆக்கத்திறனை மேம்படுத்தும் வகையில் அவற்றைத் தமது ஆக்கங்களில் கையாள்வார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- திருக்குறள் நூலின் அமைப்பு, தனித்துவமும் சிறப்பும், நூலின் பிரதான பாடுபொருள், படைப்புத்திறன் என்பன பற்றிக் கலந்துரையாடிப் பாடம் தொடங்கும் வகையில் திட்டமிடல்.
- பேதைமை எனும் அதிகாரத்தை அறிமுகம் செய்தல்.
- குறளைக் காட்சிப்படுத்திக் கற்பித்தல்.
- செய்யுள் வாசிக்கும் பொறிமுறைகளை அனுசரித்து வாசிக்கச் செய்தல், (சந்தி பிரித்து, கொண்டு கூட்டிப் பொருள் விளங்க வாசிக்கச் செய்தல்).
- குறட்பாக்களின் பொருளை அறிய வைத்துப் பொருட்சிறப்பினைக் கலந்துரையாட வைக்கும் வகையிலும் குழுக்களை அமைத்துக் கலந்துரையாடல் மூலம் கற்றல் நடைபெறும் வகையிலும் திட்டமிடல்.
- குறள்கள் கூறும் விடயத்தோடு, மாணவர்களின் அனுபவத்துக்கு உட்பட்ட விடயங்களைத் தொடர்புபடுத்திக் கலந்துரையாடச் செய்து கூறச் செய்தல்.

**முதன்மைப் பதங்கள் (key words), எண்ணக்கரு:**

- திருக்குறள் சங்கமருவிய கால அறநூல் (பதினெண் கீழ்க்கணக்கு)
- அறம், பொருள், இன்பம் - கட்டமைப்பு
- வெண்பா யாப்பு – சொல்லாட்சித்திறன் - காலத்தை வென்ற படைப்பாற்றலும் நூலும்.
- பேதைமை என்பதன் விளக்கம்
- ‘‘பேதைமை’’அதிகார விளக்கம். பேதைமை என்பது யாதும் அறியாமை – என்று பொருள்படும்.

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- பாடநூல்
- சொல்லட்டைகள், பின்னிணைப்பு
- எழுது கருவிகள்

## கணிப்பீடு, மதிப்பீடு தொடர்பான ஆலோசனைகள் :

- திருக்குறள் நூல் அமைப்பு, அது கூறும் பொருள் என்பன பற்றிக் கூறுவார்.
- பேதைமை அதிகாரம் பற்றிச் சுருக்கமாக விளக்குவார்.
- குறட்பாக்களைச் சந்தி பிரித்துப் பொருள் விளங்க வாசிப்பார் / எழுதுவார்.
- குறட்பாக்களுக்குப் பொருள் கூறுவார் / எழுதுவார்.
- குறட்பாக்களின் நயத்தைக் கூறுவார்.
- திருக்குறளின் படைப்பாக்க நுட்பம் பற்றிக் கருத்துக் கூறுவார்.
- திருக்குறளின் கருத்தை உள்வாங்கி, வேறு வடிவங்களில் அவற்றை வெளிப்படுத்துவார் ( பேச்சு, கட்டுரை).

**தேர்ச்சி** : 1.0 பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்குமேற்ப, வினைத்திறனுடன் கேட்டுக் கிரகித்துத் துலங்குவார்.

**தேர்ச்சி மட்டம்** : 1.1 எழுத்துக்களின் ஒலிப்புக்கேற்பச் சொற்களைச் செம்மையாக உச்சரிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : மாற்றொலி

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள் :**

- எழுத்துக்களின் ஒலிப்புமுறையை அறிந்து பயன்படுத்துவார்.
- மாற்றொலி என்றால் என்ன என்று கூறுவார்.
- மாற்றொலிகளை இனங்கண்டு பயன்படுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- பாடத்தைப் பொருத்தமான முறையில் திட்டமிட்டுச் செயற்படுத்தல்.
- மாற்றொலிகளை உடைய சொற்களைக் கொண்ட சிறிய பந்தியை அல்லது வாக்கியங்களைக் காட்சிப்படுத்தி வாசிக்கச் செய்து மாற்றொலிகளை இனங்காணச் செய்தல்.
- இனங்காணப்பட்ட மாற்றொலிகளைப் பற்றிக் கலந்துரையாடல்.
- மாற்றொலிகளுக்கேற்பச் சொற்களைப் பாகுபடுத்தி, அட்டவணைப்படுத்தச் செய்தல்.

**முதன்மைப் பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- வல்லின மெய்கள் சொற்களில் அவற்றின் அமைவிடத்தைப் பொறுத்து வெவ்வேறான ஒலிப்புக்களை உடையவனவாக இருக்கும். இதையே மாற்றொலி என்பர்.
  உ – ம் : பகல், கப்பல், தங்கம் - இம்மூன்று சொற்களிலும் இடம்பெற்ற ‘‘க’’ ஒரேமாதிரியான ஒலிப்பைக் கொண்டு காணப்படவில்லை.
- இதேபோல ‘‘ச’’ வும் வேறுபட்டொலிக்கும்.
  உ – ம் : பச்சை, பசை

இவ்வாறாக க, ச, ட, த, ப, ற ஆகிய வல்லினங்கள் இடம் நோக்கி வேறுபட்டொலிப்பதை விளக்கி மாணவருடன் கலந்துரையாடல்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- எழுதுதாள்
- எழுதுகருவிகள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- மாற்றொலி என்பதை வரைவிலக்கணப்படுத்துவார்.
- மாற்றொலிகளை ஒலித்துக் காட்டுவார்.
- கொடுக்கப்படும் சொற்களை அவற்றின் ஒலிப்புக்கேற்ப வேறுபடுத்திக் காட்டுவார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | : | 12.0 | சொற்களஞ்சியத்தை விருத்திசெய்து, பொருத்தமான வகையில் பிரயோகிப்பார். |
| **தேர்ச்சி மட்டம்** | : | 12.1 | சொற்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து செம்மையாகப் பிரயோகிப்பார். |
| **விடய உள்ளடக்கம்** | : | | கலைச்சொற்கள் |
| **பாடவேளை** | : | 01 | |
| **கற்றற் பேறுகள்** | : | | |

- கலைச்சொற்கள் என்றால் என்ன என்பதற்குச் சுருக்கமான விளக்கத்தை முன்வைப்பார்.
- பல்வேறு துறைகளையும் சார்ந்த கலைச்சொற்களை அறிந்து பொருத்தமாகப் பிரயோகிப்பார். (விஞ்ஞானம், இலக்கியம், பொருளாதாரம், தொடர்பாடல், கல்வித்துறை).
- கலைச்சொற்களின் முக்கியத்துவம் பற்றிக் கலந்துரையாடுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- பொருத்தமான பாடப்பிரவேசம்.
- பல்வேறு துறைகளையும் சார்ந்த கலைச்சொற்களை மாணவர்களுக்குக் காட்சிப்படுத்தல்.
- பொதுவாகக் கொடுக்கப்படுகின்ற கலைச்சொற்களைத் துறை ரீதியாகப் பிரிக்கும்படி கூறுதல்.
- கலைச்சொற்களின் பொருளைத் தெளிவுற அறியும்படி விளக்கமளித்தல்.
- கொடுக்கப்படும் இலக்கியப் பகுதிகளில் இடம்பெற்றுள்ள கலைச்சொற்களை இனங்காணச் செய்தல்.
- கலைச்சொற்களை ஏற்ற வகையில் பொருத்தமாகக் கையாள்வதற்கு வழிகாட்டுதல்.

**முதன்மைப் பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- பல்வேறு துறைகளின் அபரிமிதமான வளர்ச்சி காரணமாக உலக மொழிகள் பலவற்றிலும் புதிய சொற்கள் பெருகிக் கொண்டே போகின்றன. இவ்வாறு நவீன சொற்களின் தோற்றம், அவற்றின் பொருள், பயன்பாடு என்பன பற்றியதே கலைச்சொற்கள் பற்றிய துறையாகும்.
- கலைச்சொற்களின் பாகுபாடும் அவற்றின் பொருளும்.

1. **விஞ்ஞானத் துறை**

| | | |
|---|---|---|
| Rocket | - | ஏவுகணை |
| Sattlelight | - | செய்ம்மதி |
| Bio Technology | - | உயிர்த் தொழில்நுட்பம் |
| Biology | - | உயிரியல் |
| Black Hole | - | கருந்துளை |
| Generator | - | மின்பிறப்பாக்கி |
| Discovery | - | கண்டுபிடிப்பு |

| | | |
|---|---|---|
| Green house effect | - | பச்சை வீட்டு விளைவு |
| Ultra violet radiation | - | புறஊதாக் கதிர்வீச்சு |
| Vibrator | - | அதிரி |
| Infra red rays | - | அகச் சிவப்புக் கதிர்கள் |
| Species | - | இனம் |

**2.தொடர்பாடல் துறை**

| | | |
|---|---|---|
| Internet | - | இணையம் |
| World Wide Web | - | வையக விரிவு வலை |
| Web site | - | வலைத் தளம் |
| E-mail | - | மின்னஞ்சல் |
| Digital | - | எண்மானம் |
| Software | - | மென்பொருள் |
| Hardware | - | வன்பொருள் |
| Compact Disk (CD) | - | இறுவட்டு |

**3.இலக்கியத் துறை**

| | | |
|---|---|---|
| Critism | - | திறனாய்வு / விமர்சனம் |
| Cartoon | - | கேலிச்சித்திரம் |

**4.பொருளாதாரம்**

| | | |
|---|---|---|
| Budjet | - | பாதீடு |
| Value | - | பெறுமதி |
| Demand | - | கேள்வி |

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- எழுதுதாள்
- எழுதுகருவிகள்

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- கலைச்சொற்கள் பற்றி விளக்கிக் கூறுவார்.
- துறைசார்ந்த கலைச்சொற்களை வேறுபடுத்துவார்.
- கலைச்சொற்களைப் பொருத்தமாகக் கையாள்வார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | : | 10.0 | எழுத்தாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி வழுவின்றி எழுதுவார். |
| **தேர்ச்சி மட்டம்** | : | 10.1 | வழுக்களின்றி, வாக்கிய அமைதியோடு எழுதுவார். |
| **விடய உள்ளடக்கம்** | : | | வாக்கியம் அமைத்தல் |
| **பாடவேளை** | : | 04 | |

**கற்றற் பேறுகள் :**

- வாக்கிய உறுப்புக்களை இனங்கண்டு கூறுவார்.
- வாக்கிய உறுப்புக்கள் இயைபுபடுமாறு வாக்கியங்களை எழுதுவார்.
- சொற்களின் பொருள் புலப்படுமாறு நேர்த்தியுடன் வாக்கியங்கள் எழுதுவார்.
- வாக்கியங்களை எழுத்துப் பிழை, சொற்பிழையின்றி எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- வாக்கியம் ஒன்றைக் காட்சிப்படுத்திக் கலந்துரையாடுவதன் மூலம் சொற்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்ந்து பொருள் உணர்த்துவதனை இனங்காட்டல் (பாடப்பிரவேசமாக அமையும்)
- மாதிரி வாக்கியங்களை வழங்கி அவற்றின் உறுப்புக்களை இனங்காணச் செய்வதன் மூலம் கலந்துரையாடி வாக்கிய உறுப்புக்கள் தொடர்பில் விளக்கல்.
- திருக்குறள் (பேதைமை) பாக்களின் பொருள்களை வாக்கியமாக எழுத வழிப்படுத்தல்.
- ஒழுங்கு மாறியுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியங்களாக எழுத உதவுதல்.
- கலைச்சொற்கள் சிலவற்றை வழங்கி அவற்றைப் பொருள் புலப்படுமாறு வாக்கியங்களில் அமைத்து எழுத நெறிப்படுத்தல்.
- வாக்கியங்களை வழுக்களின்றி (எழுத்து, சொல்) எழுத வழிகாட்டல்.

**முதன்மைப் பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- ஒரு சொல்லோ, ஒன்றிற்கு மேற்பட்ட சொற்களோ முற்றுப்பெற்று பொருளுணர்த்தும் வகையில் அமைவு பெறுதல்.
- வாக்கியம் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள், அடைமொழிகள் முதலியவற்றை உறுப்புக்களாகக் கொண்டிருத்தல்.
- ஒரு வாக்கியத்தின் எழுவாய், பயனிலை முதலிய உறுப்புக்கள் திணை, பால், எண், இடம் என்பவற்றில் இயைபுபட்டிருத்தல்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- வாக்கிய அட்டைகள்
- திருக்குறள் (பேதைமை)
- எழுது தாள்கள்
- எழுது கருவிகள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- வாக்கிய உறுப்புக்களை இனங்கண்டு இயைபுபட எழுதுவார்.
- சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியமாக எழுதுவார்.
- சொற்களின் பொருள் புலப்படத்தக்க வகையில் வாக்கியங்கள் எழுதுவார்.
- எழுத்துப் பிழைகள், சொற்பிழைகள் இன்றி வாக்கியங்கள் எழுதுவார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | : | 1.0 | பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ப வினைத்திறனுடன் கேட்டுக் கிரகித்துத் துலங்குவார். |
| **தேர்ச்சி மட்டம்** | : | 1.2 | பாடலை / செய்யுளைப் பொருளுணர்ந்து சொல்லுவார்/ ஓதுவார். |
| **விடய உள்ளடக்கம்** | : | | பாவோதல் |
| **பாடவேளை** | : | 02 | |

**கற்றற் பேறுகள் :**

- செய்யுளை மனனம் செய்து கூறுவார்.
- செய்யுளை உச்சரிப்புத் தெளிவுடன் ஓதுவார்.
- செய்யுளைச் சந்திபிரித்து ஓதுவார்.
- செய்யுளைக் கொண்டுகூட்டிப் பொருள் விளங்க ஓதுவார்.
- செய்யுளை உணர்ச்சி வெளிப்பாட்டுடன் ஓதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- திருக்குறள் - பேதைமை அதிகாரம் பற்றி அறிமுகம் செய்தல்.
- மாணவர்கள் கற்ற, திருக்குறள் பேதைமை அதிகாரத்திலுள்ள குறள்களை ஓதுதல்.
- செய்யுட் பகுதியை மனனம் செய்ய நெறிப்படுத்தல்.
- சந்திபிரித்தல், கொண்டுகூட்டல் பற்றி விளக்குதல்.
- செய்யுளைச் சந்திபிரிக்கவும், கொண்டுகூட்டவும் வழிப்படுத்தல்.
- செய்யுட்பகுதியின் பொருள் பற்றிக்கலந்துரையாடல்.
- பொருளறிந்து, உணர்ச்சி வெளிப்பாட்டுடனும் ஓசையுடனும் ஓத நெறிப்படுத்தல்.
- பொருத்தமான மதிப்பீடு, கணிப்பீடுகளைத் திட்டமிட்டுச் செயற்படுத்தல்.

**முதன்மைப் பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- தரப்பட்ட செய்யுட்பகுதியின் பொருளை விளங்கத்தக்க வகையில் இசையுடன் ஓதுவதே பாஓதுதலாகும்.
- செய்யுட்பகுதியை உள்ளவாறே வாசித்தல்.
- சந்திபிரித்து வாசித்தல்
- இசையுடன் ஓதுதல்
- பொருளைத் தெளிவுபடுத்தல்

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பேதைமை அதிகாரத்தின் பிரதி
- எழுது கருவிகள்
- எழுது தாள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- செய்யுளை மனனம் செய்து தெளிவாக ஓதுவார்.
- செய்யுளைச் சந்திபிரித்தும் கொண்டுகூட்டியும் ஓதிக்காட்டுவார்.
- செய்யுளை உணர்ச்சி வெளிப்பாட்டுடன் ஓதுவார்.
- செய்யுளின் பொருளைச் சொந்த மொழிநடையில் கூறுவார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | : | 12.0 | சொற்களஞ்சியத்தை விருத்தி செய்து, பொருத்தமான வகையில் பிரயோகிப்பார். |
| **தேர்ச்சி மட்டம்** | : | 12.1 | சொற்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து, செம்மையாகப் பிரயோகிப்பார். |
| **விடய உள்ளடக்கம்** | : | | கிளை மொழிகள் |
| **பாடவேளை** | : | 01 | |

**கற்றற் பேறுகள் :**

- பிரதேசத்திற்குப் பிரதேசம், சமூகத்திற்குச் சமூகம் தனித்துவமான சொற்கள் வழக்கில் இருப்பதனை இனங்கண்டு கூறுவார்.
- பிரதேசத்திற்குரிய / சமூகங்களுக்குரிய சிறப்பான வழக்குகளை அறிந்து கூறுவார்.
- கிளைமொழிகளுக்கான பொருளை விளக்குவார்.
- தேவைகளுக்கேற்பப் பொருத்தமாகக் கிளைமொழிகளைப் பிரயோகிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- இலங்கையின் பல்வேறு பிரதேசங்களிலும் வேறுபட்ட வகையில் மக்கள் உரையாடுவது தொடர்பில் கலந்துரையாடல்.
- கிளைமொழிகள் கையாளப்பட்டுள்ள ஆக்க இலக்கியமொன்றின் பகுதியினை வழங்கல்.
- மாணவர்கள் மேற்படி பகுதியிலிருந்து கிளைமொழிகளை இனங்கண்டு கூற வழிப்படுத்தல்.
- கிளைமொழிகளை அவற்றின் வகை அறிந்து பட்டியற்படுத்த வழிகாட்டல்.
- கிளைமொழிகளின் இயல்பு, முக்கியத்துவம் பற்றி விளக்குதல்.

**முதன்மைப் பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- ஒரேமொழியைப் பேசும் வேறுபட்ட மக்கள் பிரிவினரால் தமக்கே உரித்தாகக் கையாளப்படும் சிறப்பான சொற்களையே கிளைமொழிகள் என்கிறோம்.
- கிளைமொழிகள் இரண்டு வகைப்படும்.
    - பிரதேசக் கிளைமொழிகள்
    - சமூகக் கிளைமொழிகள்
- குறித்த பிரதேசத்துக்குரியதாக பயன்படுத்தப்படும் சிறப்பான சொற்கள் பிரதேசக் கிளைமொழிகள்.

உ-ம் : ▪ வடக்குக் கிளைமொழிகள்

- செத்தை
- முத்தம்

- கிழக்குக் கிளைமொழிகள்
    - மறுகா
    - கிறுகி
- மலையகக் கிளைமொழிகள்
    - அங்கிட்டு
    - அப்புறம்
- தெற்குக் கிளைமொழிகள்
    - ஆப்ப (அப்பம்)
    - பள்ளம் (கீழே)

- குறித்த சமூகத்தவர்கள் பயன்படுத்தும் விசேடமான சொற்களே சமூகக் கிளைமொழிகள் எனப்படும்.
    - விவசாயக் கிளைமொழிகள்
        - நடையன்
        - குல்லம்
    - மீனவக் கிளைமொழிகள்
        - கரைவலை
        - மண்டா
- கிளைமொழிகள் குறித்த பிரதேசங்களினதும் குறித்த சமூகங்களினதும் தனித்துவத்தை அடையாளப்படுத்துவனவாக அமைகின்றன.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- ஆக்க இலக்கியப் பகுதி
- எழுதுதாள்கள்
- சொல்லட்டைகள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- கிளைமொழிகளின் வகைகளை இனங்கண்டு கூறுவார்.
- பிரதேசக் கிளைமொழிகளை வகைப்படுத்திப் பட்டியலிடுவார்.
- சமூகக் கிளைமொழிகளை வகைப்படுத்திப் பட்டியலிடுவார்.
- கிளைமொழிகளின் பொருளறிந்து கூறுவார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | : | 12.0 | சொற்களஞ்சியத்தை விருத்தி செய்து பொருத்தமான வகையில் பிரயோகிப்பார். |
| **தேர்ச்சி மட்டம்** | : | 12.1 | சொற்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து செம்மையாகப் பிரயோகிப்பார். |
| **விடய உள்ளடக்கம்** | : | | பிறமொழிச் சொற்கள் |
| **பாடவேளை** | : | 02 | |

**கற்றற் பேறுகள் :**

- எமது வழக்கில் பிறமொழிச் சொற்கள் பயன்படுத்தப்படுவதனை அறிந்து கூறுவார்.
- வழக்கிலுள்ள பிறமொழிச் சொற்கள் எந்தெந்த மொழிக்குரியன என்பதனை இனங்கண்டு கூறுவார்.
- சொற்களஞ்சியத்தினை விருத்தி செய்து பொருத்தமாகப் பிரயோகிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- பொருத்தமான பாடப்பிரவேசத்துடன் பாடத்தினை ஆரம்பித்தல்.
- தமிழ் மொழியோடு பிறமொழிச்சொற்கள் பல கலந்து கையாளப்படுவது தொடர்பில் கலந்துரையாடல்.
- பிறமொழிச்சொற்கள் அடங்கிய ஒரு பகுதியினைச் செவிமடுக்கச் செய்து அதிலிருந்து பிறமொழிச்சொற்களை இனங்காண வழிப்படுத்துதல்.
- மூல மொழிகளின் அடிப்படையில் பிறமொழிச்சொற்களை வகைப்படுத்த வழிப்படுத்தல்

**முதன்மைப் பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- பல்வேறு மொழிச்சொற்களும் தமிழ் மொழியோடு கலந்து பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றினைப் பிறமொழிச் சொற்கள் என்கிறோம். (திசைச் சொற்கள் எனவும் கூறுவர்.)
    - போர்த்துக்கேய மொழிச் சொற்கள்

உ-ம் -
- அச்சாறு
- அலவாங்கு
- இறாத்தல்
- ஏலம்
- கஜு
- கதிரை

- ஒல்லாந்து மொழிச் சொற்கள்
    - இலாச்சி
    - கக்கூசு
    - சாக்கு
    - தோம்பு
    - நொத்தாரிசு
    - துட்டு

- மராட்டி மொழிச் சொற்கள்
    - அட்டவணை
    - சாம்பார்
    - சேமியா
    - பட்டாணி
    - வங்கி
    - ஜாடி

- அரபு மொழிச் சொற்கள்
    - சைத்தான்
    - அத்தர்
    - கயிறு
    - தகவல்
    - வசூல்
    - மசூதி

- பாரசீக மொழிச் சொற்கள்
    - சிப்பந்தி
    - துப்பாக்கி
    - மைதானம்
    - சால்வை
    - மேஸ்திரி
    - லுங்கி

- இந்துஸ்தானி மொழிச் சொற்கள்
    - அசல் (முதல் / மூலம்)
    - இலாகா (திணைக்களம்)
    - இனாம் (நன்கொடை)
    - கசாப்புக்கடை (இறைச்சி விற்குமிடம்)
    - கச்சேரி (அரசாங்கச் செயலகம்)
    - சபாஷ் (மிக நன்று)

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- ஒலி நாடா / இறுவட்டு
- எழுதுதாள்
- சொல்லட்டைகள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- பிறமொழிச் சொற்களை அறிந்து கூறுவார்.
- பிறமொழிச் சொற்களின் பொருளை இனங்கண்டு கூறுவார்.
- பிறமொழிச் சொற்களைப் பொருத்தமாகப் பாகுபடுத்திப் பிரயோகிப்பார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | : | 1.0 | பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ப வினைத்திறனுடன் கேட்டுக் கிரகித்துத் துலங்குவார். |
| **தேர்ச்சி மட்டம்** | : | 1.3 | கேட்டுக் கிரகித்தவற்றைச் செம்மையாகக் கூறுவார். |
| **விடய உள்ளடக்கம்** | : | | சங்கச் செய்யுள் - குறுந்தொகை<br>தச்சன் செய்த சிறுமாவையம்.. |
| **பாடவேளை** | : | 01 | |

**கற்றற் பேறுகள் :**

- அரும்பதங்களையும் பொருளையும் கூறுவார்.
- செய்யுளின் பிரதான கருத்தை அறிந்து கூறுவார்.
- துணைக்கருத்துக்களை இனங்கண்டு கூறுவார்.
- நயந்த பகுதிகளைக் கூறுவார்.
- குறித்த விடயம் தொடர்பான தமது கருத்துக்களை முன்வைப்பார்.
- சங்க இலக்கியத்தில் குறுந்தொகை பற்றி விளக்கிக் கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- சங்கச் செய்யுட்பகுதி ஒன்றையும் நவீன கவிதைப்பகுதி ஒன்றையும் காட்சிப்படுத்தி இரண்டுக்குமிடையேயான வேறுபாடுகள் குறித்துக் கலந்துரையாடுதல்.
- சங்க காலத்தின் இலக்கியப் பொருள் மரபு பற்றிச் சிறியதோர் அறிமுகம் செய்தல்.
- குறுந்தொகை பற்றி அறிமுகம் செய்தல்.
- தும்பிசேர் கீரன் பற்றி அறிமுகம் செய்தல்
- செய்யுளின் திணை, துறையை விளக்குதல்.
- செய்யுளின் பொருளைக் கூறுதல்.
- அரும்பதங்களின் பொருள் கூறுதல்.
- அணிகளை விளக்குதல்.

**முதன்மைப் பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- தமிழிலக்கிய வரலாற்றில் முதற் காலம் சங்க காலம்.
- பொருள் மரபு அகம் (காதல்) புறம் (போர், வீரம்…) என வகுக்கப்பட்டிருத்தல்.
- அகத்திணை கூறுவது குறுந்தொகை.
- 4 அடி சிற்றெல்லையும் 8 - 9 அடி பேரெல்லையும் உடைய பாடல்கள்.
- ஏறத்தாழ 250 புலவர்களாற் பாடப்பட்டிருத்தல்.
- குறித்த பாடலை தும்பிசேர் கீரன் பாடியிருத்தல்.
- மருத நிலத்துக்குரிய ஊடல் (தலைவன் பரத்தையிடம் செல்வதால் ஏற்படுவது) ஒழுக்கத்தைக் கூறுவது.
- பரத்தையிடம் சென்று வரும் தலைவன் வீட்டினுள்ளே வருவதை மறுக்கும் (வாயில் மறுத்தல்) தோழியின் கூற்றாக அமைதல்.
- உவமை அணி பயன்படல்.

“ஊர்ந்து இன்புறாஅர் ஆயினும்

ஈர்ந்து இன்புறூஉம் இளையோர் போல...”

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- மாதிரிப் பாடல்கள்
- எழுது கருவி
- எழுது தாள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- பாடலின் திணை, துறை, பாடியவர் பெயர் என்பவற்றை அறிந்து கூறுவார்.
- செய்யுளினை சந்தி பிரித்து, கொண்டுகூட்டிக் கூறுவார்.
- பொருளினைச் சொந்த மொழி நடையில் கூறுவார்
- செய்யுளில் இடம்பெற்ற அணியை விளக்குவார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | : | 6.0 | கிரகித்துப் பொருள் உணர்ந்து வாசிப்பார். |
| **தேர்ச்சி மட்டம்** | : | 6.2 | பல்வேறு நோக்கங்களுக்காக வாசிப்பார். |
| **விடய உள்ளடக்கம்** | : | | கடிதம் எழுதுதல் |
| **பாடவேளை** | **:** | 02 | |

**கற்றற் பேறுகள்**

- கடித வகைகளை அறிந்து துலங்குவார்.
- கடித வகைகளை எடுத்துக் கூறி, அவற்றில் தொழில்முறைக் கடிதத்தை வாசித்துக் காட்டுவார்.
- வாசிப்புப் பொறிமுறைகளை அனுசரித்து உரத்து வாசிப்பார்.
- கடிதத்தில் வெளிப்படுத்தப்படும் உட்கருத்துக்களை விளங்கி வாசிப்பார்.
- தொழில்முறைக் கடிதங்களின் அமைப்பை விளங்கி வாசித்துக் கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**


- அன்றாடத் தேவைகளுக்காக எழுதப்பட்ட மாதிரித் தொழில்முறைக் கடிதங்களைக் காட்சிப்படுத்திக் கலந்துரையாடுதல்.
- இக்கடித வடிவங்களைச் சொல்லட்டைகள் மூலம் காட்சிப்படுத்தி வாசிக்கத் தூண்டுதல்.
- வழங்கப்பட்டுள்ள / தயாரிக்கப்பட்ட தொழில்முறைக் கடிதத்தினைப் பொருத்தமான நுட்பமுறைகளைப் பயன்படுத்தி வாசிக்க வழிப்படுத்துதல்.
- இடர்ப்படும் மாணவர்களுக்கு உதவுதல்.
- பொருத்தமான கணிப்பீட்டு, மதிப்பீட்டு நுட்பமுறைகளைப் பயன்படுத்தி வாசிப்புத் திறனை அதிகரிக்க வழிகாட்டுதல்.

**முதன்மைப் பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- கடிதங்களின் பயன்பாடுகள்

  - தொலைவிலுள்ளவர்களுடன் தொடர்பாடல்.
  - அதிகார பூர்வமாக, எழுத்து மூலமாகத் தொடர்பாடல்.
  - கருத்துப் பரிமாற்றம்.
  - ஆக்கத் திறனை வளர்த்தல்.

## தொழில்முறைக் கடித உறுப்புகள் அமைப்பு




1. எழுதுபவர் பெயர், முகவரி, திகதி
2. பெறும் அதிகாரியின் பதவிப்பெயர் / முகவரி
3. விளிப்பு
4. தலைப்பு
5. செய்தி / விடயம்
6. நன்றி
7. ஒப்பம்

**குறிப்பு :-**

தொழில்முறைக் கடிதங்கள் இரண்டு வடிவங்களில் எழுதப்படுகின்றன.

i. நேரடியாக உயர்அதிகாரிகளுக்கு எழுதுவது.

ii. நேரடி உயர் அதிகாரிகள் ஊடாக, உயர் அதிகாரிகளுக்கு எழுதுவது.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- மாதிரிக் கடிதங்கள்
- எழுது தாள்கள், எழுது கருவிகள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- கடித வகைகளை இனங்கண்டு கூறுவார்.
- தொழில்முறைக் கடித உறுப்புகளைத் தனித்தனியாக வாசித்துக் காட்டுவார்.
- தொழில்முறைக் கடிதங்களில் வரும் நிறுத்தக் குறியீடுகளின் பயன்பாட்டை விளங்கி வாசிப்பார்.
- தொழில்முறைக் கடிதத்தின் பிரதான, துணைக்கருத்துக்களை இனங்கண்டு வாசிப்பார்.

**தேர்ச்சி** : 7.0 இரசனைக்காகவும் ஆக்கத்திறனை விருத்தி செய்யும் வகையிலும் வாசிப்பார்.

**தேர்ச்சி மட்டம்** : 7.1 படைப்புக்களை நயந்து வாசிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : சங்கச் செய்யுள் - புறநானூற்றுப் பாடல் இனிநினைந் திரக்க மாகின்று...

**பாடவேளை** : 04

**கற்றற் பேறுகள்:**

- செய்யுள் ஆசிரியர் பற்றி அறிந்து கூறுவார்.
- சங்ககால இலக்கிய மரபு பற்றி விளங்கிக் கூறுவார்.
- செய்யுளைச் சந்தி பிரித்தும் கொண்டுகூட்டியும் வாசிப்பார்.
- படைப்பின் (செய்யுளின்) உள்ளடக்கம் பற்றி அறிந்து வாசிப்பார்.
- படைப்பு நுட்பங்களை (நயம்) உணர்ந்து விளக்குவார்.
- பாத்திர இயல்பினை வேறுபடுத்திக் கூறுவார்.
- ஓசை நயம், அணிப் பயன்பாடு என்பவற்றை விளங்கி வாசிப்பார்.
- விழுமியச் சிந்தனைகளை இனங்கண்டு கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- சங்ககால இலக்கியங்கள், புலவர்கள், இலக்கியப் பண்புகள் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுதல்.
- செய்யுளை சந்திபிரித்து வாசித்துக் காட்டுதல்.
- செய்யுளை ஓசை நயத்துடனும் கொண்டுகூட்டியும் வாசிக்கச் செய்தல்.
- செய்யுளின் பொருள், நயங்கள் போன்றவற்றை இனங்காணச் செய்தல்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி செய்யுள் நயங்கள், அணிகள், சொல்லாட்சிகள் பற்றிய கருத்துக்களை முன்வைக்க வழிகாட்டுதல்.
- செய்யுளில் நயந்து எழுதிய பகுதிகளை முன்வைப்பதற்கு வழிகாட்டுதல்.

**முதன்மைப் பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- இப்புலவர் 'தொடித்தலை விழுத்தன்டுன்றி' என்னும் தொடரை அடிப்படையாகக் கொண்டு பாடலைப் பாடியதால் தொடித்தலை விழுத்தண்டினார் எனப் பெயர் பெற்றுள்ளார்.
- முதியவர் ஒருவர் தம் கடந்த காலத்தின் இளமையை நினைந்து, அது கழிந்தது குறித்தும் வருந்துவதன் மூலம் (இளமை) நிலையாமை பற்றிய உண்மையை இச்செய்யுள் உணர்த்துகிறது.
- பாடலின் பொருள் :

  திணிந்த மணலாற் செய்யப்பட்ட பாவைக்கு (மரம், செடி, கொடிகளில்) பறிக்கப்பட்ட பூக்களைச் சூட்டி, குளிர்ச்சியான குளத்திலே நீராடுகின்ற பெண்களோடு கைகோர்த்து அவர்கள் தழுவக்கூடிய சந்தர்ப்பங்களில் தழுவியும், அவர்களோடு சேர்ந்து தூங்கக் கூடிய வேளைகளில் சேர்ந்து தூங்கியும், இரகசியம் என்பதை அறியாத ஒளிவு மறைவில்லாத சிநேகிதர்களோடு கூடி

(குளத்தின் கரையிலே நிற்கும்) உயர்ந்த மருத மரக்கிளையிலே ஏறி நீர்த்துறையிலே முட்டும்படியாக மிகத்தாழ்ந்து விளங்கும் கிளையிலே நின்றபடி, குளக்கரையிலே நிற்பவர்கள் எல்லாம் அஞ்சும்படியாகவும் குளத்தின் கரைகள் சிதறும்படியாகவும் அந்த ஆழ்ந்த குளத்துக்குள்ளே 'துடும்' என்ற ஓசை எழும்பப் பாய்ந்து நீரினுள் மூழ்கி அக்குளத்தின் அடியிலுள்ள மண்ணை எடுத்து வருகின்ற (பின்விளைவு பற்றிய) அறிவு அற்ற அந்த இளமைக் காலத்தை நினைத்து இரங்கத்தக்கதாகி விட்டதா? அது இப்போது எங்கே உள்ளது?

பூண் போட்ட ஊன்று கோலை ஊன்றியபடி நடுக்கத்தோடு பெரிதும் இருமலுக்கிடையே சில வார்த்தைகளையே பேச முடிகின்ற மிக முதிர்ந்தவர்களாகிவிட்ட எமக்கு இனிமேல் அந்த இளமையை நினைத்து இரங்கவேண்டிய ஒன்றாகிவிட்டதே!

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பாடநூல் - செய்யுட்பகுதி
- அகராதி
- எழுதுதாள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- புலவர் பற்றி அறிந்து கூறுவார்.
- சங்க இலக்கிய வடிவங்கள், பண்புகள் பற்றி அறிந்து கூறுவார்.
- செய்யுளை சந்தி பிரித்தும், கொண்டுகூட்டியும் வாசிப்பார்.
- செய்யுளின் பொருள், நயங்கள் பற்றிக் கூறுவார்.
- செய்யுளின் விழுமியக் கருத்துக்களை இனங்கண்டு கூறுவார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | : | 2.0 | சந்தர்ப்பத்துக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ற வகையில் உரையாடுவார். |
| **தேர்ச்சி மட்டம்** | : | 2.1 | தமது உணர்வுகளும் எண்ணங்களும் தெளிவாகப் புலப்படும் வகையில் உரையாடுவார். |
| **விடய உள்ளடக்கம்** | : | | உரையாடல் |
| **பாடவேளை** | : | 02 | |

**கற்றற் பேறுகள் :**

- குறித்ததொரு விடயம் தொடர்பாகக் கருத்துக்களைத் தெளிவுடன் வெளிப்படுத்துவார்.
- பிறர் கருத்துக்களை அவதானத்துடன் செவிமடுத்து தன் கருத்தினைப் பண்புடன் கூறுவார்.
- விடயங்களைத் தொகுத்தும் பகுத்தும் கூறுவார்.
- விருப்பு, வெறுப்புக்களைப் பொறுமையுடனும் பொருத்தமாகவும் உரையாடல் மூலம் வெளிப்படுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- உரையாடலில் பங்குபற்றவேண்டிய நடைமுறைச் சந்தர்ப்பங்கள் தொடர்பில் கலந்துரையாடல் (பாடப்பிரவேசமாகவும் அமையலாம்).
- உரையாடலில் ஈடுபடும்போது கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடல்.
- மாதிரி உரையாடல் ஒன்றினை ஒலிபரப்பி / ஒளிபரப்பி அவதானிக்கச் செய்தல்
- மாணவர்களைச் சோடிகளாக்கி, விடயங்களை முன்வைத்து, உரையாடலில் ஈடுபட வழிகாட்டல்.
- உரையாடல்களைச் செவிமடுக்கச்செய்து அவை தொடர்பாக மாணவர்கள் கலந்துரையாட உதவுதல்.

**முதன்மைப் பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- இருவர் தமக்கிடையே பேச்சின் மூலம் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளுதல் உரையாடலாகிறது.
- உரையாடலில் ஈடுபடும் பொழுது பின்வரும் விடயங்களைக் கவனத்திற் கொள்ளல் வேண்டும்:
    - கருத்துக்களை தெளிவாக வெளிப்படுத்தல்.

- பொருத்தமான முறையில் தொகுத்தும் பகுத்தும் கூறுதல்.
- உறுதியுடன் பேசுதல்
- பிறர் கருத்துக்களை அக்கறையுடன் செவிமடுத்துப் பரிசீலித்தல்.
- கௌரவத்துடனும் பண்புடனும் உரையாடுதல்.
- விடயப் பொருத்தத்துடன் உரையாடுதல்.

- மாணவர்கள் வகுப்பறையில் உரையாடலில் ஈடுபடுவதற்குரிய மாதிரித் தலைப்புகள்:

  - இணையப் பாவனை.
  - ஆங்கிலமொழிக் கல்வியின் அவசியம்.
  - பத்திரிகைகளில் பிரசுரமாகும் கவிதைகள்.
  - விவசாயத்தில் இரசாயனப் பாவனை.
  - தொலைக்காட்சி நாடகங்கள்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- இறுவட்டு - மாதிரி உரையாடல்
- பல்லூடக எறியி
- டிமைன் தாள்
- எழுது கருவிகள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- கருத்துக்களைத் தெளிவாகக் கூறுவார்.
- பிறர் கருத்துக்களைச் செவிமடுத்துத் தனது கருத்தினை வெளிப்படுத்துவார்.
- பண்புடன் உரையாடுவார்.
- விடயங்களைத் தொகுத்தும் பகுத்தும் கூறுவார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | : | 13.0 | மொழியின் இலக்கணத்தையறிந்து அதற்கு அமைய மொழியை செம்மையாகக் கையாள்வார். |
| **தேர்ச்சி மட்டம்** | : | 13.1 | எழுத்துக்களின் ஒலிப்பு முறையையும் வகை தொகையையும் அறிந்து பயன்படுத்துவார். |
| **விடய உள்ளடக்கம்** | : | | முதலெழுத்துக்களும் சார்பெழுத்துக்களும் |
| **பாடவேளை** | **:** | 04 | |

**கற்றற் பேறுகள் :**

- முதலெழுத்துக்களை இனங்கண்டு விளக்குவார்.
- சார்பெழுத்துக்களின் இயல்பினைக் கூறுவார்.
- உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலுகரம் முதலியவற்றை இனங்கண்டு விபரிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- பாடப்பிரவேசத்தினைப் பொருத்தமாகத் திட்டமிடல்.
- உயிர் எழுத்துக்கள், மெய்யெழுத்துக்கள், உயிர்மெய்யெழுத்துக்கள் என்பவற்றைக் காட்சிப்படுத்தி கலந்துரையாடுவதனூடாக முதலெழுத்து, சார்பெழுத்து வேறுபாட்டினை விளக்கல்.
- முதல் எழுத்துக்களை வகைப்படுத்திக் கலந்துரையாடல்.
- பொருத்தமான உதாரணங்களை முன்வைத்து உயிரளபெடை, ஒற்றளபெடை என்பவற்றை விளக்கல்.
- உயிர், கொக்கு போன்ற சொற்களைக் காட்சிப்படுத்தி உகரத்தின் மாத்திரை அளவு தொடர்பில் கலந்துரையாடுவன் மூலம் குற்றியலுகரம் பற்றி விளக்கல்.
- குற்றியலுகர வகைகளை விபரித்தல்.
- கணிப்பீடு மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளல்.

**முதன்மைப் பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- தமிழ்மொழிக்கு மூலமான ஒலிகள் (எழுத்துக்கள்) முலெழுத்துக்களாகும்.

முதலெழுத்துக்கள் (30)

- உயிர் எழுத்துக்கள் (12)
  - குறில் எழுத்து (5)
  - நெட்டெழுத்து (7)
- மெய்யெழுத்து (18)
  - வல்லினம் (6)
  - இடையினம் (6)
  - மெல்லினம் (6)

**எழுத்துக்கள் ஒலிக்க எடுக்கும் கால அளவை அளக்கும் அலகு மாத்திரை எனப்படும்.**

- முதலெழுத்துக்களைச் சார்ந்து ஒலிக்கும் எழுத்துக்கள் சார்பெழுத்துக்களாகும்.
  - சார்பெழுத்துக்கள் உயிர்மெய், ஆய்தம், உயிரளபெடை, ஒற்றளபெடை, குற்றியலுகரம் என்பன போன்ற பத்து வகைகளைக் கொண்டுள்ளன.

- உயிர், மெய் ஆகிய இரண்டு எழுத்துக்களினதும் ஒலிச்சேர்க்கையால் உண்டாகும் புதிய ஒலிவடிவங்களான எழுத்துக்கள் உயிர்மெய் எழுத்துக்களாய் அமையும்.
  - உயிர்மெய் எழுத்துக்கள் 216

- ஆய்த எழுத்து என்பது முப்புள்ளி (∴) வடிவிலமைந்த ஓர் எழுத்தாகும்.

- நெட்டுயிர்கள் தமக்குரிய மாத்திரையளவினின்றும் (2 மாத்திரை) நீண்டொலிக்கும் போது உயிரளபெடை எனப்படுகின்றது.

- ஒற்றெழுத்துக்கள் (மெல்லினம், ர், ழ் தவிர்ந்த இடையினம்) தம் மாத்திரையளவனின்றும் நீண்டொலிக்கும்போது ஒற்றளபெடை எனப்படுகின்றது (இலங்ங்கு).

- உகரம் தன் மாத்திரையளவில் குறைந்து ஒலிக்கும்போது அது குற்றியலுகரம் எனப்படும்.

  - சொல்லின் இறுதியில், தனிக் குற்றெழுத்தல்லாத ஏனைய எழுத்துக்களின் பின்னே வல்லின மெய்களோடு இணைந்து வரும் உகரம் குற்றியலுகரமாக ஒலிக்கும்.
  - குற்றியலுகரம் இதழ் குவியாது உச்சரிக்கப்படும்.
  - குற்றியலுகரம் ஆறு வகைப்படும்.

  1. நெடில் தொடர்க் குற்றியலுகரம் - ஆடு
  2. ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம் - எ∴து
  3. உயிர்த் தொடர்க் குற்றியலுகரம் - பயறு
  4. வன்றொடர்க் குற்றியலுகரம் - பேச்சு
  5. மென்றொடர்க் குற்றியலுகரம் - சங்கு
  6. இடைத்தொடர்க் குற்றியலுகரம் - எய்து

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- எழுத்தட்டைகள்
- எழுது கருவிகள்
- சொல்லட்டைகள்
- எழுது தாள்கள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- முதலெழுத்துக்கள் எவை என்பதை அறிந்து கூறுவர்.
- சார்பெழுத்துக்கள் இனங்கண்டு அட்டவணைப்படுத்துவார்.
- முதலெழுத்துக்கும் சார்பெழுத்துக்குமுள்ள வேறுபாட்டைக் கூறுவார்.
- சார்பெழுத்துக்களின் இயல்புகளை வகைப்படுத்துவார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | : | 13.0 | மொழியின் இலக்கணத்தையறிந்து அதற்கு அமைய மொழியை செம்மையாகக் கையாள்வார். |
| **தேர்ச்சி மட்டம்** | : | 13.1 | எழுத்துக்களின் ஒலிப்பு முறையையும் வகை தொகையையும் அறிந்து பயன்படுத்துவார். |
| **விடய உள்ளடக்கம்** | **:** | | இனவெழுத்துக்களும் போலியெழுத்துக்களும். |
| **பாடவேளை** | **:** | 02 | |

**கற்றற் பேறுகள்:**

- இனவெழுத்துக்களை அறிந்து கூறுவார்.
- போலியெழுத்துக்களை இனங்கண்டு கையாள்வார்.
- போலியெழுத்துக்களை வகைப்படுத்திக் கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- உயிர் எழுத்துக்களை குறில், நெடில் என்ற வகையிலும் மெய்யெழுத்துக்களை வல்லினம், இடையினம், மெல்லினம் என்ற வகையிலும் பாகுபடுத்திக் காட்சிப்படுத்தல்.
- ஒலிப்பு முறையிலும் சொற்பிறப்பு முறையிலும் ஒத்ததன்மை கொண்ட எழுத்துக்களைச் சோடிகளாக்கும் வகையில் கலந்துரையாடல்.
- போலியெழுத்துக்கள் இடம்பெறும் சொற்களைக் காட்சிப்படுத்தி சரியான வடிவம் தொடர்பில் கலந்துரையாடல்.
- போலியெழுத்துக்களின் வகைகளை இனங்காண வழிகாட்டல்.
- செயற்பாட்டுப்பத்திரத்தை வழங்கி வினாக்களுக்கு விடையெழுத ஊக்குவித்தல்.
- பொருத்தமான கணிப்பீட்டினைத் திட்டமிடல்.

**முதன்மைப் பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- உயிர் எழுத்துக்களில் குறில் எழுத்துக்கள் அவ்வவற்றின் நெடில் எழுத்துக்களுக்கு இனமாகும்.

| | |
|---|---|
| அ - ஆ | ஒ - ஓ |
| இ - ஈ | ஔ - உ |
| உ - ஊ | ஐ - இ |
| எ - ஏ | |

- வல்லின மெய்களுக்கு அவ்வவற்றுக்குரிய மெல்லின மெய்கள் இனமாகும்.

| | |
|---|---|
| க் - ங் | த் - ந் |
| ச் - ஞ் | ப் - ம் |
| ட் - ண் | ற் - ன் |

இடையின மெய்களுக்கு இனவெழுத்துக்கள் இல்லை.

- ஒரு சொல்லில் வரவேண்டிய ஓர் எழுத்துக்குப் பதிலாக, வேறு எழுத்து வந்து பொருள் மாறுபடாது வருவது போலியெழுத்தாகும்.

- போலியெழுத்துக்கள் மூன்று வகைப்படும்.

  மொழிமுதற் போலி - நாயிறு (ஞாயிறு)

  மொழியிடைப்போலி - அரைசு (அரசு)

  மொழியிறுதிப் போலி - அறன் (அறம்)

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- சொல்லட்டைகள்
- டிமைன் தாள்
- எழுது கருவிகள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- இனவெழுத்துக்களை இனங்கண்டு அட்டவணைப்படுத்துவார்.
- போலியெழுத்துக்கள் இடம்பெறும் சொற்களை இனங்கண்டு முன்வைப்பார்.
- போலியெழுத்துக்களை வகைப்படுத்திக் காட்டுவார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | : | 8.0 | அவதானமாகக் கிரகித்து, எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து, இலக்கண வழுவின்றி உரிய நிறுத்தக் குறிகளுடன் ஆக்கங்களைத் தெளிவாக எழுதுவார். |
| **தேர்ச்சி மட்டம்** | : | 8.1 | எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து, வழுவின்றி நேர்த்தியாக எழுதுவார். |
| **விடய உள்ளடக்கம்** | : | | பந்தி அமைத்தல் |
| **பாடவேளை** | : | 02 | |

**கற்றற் பேறுகள்:**

- கொடுக்கப்பட்ட விடயத்திற்கேற்ப கருத்துக்களை உரியவாறு ஒழுங்குபடுத்தி எழுதுவார்.
- மையக்கருத்தினையும் அதனை விளக்க அவசியமான துணைக்கருத்துக்களையும் உள்ளடக்கி பந்தி எழுதுவார்.
- எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்துப் பந்தி எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- மாணவர்கள் கட்டுரை எழுதிய சந்தர்ப்பங்களை நினைவுபடுத்தி, பந்தி பந்தியாக எழுதியமை தொடர்பில் கலந்துரையாடல் (பாடப் பிரவேசமாக அமையும்).
- சிறியதும் பொருத்தமானதுமான ஒரு கட்டுரையை வழங்கி அது பந்தி பந்தியாக எழுதப்பட்டிருக்கும் முறையை இனங்காட்டிக் கலந்துரையாடல்.
- பந்தி ஒன்றின் அமைப்பு, பண்புகள் தொடர்பில் கலந்துரையாடி விளக்கல்.
- மாணவர்களைக் குழுக்களாக்கிப் பொருத்தமான தலைப்புக்களை வழங்கிப் பந்தி எழுத வழிப்படுத்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டுச் செயற்படுத்தல்.

**முதன்மைப் பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- பந்தி என்பது கூறவந்த விடயத்தைத் தெளிவாகவும் ஒழுங்காகவும் கூறுவதற்கு உகந்த அமைப்பாகும்.
- பந்தி பிரதான கருத்து ஒன்றினைக் கொண்டிருக்கும். பிரதான கருத்திற்கு வலுச் சேர்க்க பல துணைக்கருத்துக்களைக் கொண்டிருக்கலாம்.
- பந்தி என்பது தொடர்புடைய விடயங்களைக் கொண்டதாக, கட்டிறுக்கமுடையதாக இருத்தல் சிறப்பானதாகும்.
- சிறந்த பந்தியொன்றின் பண்புகள்:
    - தலைமைக் கருத்தைக் கொண்டிருக்கும்.
    - தலைமைக் கருத்தை ஐயந்திரிபற உறுதியாக முன்வைக்கும்.
    - பொருத்தமான துணைக்கருத்துக்கள், உதாரணங்கள், விளக்கம் என்பவற்றைக் கொண்டிருக்கும்.
    - வாசகரின் மனதிலெழக்கூடிய வினாக்களுக்கு விடை தரக்கூடிய வகையில் அமைந்திருக்கும்.

- பந்தியொன்றை எழுதும்போது தவிர்க்கவேண்டியவை:

    - கூறியது கூறல்.
    - மிகைபடக் கூறல்.
    - முரண்படக் கூறல்.
    - பொருத்தமற்ற / தேவையற்ற விடயங்களைக் கூறல்.
    - தேவையானதைக் கூறாது விடுதல்.
    - தெளிவற்றவிதத்தில் கூறல்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- மாதிரிக் கட்டுரை
- டிமைன் தாள்
- எழுது கருவிகள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- மையக்கருத்தினை விளக்கி எழுதுவார்.
- பொருத்தமான துணைக்கருத்துக்களைக் கையாண்டு எழுதுவார்.
- விடயத்திற்கேற்ப கருத்துக்களை ஒழுங்குபடுத்திப் பந்தியாக எழுதுவார்.
- நேர்த்தியான மொழிநடையைப் பின்பற்றி எழுதுவார்.

**தேர்ச்சி** : 13.0 மொழியின் இலக்கணத்தையறிந்து அதற்கமைய மொழியைச் செம்மையாகக் கையாள்வார்.

**தேர்ச்சி மட்டம்** 13.1 : 13.1 எழுத்துக்களின் ஒலிப்பு முறையையும் வகை தொகையையும் அறிந்து பயன்படுத்துவார்.

**விடய உள்ளடக்கம்** : சுட்டெழுத்தும் வினாவெழுத்தும்

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்:**

- சுட்டெழுத்துக்களை அறிந்து கூறுவார்.
- வினாவெழுத்துக்களை இனங்கண்டு கையாள்வார்.
- சுட்டெழுத்துக்களின் வகைகளை இனங்கண்டு பாகுபடுத்துவார்.
- வினாவெழுத்துக்களின் வகைகளை இனங்கண்டு பாகுபடுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- சுட்டுப்பெயர்கள், வினாப் பெயர்கள் என்பவற்றைக் கொண்ட (ஒழுங்கற்ற விதத்தில்) பட்டியலை முன்வைத்து மாணவர்களை பிரித்தறியக் கேட்டல்.
- சுட்டுப்பெயர்கள், வினாப் பெயர்கள் என்பன தொடர்பாகக் கலந்துரையாடுவதன் மூலம் சுட்டெழுத்துக்களையும் வினாவெழுத்துக்களையும் இனங்காட்டல்.
- சுடடெழுத்துக்கள், வினாவெழுத்துக்களின் இயல்புகள் தொடர்பில் கலந்துரையாடல்.
- சுட்டெழுத்துக்கள், வினாவெழுத்துக்களை வகைப்படுத்த வழிகாட்டல்.
- செயற்பாட்டுப்பத்திரத்தை வழங்கி, கொடுக்கப்பட்டுள்ள பயிற்சிகளுக்கு விடையெழுதத் தூண்டுதல்.
- பொருத்தமான கணிப்பீட்டினைத் திட்டமிடல்.

**முதன்மைப் பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- அ, இ, உ ஆகிய எழுத்துக்கள் சுட்டுப்பொருளில் வரும்பொழுது சுட்டெழுத்துக்கள் எனப்படும்.
- சுட்டு இருவகைப்படும்.

  1. அகச்சுட்டு (அந்த) 2. புறச்சுட்டு (அவ்வீடு)
- எ, யா, ஆ, ஓ, ஏ என்னும் எழுத்துக்கள் வினாப்பொருளில் வரும்போது வினாவெழுத்துக்கள் எனப்படும்.
  - எ, யா சொல்லின் முதலிலும் ஆ, ஓ என்பன சொல்லின் இறுதியிலும் ஏ இரு இடங்களிலும் வினாவெழுத்துக்களாகும்.
- வினா இரண்டு வகைப்படும்.

  1. அகவினா (யார்) 2. புறவினா (அவனோ)

### தரவிருத்தி உள்ளீடுகள்:

- சுட்டெழுத்துக்கள், வினாவெழுத்துக்கள் அடங்கிய அட்டவணை
- எழுது தாள்
- எழுது கருவிகள்

### கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- சுட்டெழுத்துக்கள், வினாவெழுத்துக்கள் என்பவற்றை இனங்கண்டு பிரயோகிப்பார்.
- சுட்டெழுத்துக்கள், வினாவெழுத்துக்களை வகைப்படுத்தி விளக்குவார்.
- சுட்டெழுத்துக்கள், வினாவெழுத்துக்களின் வகைப்பாடுகளை உள்ளடக்கி அட்டவணை தயாரிப்பார்.

**தேர்ச்சி** : 10.0 எழுத்தாக்க நுட்பங்களைப் பயன்படுத்தி, வழுவின்றி எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம்** : 10.2 கருத்துப்புலப்படுமாறு பந்தி எழுதுதல்.

**விடய உள்ளடக்கம்** : கட்டுரை எழுதுதல்

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள் :**

- தலைப்பொன்றிற்கு ஏற்ப விடயங்களைப் பாகுபடுத்திப் பந்திகளாக எழுதுவார்
- தலைமைக்கருத்து, துணைக்கருத்துக்களைப் பொருத்தமுறக் கையாண்டு பந்திகளாக எழுதுவார்.
- வாக்கிய இயைபுடன் நேர்த்தியாக எழுதுவார்.
- எடுத்துக்காட்டுக்கள், மேற்கோள்களைப் பயன்படுத்தி நியாயங்காட்டி எழுதுவார்.
- பந்திகளைத் தொடர்புபடுத்திக் கட்டுரையாக எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- மாணவர் கட்டுரை வாசித்த, எழுதிய சந்தர்ப்பங்களை நினைவுபடுத்திக் கலந்துரையாடுவதன் மூலம் பந்திகளாகத் தொடர்புபட்டு கட்டுரைகள் அமைந்திருப்பதனை இனங்காட்டல் (பாடப்பிரவேசமாக அமையும்).
- எளிமையான கட்டுரையொன்றின் வேறாக்கப்பட்ட பந்திகளை மாணவர்களிடம் வழங்கி அவற்றை ஒழுங்குபடுத்திக் கட்டுரையாக்க வழிப்படுத்தல்.
- ஒழுங்குபடுத்தப்பட்ட கட்டுரையை முன்வைத்துக் கலந்துரையாடுவதன் மூலமாக கட்டுரையின் உறுப்புக்களை இனங்காட்டி விளக்கல்.
- தலைப்பொன்றை வழங்கி அதனைக் கட்டுரையாக எழுதுவதற்கேற்றவாறு சட்டகத்தினைக் கலந்துரையாடலின் மூலம் அமைத்தல்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி சட்டகத்திற்கு ஏற்றவாறு பந்திகளை ஒவ்வொரு குழுவிற்கு ஒவ்வொன்றாக எழுத வழிப்படுத்தல்.
- குழுக்கள் எழுதிய பந்திகளைத் தொகுத்துக் கட்டுரையாக்கி வாசித்தல்.

**முதன்மைப் பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- கட்டுரை, தலைப்பொன்றிற்கேற்ப விடயங்களைச் செறிவாகவும் நேர்த்தியாகவும் தரும்.
- கட்டுரையானது முன்னுரை, உள்ளடக்கம் / உடல், முடிவுரை என்பனவற்றை உள்ளடக்கியிருக்கும்.
- கட்டுரை உறுப்புக்களுக்குரிய பந்திகளைப் பொருத்தமாகவும் நேர்த்தியாகவும் தொடர்புபடுத்தி எழுதுவதன் மூலம் சிறந்த கட்டுரையை அமைக்கலாம்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- மாதிரிக் கட்டுரை
- எழுது தாள்கள்
- எழுது கருவிகள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- தலைமைக்கருத்து, துணைக்கருத்துக்களை தொடர்புற விளக்கிப் பந்திகளை எழுதுவார்.
- வாக்கியங்களை இயைபுறக் கையாண்டு நேர்த்தியுடன் எழுதுவார்.
- பொருத்தமான எடுத்துக்காட்டுக்கள், மேற்கோள்களைப் பயன்படுத்தி எழுதுவார்.
- தலைப்பொன்றிற்கேற்ப பொருத்தமான பந்திகளைத் தொடர்புபடுத்திக் கட்டுரையாக எழுதுவார்.

**தேர்ச்சி** : 6.0 கிரகித்துப் பொருள் உணர்ந்து வாசிப்பார்.

**தேர்ச்சி மட்டம்** : 6.1 மௌனமாக வாசித்துக் கிரகித்துத் துலங்குவார்.

**விடய உள்ளடக்கம்** : இலட்சியமும் சமநோக்கும்

**பாடவேளை** : 03

**கற்றற் பேறுகள் :**

- பிரதான கருத்து, துணைக்கருத்துக்களைக் கூறுவார்.
- வாசித்த பகுதியைச் சுருக்கிச் சொந்த மொழிநடையிற் கூறுவார்.
- இலட்சியமொன்றைக் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து வாசிப்பார்.
- கட்டுரையின் மொழிநடை, உத்திகள் பற்றி வாசித்துக் கிரகித்தவற்றை கூறுவார்.
- விழுமியப் பண்புகளை வேறுபடுத்திக் கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- மாணவர்களிடமுள்ள இலட்சியம் என்னவெனக் கேட்டுக் கலந்துரையாடுதல்.
- இலக்கிய கலாநிதி ஏ.பெரியதம்பிப்பிள்ளை பற்றிக் கலந்துரையாடுதல்.
- கட்டுரையை வாசிக்கச் சந்தர்ப்பம் அளித்தல்.
- கட்டுரையின் மையக்கருத்தினை அறிந்து வாசித்தல்.
- இலட்சியத்தைக் கடைப்பிடித்தோராகக் கூறப்பட்ட பாத்திரங்களின் வரலாறுகளை அறிந்து வாசித்தல்.
- கட்டுரை ஆசிரியர் பயன்படுத்தும் உத்திகளை அறிந்து விளக்குதல்.

**முதன்மைப் பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- ஆசிரியர் அறிமுகம்:

  இவர் மட்டக்களப்பு மண்டூர் எனும் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவருடைய பல நூல்கள் தற்போது அரியதாக உள்ளன. இவர் கவிஞராக மட்டுமன்றி சமூகச் சீர்திருத்தவாதியாகவும், மொழிபெயர்ப்பாளராகவும், பேச்சாளராகவும், உரைநடை எழுத்தாளராகவும் சிறந்து விளங்கினார்.

  இவரது நூல்களுள் பகவத் கீதை வெண்பா, மண்டூர்ப்பதிகம், விபுலானந்தர் மீட்சிப் பத்து, சர்வசமய சமரசப் பதிகம் என்பன குறிப்பிடத்தக்கன. மதுரகவி, சித்தாந்த ஞானபானு போன்ற பல பட்டங்கள் வழங்கப்பட்ட போதும் புலவர்மணி என்ற பட்டத்தை மாத்திரமே அவர் தமது பெயருடன் இணைத்துக் கொண்டார்.

- ஆசிரியர் கூறவிழைந்த விடயம்.

  - ஒவ்வொருவரிடமும் இலட்சியம் இருக்கவேண்டும். எல்லா இலட்சியங்களுமே சமநோக்கமுடையவை.

- இலட்சியத்தைக் கடைப்பிடிப்பதன் அவசியத்தை வலியுறுத்தல்.

    - ஒருவரை ஈடேற்றுவது இலட்சியந்தான்.
    - சமூகத்திலுள்ள பலர் தத்தமக்கேற்ற இலட்சியங்களைக் கடைப்பிடிப்பதால்தான் உலகம் இயங்குகிறது.
    - இலக்கியத்தைத் தெரிவு செய்யும்போது சமநோக்கைக் கொண்டிருக்க வேண்டும்.
    - இலக்கியங்கள்கூட இலட்சியத்தைக் கடைப்பிடித்தோரின் வாழ்க்கையையே கூறுகின்றன.
    - இலட்சியவாதிகள் மறைந்தாலும், இலட்சியங்கள் மறைவதில்லை.

- கட்டுரை ஆசிரியர் தனது கருத்துக்களைக் கூறுவதிலுள்ள சிறப்பு.

    - குறித்த ஒழுங்கமைப்பிற் கருத்துக்களைக் கூறுதல்.
    - தர்க்கரீதியாகக் கருத்துக்களை முன்வைத்தல்.
    - இலக்கியக் கதாபாத்திரங்களினதும், பெரியார்களினதும் வரலாறுகளை ஆதாரம் காட்டி விளக்குதல்.
    - வினாக்களைக் கேட்டுச் சிந்திக்கவைத்தல்.
    - எளிமையான மொழிநடையைக் கையாளுதல்.

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- பாட நூல்
- எழுது தாள்கள்
- எழுது கருவிகள்

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- ஆசிரியர் கூறவந்த விடயத்தைக் கூறுவார்.
- துணைக்கருத்துக்களை இனங்கண்டு கூறுவார்.
- மொழிநடைச் சிறப்புக்களைத் தொகுத்துக் கூறுவார்.
- விழுமியப்பண்புகளை வேறுபடுத்திக் கூறுவார்.

**தேர்ச்சி** : 13.0 மொழியின் இலக்கணத்தையறிந்து அதற்கு அமைய மொழியை செம்மையாகக் கையாள்வார்.

**தேர்ச்சி மட்டம்** : 13.1 எழுத்துக்களின் ஒலிப்பு முறையையும் வகை தொகையையும் அறிந்து பயன்படுத்துவார்.

**விடய உள்ளடக்கம்** : முதனிலை, இறுதிநிலை எழுத்துக்கள்

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள் :**

- மொழிக்கு (சொல்லுக்கு) முதலில் வரக்கூடிய எழுத்துக்களை இனங்கண்டு எழுதுவார்.
- மொழியின் (சொல்லின்) இறுதியில் வரக்கூடிய எழுத்துக்களை வேறுபடுத்தி எழுதுவார்.
- முதனிலை, இறுதிநிலை தொடர்பான தற்கால வழக்குகளை விபரிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- சிறிய பந்தியொன்றை வழங்கி அதில் இடம்பெற்றுள்ள சொற்களில் முதலெழுத்தாகவும் இறுதியெழுத்தாகவும் இடம்பெறும் சொற்களை இனங்கண்டு பட்டியற்படுத்த வழிகாட்டல்.
- யெ, வு முதலிய எழுத்துக்கள் மொழி முதலில் வருமாறும் எ, க் ஆகிய எழுத்துக்கள் மொழியின் இறுதியில் வருமாறும் தமிழ்ச் சொற்களைக் கூறுமாறு கேட்டல்.
- கலந்துரையாடலின் மூலம் மொழியின் முதலில் வரத்தக்க எழுத்துக்களை இனங்காட்டி விளக்கல்.
- மொழி முதலிலும் மொழியிறுதியிலும் வராத சில சொற்கள் தற்கால வழக்கில் பிறமொழிச் சொற்களில் மொழி முதலிலும் மொழியிறுதியிலும் வழங்கி வருதலை விளக்கல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளல்.

**முதன்மைப் பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- 12 உயிர் எழுத்துக்களும் மொழிமுதலாகும்.
  - க், ச், த், ப் ஆகிய வல்லினங்களும் ந், ம் ஆகிய மெல்லினங்களும் 12 உயிர்களுடனும் மொழிமுதலாகும்.
  - வ் எனும் மெய்யெழுத்தானது உ, ஊ, ஒ, ஓ, தவிர்ந்த (8) உயிர்களுடனும் ய் எனும் மெய்யெழுத்தானது அ, ஆ, உ, ஊ, ஓ, ஔ ஆகிய (6) உயிர்களுடனும் ஞ் எனும் மெய்யெழுத்தானது அ, ஆ, இ, எ, ஒ ஆகிய (5) உயிர்களுடனும் மொழிமுதலாகும்.

- தற்காலத்தில்
  - ஞ, ஞி, ஞெ, ஞொ முதலிய சில எழுத்துக்கள் மொழிமுதலாகவருவதில்லை.
  - ல் (லட்டு), ர் (ராகம்), ட் (டாக்கா) முதலிய சில மெய்கள் மொழிமுதலாகின்றன.

- - ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ ஆகிய (6) உயிர்களும் சொல்லின் இறுதியில் வரும்.
  - ங தவிர்ந்த மெல்லினங்களும் இடையினங்களுமாக 11 மெய்யெழுத்துக்கள் சொல்லின் இறுதியில் வரும்.

- தற்காலத்தில்
    - பிறமொழிச் சொற்களில் வல்லின மெய்கள் மொழியிறுதியில் வருகின்றன.

      உதாரணம் :- ஈராக், டேவிட், சூரிச், ஜோசப்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பிரதியெடுக்கப்பட்ட பொருத்தமான பந்தி
- சொல்லட்டைகள்
- டிமைன் தாள்
- எழுது கருவிகள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- மொழிமுதலாகும் எழுத்துக்களை இனங்கண்டு பட்டியற்படுத்துவார்.
- இறுதிநிலை எழுத்துக்களை இனங்கண்டு குறிப்பார்.
- இலக்கணகாரரின் கருத்துகளுக்கு மாறாக தற்கால வழக்கில் மொழிமுதலாகும் எழுத்துக்களை உதாரணங்களுடன் கூறுவார்.
- இலக்கணகாரரின் கருத்துகளுக்கு மாறாக தற்கால வழக்கில் மொழியின் இறுதியில் வரும் எழுத்துக்களை உதாரணங்களுடன் கூறுவார்.

**தேர்ச்சி** : 13.0 மொழியின் இலக்கணத்தையறிந்து அதற்கு அமைய மொழியை செம்மையாகக் கையாள்வார்.

**தேர்ச்சி மட்டம்** : 13.1 எழுத்துக்களின் ஒலிப்பு முறையையும் வகை தொகையையும் அறிந்து பயன்படுத்துவார்.

**விடய உள்ளடக்கம்** : இடைநிலை மெய்ம்மயக்கம்

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள் :**

- இடைநிலை மெய்ம்மயக்கம் என்றால் என்ன? என்பதனை விளக்குவார்.
- இடைநிலை மெய்ம்மயக்கத்தினை வகைப்படுத்தி விபரிப்பார்.
- உடனிலை மெய்ம்மயக்கம், வேற்றுநிலை மெய்ம்மயக்கம் என்பவற்றிற்கு உட்படும் மெய்யெழுத்துக்களை இனங்கண்டு கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- பாடப்பிரவேசத்தினைப் பொருத்தமாகத் திட்டமிடல்.
- சிறிய பந்தியொன்றினை / சொற்களின் பட்டியலொன்றினை வழங்கி சொற்களைப் பிரித்து எழுத்துக்களாக எழுதுமாறு வழிப்படுத்தல் (பச்சை →ப்அச்ச்ஐ; வெட்கம் →வ்எட்க்அம்).
- பிரித்தெழுதிய சொற்களில் சொல்லின் இடையே மெய்யெழுத்துக்கள் அருகருகே இருப்பதனை இனங்காட்டி இடைநிலை மெய்ம்மயக்கத்தினை விளக்கல்.
- சொல்லின் இடையே ஒரே மெய்யெழுத்துக்கள் அருகருகே வருவதனையும் வெவ்வேறு மெய்யெழுத்துக்கள் அருகருகே வருவதனையும் இனங்காட்டி உடனிலை மெய்ம்மயக்கம், வேற்றுநிலை மெய்ம்மயக்கம் என்பவற்றை வேறுபடுத்தி விளக்கல்.
- சொல்லின் இடையில் தம்மோடு தாம் இணைந்து வராத மெய்களையும் பிறமெய்களோடு இணைந்து வராத மெய்களையும் சுட்டிக்காட்டல்.
- பொருத்தமான பயிற்சிகளை வழங்கல்.
- கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளல்.

**முதன்மைப் பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- சொல்லின் இடையில் மெய்யெழுத்துக்கள் இணைந்து வருவன இடைநிலை மெய்ம்மயக்கம் என்பர்.
- இடைநிலை மெய்ம்மயக்கம் இரண்டு வகைப்படும்.

  1. உடனிலை மெய்ம்மயக்கம்

     - ஒரே மெய்யெழுத்துக்கள் இணைந்து வருதல். அதாவது சொல்லிடையில் மெய்யெழுத்து இரட்டித்து வருதல்.

உதாரணம் :- பக்கம் → ப்அக்க்அம்

தொட்டி → த்ஒட்ட்இ

2. வேற்றுநிலை மெய்ம்மயக்கம்

- ஒரு மெய்யெழுத்து பிற மெய்யெழுத்துடன் இணைந்து வருதல்.

உதாரணம் :- சங்கம் → ச்அங்க்அம்

கல்வி → க்அல்வ்இ

- க், ச், த், ப் தவிர்ந்த 14 மெய்களும் வேற்றுநிலை மெய்ம்மயக்கத்திற்குட்படும்.

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- பிரதியெடுக்கப்பட்ட பந்தி
- எழுது தாள்கள்
- எழுது கருவிகள்

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- இடைநிலை மெய்ம்மயக்கத்தினை வரைவிலக்கணப்படுத்திக் கூறுவார்.
- உடனிலை மெய்ம்மயக்கம், வேற்றுநிலை மெய்ம்மயக்கம் என்பவற்றை வேறுபடுத்தி விளக்குவார்.
- உடனிலை, வேற்றுநிலை மெய்ம்மயக்கத்திற்குட்படும் எழுத்துக்களை உதாரணங்களுடன் அட்டவணைப்படுத்துவார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | : | 11.0 | படைப்புக்களை வாசித்த அனுபவங்களினூடாக படைப்பாக்க நுட்பங்களை அறிந்து ஆக்கங்களைச் சுயமாக எழுதுவார். |
| **தேர்ச்சி மட்டம்** | : | 11.2 | நடைமுறைத் தேவைகளுக்காக எழுதுவார். |
| **விடய உள்ளடக்கம்** | : | | அழைப்பிதழ் |
| **பாடவேளை** | : | 01 | |

**கற்றற் பேறுகள் :**

- ஆக்கங்களின் வடிவம், அமைப்பு, தலைப்பு முதலானவை அமைய, பொருத்தமுற எழுதுவார்.
- பொருத்தமான மொழிநடையில் தெளிவாக எழுதுவார்.
- அழைப்பிதழில் இடம்பெற வேண்டிய விடயங்களை அறிந்து அதற்கேற்ப எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- வைபவங்களுக்கு உறவினர்களை அழைக்கும் முறைகள் பற்றிக் கலந்துரையாடுதல்.
- மாதிரி அழைப்பிதழ்களின் துணையுடன் அழைப்பிதழின் அமைப்பை விளக்குதல்.
- அழைப்பிதழில் உள்ளடங்க வேண்டிய விடயங்கள் பற்றி விளக்குதல்.
- அழைப்பிதழ் ஒன்றை எழுத வழிப்படுத்தல்.

**முதன்மைப் பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- குறித்த நிகழ்விற்கு வருகை தரவேண்டியவர்களை அழைக்கும் வகையில் அழைப்பிதழ்கள் அமைந்திருக்கும்.
- அழைப்பிதழில் இடம்பெற வேண்டிய விடயங்கள்:
    - தலைப்பு
    - விளிப்பு
    - இடம்
    - காலம்
    - நேரம்
    - அழைப்பவரின் பெயர்
- அழைப்பிதழின் வகைகள்:
    - குடும்பம் சார் அழைப்பிதழ்கள் – புதுமனைப்புகுவிழா, திருமணவிழா
    - நிறுவனம் சார் அழைப்பிதழ்கள் – பாடசாலைப் பரிசளிப்புவிழா
    - தனிநபர் தொடர்பான அழைப்பிதழ்கள் – மணிவிழா

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- மாதிரி அழைப்பிதழ்கள்
- டிமைன் தாள்
- எழுது கருவிகள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- அழைப்பிதழின் அமைப்பை அறிந்து துலங்குவார்.
- அழைப்பிதழின் வகைகளை அறிந்து எழுதுவார்.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான முறையில் அழைப்பிதழை எழுதுவார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | : | 13.0 | மொழியின் இலக்கணத்தையறிந்து அதற்கு அமைய மொழியைச் செம்மையாகக் கையாள்வார். |
| **தேர்ச்சி மட்டம்** | : | 13.2 | சொற்களின் வகையையும் இயல்பையும் அறிந்து அவற்றைப் பிரயோகிப்பார். |
| **விடய உள்ளடக்கம்** | : | | மூவிடப் பெயர்கள், காரண, இடுகுறி, காரணஇடுகுறிப் பெயர் |
| **பாடவேளை** | : | 01 | |

**கற்றற் பேறுகள் :**

- மூவிடப் பெயர்களை அறிந்து பொருத்தமாகக் கையாள்வார்.
- மூவிடப் பெயர்களின் வேறுபாடுகளை அறிந்து துலங்குவார்.
- பெயரிடப்பட்ட அடிப்படையில் பெயர்ச்சொற்களைப் பாகுபடுத்திக் கூறுவார்.
- காரண, இடுகுறி, காரண இடுகுறிப் பெயர்களுக்குப் பொருத்தமான உதாரணங்களை இனங்கண்டு பட்டியலிடுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- மூவிடப் பெயர்களைக் கொண்ட (ஒழுங்கற்ற முறையில்) பட்டியலைக் காட்சிப்படுத்திக் கலந்துரையாடுவதன் மூலம் அவற்றை உரிய முறையில் பாகுபடுத்த வழிகாட்டல்.
- தன்மை, முன்னிலை, படர்க்கைப் பெயர்களின் வகைகள் தொடர்பில் கலந்துரையாடல்.
- மாணவர்களிடம் பெயர்ச்சொற்கள் சிலவற்றைக் கூறுமாறு கேட்டு, கரும்பலகையில் எழுதுதல்.
- மாணவர்களைச் சோடியாகச் செயற்பட வைத்து மேற்படி பெயர்ச்சொற்களைப் பெயரிட்டு பாகுபடுத்தக் கேட்டல்.
- காரணப் பொதுப்பெயர், காரணச் சிறப்புப் பெயர், இடுகுறிப் பொதுப்பெயர், இடுகுறிச் சிறப்புப் பெயர் என்ற வேறுபாட்டை விளக்குதல்.
- உரிய பயிற்சிகளை வழங்கி செயற்பட வழிகாட்டல்.
- மாணவர்களைக் கணிப்பிடல்.

**முதன்மைப் பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

தன்மைப் பெயர்கள்

முன்னிலைப் பெயர்கள்

படர்க்கைப்பெயர்கள்

- பெயர்
  - தன்மைப் பெயர்
    - ஒருமை (நான்)
    - பன்மை
      - உளப்பாட்டு தன்மைப் பன்மை (நமது)
      - உளப்படுத்தாத் தன்மைப் பன்மை (எமது)
  - முன்னிலை
    - ஒருமை - நீ
    - பன்மை - நீங்கள்
  - படர்க்கை
    - ஆண்பாற் பெயர் (அவன்)
    - பெண்பாற் பெயர் (அவள்)
    - பலர்பாற் பெயர் (அவர்கள்)
    - ஒன்றன்பாற் பெயர் (அது)
    - பலவின்பாற் பெயர் (அவை)

- பெயர்
  - இடுகுறிப் பெயர்
    - இடுகுறிப் பொதுப் பெயர் (மரம்)
    - இடுகுறிச் சிறப்புப் பெயர் (வேம்பு)
  - காரணப் பெயர்
    - காரணப் பொதுப் பெயர் (பறவை)
    - காரணச் சிறப்புப் பெயர் (மரங்கொத்தி)
  - காரண இடுகுறிப் பெயர் - நாற்காலி

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- சொல்லட்டைகள்
- மூவிடப் பெயர்களைக் கொண்ட பட்டியல்
- எழுது தாள்கள்
- எழுது கருவிகள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- மூவிடப் பெயர்களின் வேறுபாட்டை அறிந்து கூறுவார்.
- மூவிடப் பெயர்களை நடைமுறையில் பொருத்தமாகப் பயன்படுத்துவார்.
- காரணப் பெயர், இடுகுறிப் பெயர் என்பவற்றுக்கு இடையிலான வேறுபாட்டை விளக்குவார்.
- காரண இடுகுறிப் பெயரின் இயல்பினைத் தெளிவுபடுத்துவார்.
- பெயர்ச் சொற்களை காரண, இடுகுறி, காரண இடுகுறி என்ற அடிப்படையில் பாகுபடுத்திக் காட்டுவார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | : | 1.0 | பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்குமேற்ப வினைத்திறனுடன் கேட்டுக்கிரகித்துத் துலங்குவார். |
| **தேர்ச்சி மட்டம்** | : | 1.4 | செயற்றிறனும் வினைத்திறனும் உள்ள கேட்போராகச் செயற்படுவார். |
| **விடய உள்ளடக்கம்** | : | | கிரகித்துக் கூறல் (பாடல் / சொற்பொழிவு) |
| **பாடவேளை** | : | 02 | |

**கற்றற் பேறுகள்** :

- கேட்டலில் விருப்புடன் ஈடுபட்டுக் கிரகித்துக் கூறுவார்.
- கேட்டவற்றிலிருந்து தகவல்கள், தரவுகளைத் திரட்டிக் கூறுவார்.
- தகவல்கள், தரவுகள் தொடர்பான அபிப்பிராயங்களைக் கூறுவார்.
- நயந்த பகுதிகளை எடுத்துக்காட்டி விளக்குவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- மாணவர்கள் கேட்டுக் கிரகித்த, கிரகிக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் தொடர்பாகக் கலந்துரையாடல் (பாடப்பிரவேசமாக அமையும்).
- கேட்டுக் கிரகிக்கும் சந்தர்ப்பங்களில் அவதானஞ் செலுத்த வேண்டிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடி விளக்கல்.
- சிறிய சொற்பொழிவு / பாடலை ஒலிபரப்பி மாணவர்கள் கேட்கவும், கிரகிக்கவும், குறிப்பெடுக்கவும் வழிப்படுத்தல்.
- வினாக்களைப் பொருத்தமாக வினவுவதன் மூலம் கிரகித்த விடயங்களை மாணவர்கள் கூற வழிப்படுத்தல்.
- கேட்டுக் கிரகித்தவற்றிலிருந்து விடயங்களைத் தொகுத்தும் நயந்தும் கூற வழிப்படுத்தல்.

**முதன்மைப் பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- விடயங்களைச் செவிமடுத்துக் கிரகிக்க வேண்டிய பல்வேறு சந்தர்ப்பங்கள் எமக்குக் கிடைக்கின்றன. வினைத்திறனுள்ள கேட்போனாக உள்ளபோதே அச்சந்தர்ப்பங்களில் உயர்ந்த பயனைப் பெறமுடியும்.
    - கேட்கும் விடயத்தினைக் கருத்தூன்றி விருப்பத்துடன் கேட்டல்.
    - பிரதான விடயங்களைச் சுருக்கமாகக் குறிப்பெடுத்தல் வேண்டும்.
    - அரும்பதங்கள், கலைச்சொற்கள் முதலியவற்றைக் குறித்துக்கொள்ளல்.
- கேட்டுக் கிரகித்த விடயங்களைப் பொருத்தமாகவும் சுருக்கமாகவும் தொகுத்து, தேவைக்கேற்ற வகையில் கூறல்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- சொற்பொழிவு / பாடல் இறுவட்டு
- இறுவட்டு, ஒலிபரப்பி
- எழுது தாள்கள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- கேட்ட விடயங்களைக் கிரகித்துக் கூறுவார்.
- கேட்டனவற்றிலிருந்து தகவல்கள், தரவுகளைத் திரட்டி அபிப்பிராயங்களைக் கூறுவார்.
- நயந்த பகுதிகளை விளக்கிக் கூறுவார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | : | 11.0 | படைப்புக்களை வாசித்த அனுபவங்களின் ஊடாக படைப்பாக்க நுட்பங்களை அறிந்து ஆக்கங்களைச் சுயமாக எழுதுவார். |
| **தேர்ச்சி மட்டம்** | : | 11.2 | நடைமுறைத் தேவைகளுக்காக எழுதுவார். |
| **விடய உள்ளடக்கம்** | : | | பத்திரிகைச் செய்தி |
| **பாடவேளை** | : | 01 | |

**கற்றற் பேறுகள் :**

- பத்திரிகைச் செய்தியின் அமைப்பினையும், இயல்பினையும் விளங்கி எழுதுவார்.
- விடய உள்ளடக்கத்தைத் தெளிவாகவும் நேர்த்தியாகவும் எழுதுவார்.
- பொருத்தமானதும் செம்மையானதுமான மொழிநடையைக் கையாண்டு எழுதுவார்.
- கவர்ச்சிகரமாக பொருத்தமான தலைப்பினை எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- மாணவர்கள், பத்திரிகைச் செய்திகள் வாசித்தமை தொடர்பிலும் அவை கட்டுரை, கதை போன்ற ஆக்கங்களிலிருந்து வேறுபடுந்தன்மை பற்றியும் கலந்துரையாடல் (பாடப்பிரவேசமாக அமையும்).
- மாதிரிப் பத்திரிகைச் செய்திகளை வழங்கி, மாணவர்கள் அவற்றை வாசிக்க நெறிப்படுத்தல்.
- மேற்படி செய்திகளின் அடிப்படையில் கலந்துரையாடுவதன் மூலம் பத்திரிகைச் செய்தியின் அமைப்பு, இயல்பு என்பன பற்றி விளக்கல்.
- பத்திரிகைச் செய்தியெழுதுவதற்குக் கையாளக்கூடிய மொழிநடை தொடர்பில் கலந்துரையாடல்.
- பொருத்தமான தகவல்களை வழங்கி, அவற்றைப் பத்திரிகைக்குரிய செய்தியாக மாணவர்கள் எழுத வழிப்படுத்தல்.
- பொருத்தமான கணிப்பீட்டு, மதிப்பீட்டுக் கருவிகளைத் தயாரித்து மதிப்பீட்டுச் செயற்பாடுகளை முன்னெடுத்தல்.

**முதன்மைப் பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- பத்திரிகை முதலிய ஊடகங்களும் அவற்றில் வெளியாகும் செய்திகளும் இன்றைய உலகில் முக்கியத்துவமுடையனவாகத் திகழ்கின்றன.

- ‘‘மக்களின் ஆர்வத்திற்குத் தீனியாக அமைகின்ற, முதன் முதலில் தரப்படுகின்ற எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த தகவலும் செய்தியாகும்’’(Eric. C. Hopwood). இடத்திற்கும் காலத்திற்கும் மக்களுக்கும் ஏற்ற பயனுள்ள உண்மைகளின் தொகுப்பு, செய்தியாகின்றது. ஒருவருக்கு செய்தி என்று தோன்றுவது மற்றவர்க்கு செய்தியாகாமல் போகலாம்.

- செய்திகள் சுருக்கமாகவும், ஈர்ப்புடையதாகவும் எழுதப்படுதல் அவசியமாகும்.

- பத்திரிகைச் செய்தியொன்றில் பிரதானமாகப் பின்வரும் விடயங்கள் இடம்பெறும்:

    - தலைப்பு - வாசகர்களை செய்தியை நோக்கியீர்க்கும் பகுதி இதுவாகும். செய்தியின் சாரமாக அமையும்.

    - உப தலைப்பு – செய்தியின் மேலதிக விளக்கமாகவும், வாசகரின் ஆர்வத்தைத் தூண்டுவதாகவும் வடிவமைப்பிற்கு அழகு கொடுப்பதாகவும் அமையும்.

    - முன்னுரை (Intro/Lead) – செய்தியின் முக்கிய பகுதியான இது முதற் பந்தியாக அமையும். தலைப்பின் விளக்கமாகவும் செய்தியின் சுருக்கமாகவும் அமையும். இதுவே செய்தியின் கருவாகும்.

    - விளக்கவுரை - இது செய்தி விளக்கப்படும் பகுதியாகும். ஒன்றிற்கு மேற்பட்ட பந்திகளைப் கொண்டிருக்கலாம்.

    - முடிவுரை - இறுதிப் பந்தியோ, பந்திகளோ முடிவுரையாக அமையலாம். முக்கியத்துவம் குறைந்த விடயங்கள் இங்கு இடம்பெறும்.

- எழுதப்படும் செய்தி பின்வரும் வினாக்களுக்கு விடை தருவதாக அமைந்தால் சிறப்பானதாகும்.

    - என்ன?
    - எங்கே?
    - எப்போது?
    - எப்படி?
    - ஏன்?
    - யார்?

- செய்திகளை எளிமையான, வாசகர்களுக்குப் பரிச்சயமுடைய சொற்களாலான மொழிநடையில் எழுதுதல் வேண்டும். தேவையற்ற வார்த்தைகள், தேவையற்ற வர்ணனைகள், மேலதிக விளக்கங்கள் தவிர்க்கப்படுதல் வேண்டும்.

- சிறிய வாக்கியங்கள், சிறிய பந்திகளால் செய்திகள் எழுதப்படல் வேண்டும்.

- செய்தியின் முதுகெலும்பே அதன் தலைப்பாகும். சிறியதாக அதேவேளை முழுமையான கருத்தைத் தெளிவாகத் தருவதாக தலைப்பு அமையும் வகையில் மொழி இதமாகக் கையாளப்பட வேண்டும்.

- ஒரு தலைப்பில் ஒரு கருத்தோ / விடயமோ இடம்பெற வேண்டும். தலைப்பு முழுமையான வாக்கியமாக இடம்பெறாது.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- மாதிரிச் செய்தித் துண்டங்கள்
- மேற்றலை எறியி / பல்லூடக எறியி
- எழுது தாள்கள்
- எழுது கருவிகள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- பத்திரிகைச் செய்தியின் அமைப்பினை இனங்கண்டு கூறுவார்.
- பத்திரிகைச் செய்தியின் இயல்பினை அறிந்து கூறுவார்.
- தகவல்களைத் தொகுத்துப் பொருத்தமான செய்தியாக எழுதுவார்.
- செய்திக்குப் பொருத்தமாகத் தலைப்பு எழுதுவார்.
- செய்தி, தலைப்பு என்பவற்றிற்குப் பொருத்தமான மொழிநடையினைக் கையாண்டு எழுதுவார்.

## இரண்டாந் தவணை

| இல. | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | பக்கம் |
|---|---|---|---|---|
| 01 | 5.0 | 5.1 | தற்காலக் கவிதைகள் - ''தேயிலைத் தோட்டத்திலே'' | 49-50 |
| 02 | 12.0 | 12.1 | முன்னொட்டு, பின்னொட்டுக்கள் | 51-52 |
| 03 | 7.0 | 7.1 | தற்காலக் கவிதைகள் - ''குழந்தையென எனது மனம் குதூகலிக்கும்'' | 53 |
| 04 | 13.0 | 13.2 | உடன்பாட்டு வினையும் எதிர்மறை வினையும் | 54-55 |
| 05 | 9.0 | 9.1 | தற்காலக் கவிதைகள் - ''சீறி ஓடாத வருங்கால மனித நதி'' | 56-57 |
| 06 | 13.0 | 13.2 | செய்வினையும் செயப்பாட்டு வினையும் வினையும் | 58-59 |
| 07 | 7.0 | 7.1 | ''மூத்தம்மா'' - சிறுகதை | 60-61 |
| 08 | 13.0 | 13.2 | ஏவல் வினையும் வியங்கோள் வினையும் | 62-63 |
| 09 | 11.0 | 11.1 | சிறுகதை எழுதுதல் | 64 |
| 10 | 13.0 | 13.2 | இணைப்பிடைச் சொற்கள் | 65-66 |
| 11 | 3.0 | 3.1 | அற்றைத் திங்கள் (நாடகம் ) | 67 |
| 12 | 11.0 | 11.1 | உரைச்சித்திரம் எழுதுதல் | 68-69 |
| 13 | 13.0 | 13.2 | இயல்பு வழக்கும் தகுதி வழக்கும் | 70-71 |
| 14 | 1.0 | 1.4 | நாடகத்தினை நயத்தல் | 72 |
| 15 | 9.0 | 9.1 | சுருக்கம் எழுதுதல் | 73-74 |
| 16 | 4.0 | 4.2 | விவாதம் | 76-76 |
| 17 | 12.0 | 12.2 | அருஞ்சொற்றொடர் | 77-78 |
| 18 | 12.0 | 12.2 | அடுக்கிடுக்குத் தொடர் | 79-80 |
| 19 | 9.0 | 9.1 | அபிப்பிராயம் எழுதுதல் | 81 |
| 20 | 11.0 | 11.2 | நேர்காணல் | 82-84 |
| 21 | 13.0 | 13.3 | சொற்றொடரும் வாக்கியமும் | 85-86 |
| 22 | 13.0 | 13.3 | வேற்றுமை | 87 |
| 23 | 11.0 | 11.2 | விமர்சனம் எழுதுதல் | 88-89 |
| 24 | 13.0 | 13.3 | அடைமொழிகள் | 90-91 |
| 25 | 11.0 | 11.1 | கட்டுரை எழுதுதல் | 92-93 |

**தேர்ச்சி** : 5.0 ஆக்கபூர்வமான செயற்றிறன் உடைய வாசகராகச் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம்** : 5.1 விடயத்தெளிவோடு வாசிப்புப் பொறிமுறைகளை அனுசரித்து வாசிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : தேயிலைத் தோட்டத்திலே (கவிதை).

**பாடவேளை** : 04

**கற்றற் பேறுகள் :**

- கவிதையைத் தெளிவாக உச்சரித்து வாசிப்பார்.
- எழுத்துக்களின் ஒலிபேதங்களை இனங்கண்டு உரிய தொனியோடு வாசிப்பார்.
- நிறுத்தக் குறிகளை அனுசரித்து வாசிப்பார்.
- சந்திபிரித்தும் கொண்டுகூட்டியும் வாசிப்பார்.
- ஏற்ற உணர்ச்சி வெளிப்படுமாறு வாசிப்பார்.
- பொருள் விளங்கி வாசிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- கவிதையை ஒலிக்கச் செய்து கிரகிக்க வழிகாட்டல்.
- கவிதையை இயற்றிய கவிஞர் சி.வி. வேலுப்பிள்ளை பற்றிக் கலந்துரையாடுதல்.
- தேயிலைத்தோட்ட மக்களின் வாழ்வியல் அம்சங்கள் பற்றிக் கலந்துரையாடுதல்.
- கவிதையை வாசிக்கச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- கவிதையினூடாக வெளிப்படும் தோட்டத்தொழிலாளரின் அவலங்கள் பற்றிக் கலந்துரையாடுதல்.
- கவிச்சிறப்புக்களை இனங்கண்டு வாசித்தல்.

**முதன்மைப் பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- சி.வி. வேலுப்பிள்ளை வட்டக்கொடை மடக்கும்புர தேயிலைத்தோட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். (1914-1984)
- 1960 களில் மலையக இலக்கிய உலகில் ஏற்பட்ட விழிப்புணர்வு, எழுச்சிக்கு வித்திட்டவர்களுள் பிரதானமானவர்.
- ஆங்கில எழுத்தாற்றலால் தோட்டத்தொழிலாளர்களின் பிரச்சினையை வெளியுலகத்திற்கு எடுத்துக்காட்டியவர்.

Vishmajani - கவிதை சார்ந்த நாடகம்.
Way Pairer - வசனகவிதைத் தொகுப்பு
Ceylon Tea Garden - கவிதை நூல்
Born to lebour - என்னும் விவரணக் கட்டுரைத் தொகுப்பு -இவை ஆங்கிலத்தில் வெளியானவை.
முதற்படி - கட்டுரை நூல்
காதற் சித்திரம், வீடற்றவன், இனிப்பட மாட்டேன் - நாவல்கள்.
தேயிலைத் தோட்டத்திலே - மொழிபெயர்ப்புக் கவிதை நூல்.

- சி.வி. வேலுப்பிள்ளையால் ஆங்கிலத்தில் இயற்றப்பட்ட தேயிலைத் தோட்டத்திலே என்னும் கவிதை சக்தீ-அ.பால-ஐயாவால் தமிழில் கவிதை வடிவிலேயே மொழிபெயர்க்கப்பட்டிருத்தல்.
- தோட்டத் தொழிலாளிகளின் அவலவாழ்க்கையை வெளிப்படுத்தல்.

- தேயிலைத் தோட்ட வளர்ச்சிக்காக தொழிலாளர்களது கடின உழைப்பு

    - ஊனையும் உடலையும் ஊட்டுதல்.
    - பசளையாக அப்பனின் உடலே புதைக்கப்பட்டிருத்தல்.
    - மகன் அப்பனின் புதைமேட்டில் ஏறிமிதித்து எவரோ வாழத் தன்னுயிர் தருதல்.

- இவர்களின் தியாகம் உரிய வகையில் மதிக்கப்படாமை

    - போற்றும் இரங்கற்புகழ் மொழி இன்மை.
    - கல்லறை இன்மை.
    - நினைவுநாள் அனுஷ்டிக்கப்படாமை.
    - உளங்கசிந்து அன்பு செலுத்தப்படாமை.
    - புதைமேட்டிலோர் பூவைத்தானும் வைக்காமை.

- கவிச்சிறப்புக்கள்

    - ''என் மக்கள்'' என உறவு கொள்ளுதல்.
    - ''என்னே மனிதர்'' என்று இவரை மறந்தவர்க்காக வெட்கப்படுதல்.
    - தன்னை மறைக்கத்தானோ இறைவனும் தளிர்பசும் புல்லால் தரை மறைத்தனனே – கற்பனைச் சிறப்பு.

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- பாட நூல்
- எழுது கருவி
- எழுது தாள்
- ஒலிப்பேழை

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- கவிதையைத் தெளிவாக உச்சரித்து வாசிப்பார்.
- எழுத்துக்களின் ஒலிபேதங்களை இனங்கண்டு உரிய தொனியோடு வாசிப்பார்.
- சந்திபிரித்தும் கொண்டுகூட்டியும் வாசிப்பார்.
- ஏற்ற உணர்ச்சி வெளிப்படுமாறு வாசிப்பார்.
- கவிதையின் பொருளை சொந்த மொழிநடையில் விளங்கிக் கூறுவார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | : | 12.0 | சொற்களஞ்சியத்தை விருத்தி செய்து பொருத்தமான வகையில் பிரயோகிப்பார். |
| **தேர்ச்சி மட்டம்** | : | 12.1 | சொற்களையும் அவற்றின் பொருளையும் அறிந்து செம்மையாகப் பிரயோகிப்பார். |
| **விடய உள்ளடக்கம்** | : | | முன்னொட்டுக்கள், பின்னொட்டுக்கள் |
| **பாடவேளை** | : | 02 | |

**கற்றற் பேறுகள் :**

- முன்னொட்டுக்கள், பின்னொட்டுக்கள் என்பவற்றை அறிந்து எழுதுவார்.
- முன்னொட்டுக்களையும், பின்னொட்டுக்களையும் அட்டவணைப்படுத்துவார்.
- முன்னொட்டுக்களையும், பின்னொட்டுக்களையும் பிரயோகித்துச் சொற்களை ஆக்குவார்.
- தமது ஆக்கங்களில் இவற்றைச் செம்மையாகப் பிரயோகிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- முன்னொட்டுக்கள், பின்னொட்டுக்கள் உள்ள சொற்களைக் காட்சிப்படுத்தல்
- இவை சொல்லாக்கத்திற் பயன்படுவதை உதாரணத்துடன் விளக்குதல்.
- முன்னொட்டுக்கள், பின்னொட்டுக்களை அட்டவணைப்படுத்துதல்.
- அவற்றின் மூலம் உருவாக்கப்படும் சொற்களை அட்டவணைப்படுத்துதல்.
- இவற்றை வாக்கியங்களிற் செம்மையாகப் பயன்படுத்தல்.

**முதன்மைப் பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- பெயர், வினைச் சொற்களின் முன்னர் ஒட்டிப் புதிய சொல்லை ஆக்கப் பயன்படுபவை முன்னொட்டுக்கள்.

  உ+ம்: கண் - கண்ணழித்தல், கண்ணோடுதல்.

  மறு - மறுமலர்ச்சி, மறுதலித்தல்.

  முன் - முன்னோக்கு, முன்னிலை.

- பெயர், வினை அடிகளின் பின்னால் ஒட்டப்பட்டுச் சொல்லாக்கத்திற்குப் பயன்படுபவை பின்னொட்டுக்கள்

  உ+ம்: நீர் + ஏரி = நீரேரி
  கூட்டு + உறவு = கூட்டுறவு

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- முன்னொட்டு, பின்னொட்டுகளின் அட்டவணை
- எழுது தாள்
- எழுது கருவி

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- முன்னொட்டுக்கள், பின்னொட்டுகளை அட்டவணைப்படுத்துவார்.
- இவற்றின் மூலம் சொற்களை உருவாக்குவார்.
- இவற்றை வாக்கிய ஆக்கத்திற் செம்மையாகப் பிரயோகிப்பார்.

**தேர்ச்சி** : 7.0 இரசனைக்காகவும் ஆக்கத்திறனை விருத்திசெய்யும் வகையிலும் வாசிப்பார்.

**தேர்ச்சி மட்டம்** : 7.1 படைப்புக்களை நயந்து வாசிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : தற்காலக் கவிதை (குழந்தையென எனது மனம்).

**பாடவேளை** : 04

**கற்றற் பேறுகள் :**

- படைப்பின் உள்ளடக்கத்தை அறிந்து வாசிப்பார்.
- படைப்பின் நுட்பங்களை உணர்ந்து வாசிப்பார்.
- ஓசைநயம் அணிகளை இனங்கண்டு வாசிப்பார்.
- கவிதையை நயந்து விளக்குவார்.
- கவிதையில் கூறப்படும் படிப்பினைகளை எடுத்துக்காட்டுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- பரிச்சயமான புதுக்கவிதைகளைக் காட்சிப்படுத்தி மாணவர்களுடன் கலந்துரையாடல்.
- காட்சிப்படுத்தப்பட்ட கவிதையின் உள்ளடக்கம், நயம், நுட்பங்களை விளக்குதல்.
- பாடப்பரப்பிலுள்ள கவிதை பற்றியும் ஆசிரியர் பற்றியும் கலந்துரையாடல்.
- கவிதையை வாசித்து, கூறவரும் செய்தியையும் ஆசிரியர் கையாண்ட நுட்பங்களையும் எடுத்துக்காட்டுதல்.

**முதன்மைப் பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

அகளங்கன் எனப்படும் நா.தர்மராஜா 14.12.1953 வவுனியாவிலுள்ள பம்பைமடுவில் பிறந்தார்.

“ செல் ‘வா’ ஆணையிட்டாய்” தமிழ் வீரம், தென்றலும் தெம்மாங்கும் - கவிதைத் தொகுப்புகள்

வாலி - புகழ்பெற்ற கட்டுரை நூல்

இலக்கிய நூல்கள் சிலவற்றுக்கு உரை எழுதியதுடன் நாமறிந்த நாவலர், இலக்கியத் தேறல் பாரதியாரின் சுதந்திரக் கவிதைகள் முதலிய நூல்களையும் எழுதினார்.

- குழந்தையென எனது மனம்......... எனும் கவிதையில் வன்னி மண்ணின் இயற்கை அழகில் மனம் குழந்தையெனக் குதூகலிக்கும் நிலை சித்திரிக்கப்பட்டிருத்தல்.
- கவிதையில் காணப்படும் சிறப்புக்கள்
    - முல்லையும் மருதமும் சேர்ந்த வன்னி நிலம் பற்றிய நுட்பமான வர்ணனைகள்
    - அணிகளின் பயன்பாடு
        - உவமை அணி – தேனருவியென வழியும் ஏருழவன் வியர்வை
        - உருவக அணி – குணக்குன்று, குலவிளக்கு

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- கவிதைப்பகுதி
- எழுதுகருவி
- எழுதுதாள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- கவிதையின் உள்ளடக்கத்தை விளங்கி வாசிப்பார்.
- வர்ணனைகளிலுள்ள சிறப்புக்களை நயந்து வாசிப்பார்.
- அணிகளை இனங்கண்டு வாசிப்பார்.
- கவிதை ஆக்கங்களின்போது கற்ற விடயங்களைப் பிரயோகிப்பார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | : | 13.0 | மொழியின் இலக்கணத்தையறிந்து அதற்கு அமைய மொழியைச் செம்மையாகக் கையாள்வார். |
| **தேர்ச்சி மட்டம்** | : | 13.2 | சொற்களின் வகையையும் இயல்பையும் அறிந்து அவற்றைப் பிரயோகிப்பார். |
| **விடய உள்ளடக்கம்** | : | | உடன்பாட்டு வினையும், எதிர்மறை வினையும் |
| **பாடவேளை** | : | 01 | |

**கற்றற் பேறுகள் :**

- வினைச்சொற்களை இனங்கண்டு பிரயோகிப்பார்.
- உடன்பாட்டுவினை, எதிர்மறைவினை என்பவற்றை இனங்கண்டு பயன்படுத்துவார்.
- எதிர்மறை வினைகள் ஆக்கப்படும் விதத்தினை அறிந்து பயன்படுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- வினைச்சொற்கள் சிலவற்றைக் கொடுத்து அவற்றில் ''வினை நிகழுகின்ற'' வினைச் சொற்கள் எவையென்றும் ''வினை நிகழாத'' வினைச் சொற்கள் எவையென்றும் வேறுபடுத்திக் காட்டுமாறு கேட்டல்.
- வினைச்சொற்களை எதிர்மறைப் பொருளில் ஆக்க உதவும் சொல்லுறுப்புக்களை இனங்காணும் வகையிலான செயற்பாடுகளை வழங்கல்.
- உடன்பாட்டு வினைகள் சிலவற்றைக் கொடுத்து எதிர்மறை வினைகளாக அவற்றை மாற்றி எழுதும்படி செய்தல்.

**முதன்மைப் பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- செயல் நிகழ்ந்தால் உடன்பாடு; செயல் நிகழாது போனால் எதிர்மறை.
- எதிர்மறை வினைகள் பின்வரும் வகைகளில் ஆக்கப்படலாம்.

  இல், அல், ஆ, மாட்டு - போன்ற இடைநிலைகளும், ''இல்லை'' எனும் எதிர்மறை வினைச்சொல்லும் பெற்று எதிர்மறை வினைகள் ஆக்கப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| உதாரணம் :- | இல் | - | நடந்திலன் |
| | அல் | - | நடக்கிலன் |
| | ஆ | - | நடவான் |
| | மாட்டு | - | வரமாட்டான் |
| | இல்லை | - | போகவில்லை, செய்யவில்லை. |

‘‘ஆக’’ என்னும் இடைநிலை பெற்றும் எதிர்மறை ஆக்கப்படும்.

உதாரணம் :- போகாதவன்
வாராதே

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பாடநூல், வகுப்பறைக் கற்பித்தலில் பயன்படுத்தக்கூடிய இலக்கண நூல்கள்.
- எழுது தாள்கள்
- எழுது கருவிகள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- உடன்பாட்டுவினை, எதிர்மறைவினை என்பவற்றுக்கு வரைவிலக்கணம் அமைப்பார்.
- எதிர்மறை வினைகள் ஆக்கப்படுவற்கு உதவும் இடைநிலைகளையும் சொல்லையும் இனங்கண்டு கூறுவார்.
- கொடுக்கப்படும் உடன்பாட்டு வினைகளை எதிர்மறை வினைகளாக மாற்றியமைப்பார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | : | 9.0 | வாசித்துக் கிரகித்தவற்றைத் தெளிவாக எழுதுவார். |
| **தேர்ச்சி மட்டம்** | : | 9.1 | வாசித்த விடயம் தொடர்பான கருத்துக்களை உள்வாங்கி எழுதுவார். |
| **விடய உள்ளடக்கம்** | : | | தற்காலக் கவிதைகள் (சீறி ஓடாத வருங்கால மனித நதி). |
| **பாடவேளை** | : | 02 | |

**கற்றற் பேறுகள் :**

- கவிஞர் கூறவந்த விடயத்தைக் கிரகித்து எழுதுவார்.
- கவிதையில் நயந்த பகுதிகளை எழுதுவார்.
- எழுதத்தெரியாத பையனின் பாத்திரச் சித்திரிப்பு பற்றி எழுதுவார்.
- கல்வியறிவற்றவரின் எதிர்கால நிலைபற்றி கூறப்படுவனவற்றை தொகுத்து எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- முன்னர் கற்ற தற்காலக் கவிதைகளை (தேயிலைத் தோட்டத்திலே, குழந்தையான எனது மனம்) மீண்டும் நினைவுபடுத்தி தற்காலக்கவிதைகளின் பண்புகள் பற்றி கலந்துரையாடல்.
- கவிஞர் சோலைக்கிளி பற்றி அறிமுகம் செய்தல்.
- கவிதையை உணர்வுபூர்வமாக வாசிக்கச் சந்தர்ப்பம் கொடுத்தல்.
- கவிஞர் கூறவந்த விடயம் பற்றிக் கலந்துரையாடல்.
- கவிதைச் சிறப்புகள் பற்றிக் கலந்துரையாடல்.

**முதன்மைப் பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

ஆசிரியர் அறிமுகம்.

இவரது இயற்பெயர் உதுமா லெவ்வை முகமது அதீக். இவர் கல்முனையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 1980 களில் கவிதைத் துறையில் பிரவேசித்த இவர். இருப்பு என்னும் சஞ்சிகையின் ஆசிரியர்களில் ஒருவர். நானும் ஒரு பூனை, பாம்பு நரம்பு மனிதன், பனியில் மொழி எழுதி, காகம் கலைத்த கனவு, எட்டாவது நகரம், என்ன செப்பங்கா நீ? போன்ற கவிதைத் தொகுதிகளை வெளியிட்டுள்ளார்.

இக்கவிதையில் ....

- எழுத்தறிவின்மையின் அவலம் சுட்டிக்காட்டப்பட்டிருத்தல்.
- கையொப்பத்திற்குப் பதிலாக பெருவிரலடையாளம் இடும்போது கவிஞர் அவனை இனங்காணுதல்.
- அவன் எதிர்காலத்தில்
    - உள்ளத்து உணர்வுகளை வெளியிட முடியாமை. (காதலிக்குக் கடிதம்)
    - ஆற்றலை வெளிப்படுத்தி வளர்ச்சியடைய முடியாமை.

"அந்த நதி வரும் நாளில்

சீறி ஒலியெழுப்பி ஓடாது

உறையும் சிறுதுளியாய்"

என்பன ஏற்படலாமென எச்சரித்தல். அதன் மூலம் கல்வியறிவின் அவசியத்தை வலியுறுத்தல்.

- கவிச்சிறப்புக்கள்
    - வாசகர் மனக்கண்முன் காட்சிகளைக் கொண்டுவரும் படிமங்கள்.

        "சீறி ஓடாத வருங்கால மனிதநதி"

        "பெரிய பரிதாபத்தின் முழு மொத்த வடிவம்"

        "மீசைக்கு விதை தூவி இளமை மழை பெய்யப் பயிர் முளைத்த பருவம்"
    - உவமை அணி

        "காகம் போல் அவன் விழுந்த வேலியோரமெல்லாம்"
    - நுட்பமான பாத்திர வர்ணனை

        "அழகு முகம் கீழுதடு இரத்தச்சிரிப்பு"
    - சிறப்பான சொல்லாட்சி

        "செத்த சிரிப்பு"

        "என் இதயம் கழன்று அவன் இட்ட ஒப்பத்தின் மேல் விழுந்து கத்தியது பின் கருகிப் பற்றியது"

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பாடநூல்
- எழுது கருவி
- எழுது தாள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- கவிஞர் கூறவிழைந்த விடையத்தை எழுதுவார்.
- கவிதையில் காணப்படும் சிறப்புக்களை இனங்கண்டு எழுதுவார்.
- எழுத்தறிவற்ற பையனின் மேல் கவிஞர் கொண்ட பரிதாப உணர்ச்சி வெளிப்படுத்தப்படும் விதம் பற்றி விளக்கி எழுதுவார்.
- கவிதை ஆக்கங்களின் போது கற்றுக்கொண்ட விடயங்களைப் பிரயோகித்து எழுதுவார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | : | 13.0 | மொழியின் இலக்கணத்தையறிந்து அதற்கு அமைய மொழியை செம்மையாகக் கையாள்வார். |
| **தேர்ச்சி மட்டம்** | : | 13.2 | சொற்களின் வகையையும் இயல்பையும் அறிந்து அவற்றைப் பிரயோகிப்பார். |
| **விடய உள்ளடக்கம்** | : | | செய்வினையும் செயப்பாட்டு வினையும் |
| **பாடவேளை** | : | 01 | |

**கற்றற் பேறுகள் :**

- செய்வினை, செயப்பாட்டு வினை என்பவற்றை வேறுபடுத்தி விளக்குவார்.
- செயப்பாட்டு வினையின் அமைப்பினை இனங்கண்டு கூறுவார்.
- செய்வினைகளை செயப்பாட்டு வினைகளாக்கிப் பிரயோகிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- மாணவர்கள் ஏற்கெனவே கற்றுள்ள (தரம்10 இல்) தன்வினை, பிறவினை தொடர்பில் நினைவூட்டிக் கலந்துரையாடல் (இதனைப் பாட அறிமுகமாகவும் அமைக்கலாம்).
- செய்வினை வாக்கியம் ஒன்றையும் செயப்பாட்டுவினை வாக்கியம் ஒன்றையும் காட்சிப்படுத்தி அவற்றுக்கிடையிலான வேறுபாடுகளைக் கேட்டுக் கலந்துரையாடல்.
- செய்வினை, செயப்பாட்டு வினை என்பவற்றிற்கு இடையிலான வேறுபாட்டை இனங்காட்டி விளக்கல்.
- செயப்பாட்டு வினைகள் சிலவற்றைக் காட்சிப்படுத்திக் கலந்துரையாடுவன் மூலம் செயப்பாட்டு வினைகளின் அமைப்பினை இனங்காட்டல்.
- செய்வினை வாக்கியங்களை வழங்கி அவற்றைச் செயப்பாட்டுவினை வாக்கியங்களாக்கி எழுத வழிகாட்டல்.
- பொருத்தமான கணிப்பீட்டினைத் திட்டமிட்டு வழங்கல்.

**முதன்மைப் பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- செயலுக்குரிய கர்த்தாவை எழுவாயாகக் கொள்ளும் வினைகள் செய்வினைகள் ஆகும்.
    - மாணவர்கள் ஓவியங்களைக் காட்சிப்படுத்தினர்.
- செயப்படுபொருளை எழுவாயாகக் கொள்ளும் வினைகள் செயப்பாட்டு வினைகள் எனப்படும்.
    - ஓவியங்கள் மாணவர்களால் காட்சிப்படுத்தப்பட்டன.
- செயப்படுபொருள் குன்றா வினைகளே செயப்பாட்டு வினைகளாக அமையும்.

- செயப்பாட்டு வினை

  வினையெச்சம் + துணைவினை + கால இடைநிலை + திணைபால் விகுதி

  கொல்ல + படு + ட் + ஆன் = கொல்லப்பட்டான்.

- செயப்பாட்டு வினைகளில் அடிச்சொல் வினையெச்சமாக அமையும். அத்தோடு துணைவினையையும் பெற்றுவரும்.

| செய்வினை |
|---|
| கஜன் பாலைக் **குடித்தான்.** |
| நதி ஒலி **எழுப்பியது.** |
| அவர் சோகங்களைப் **போக்கினார்.** |

| செயப்பாட்டு வினை |
|---|
| பால் கஜனால் **குடிக்கப்பட்டது.** |
| நதியால் ஒலி **எழுப்பப்பட்டது.** |
| சோகங்கள் அவரால் **போக்கப்பட்டன.** |

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- எழுது தாள்கள்
- எழுது கருவிகள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- செய்வினை என்றால் என்ன என்பதனை விளக்கிக் கூறுவார்.
- செயப்பாட்டு வினையையும் அதன் அமைப்பினையும் விளக்குவார்.
- செய்வினைகளை செயப்பாட்டு வினைகளாக்கிப் பிரயோகிப்பார்.
- வாக்கிய இயைபிற்கு ஏற்ப செய்வினை, செயப்பாட்டுவினை என்பவற்றைக் கையாள்வார்.

**தேர்ச்சி** : 7.0 இரசனைக்காகவும் ஆக்கத்திறனை விருத்திசெய்யும் வகையிலும் வாசிப்பார்.

**தேர்ச்சி மட்டம்** : 7.1 படைப்புக்களை நயந்து வாசிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : சிறுகதை “மூத்தம்மா”

**பாடவேளை** : 03.

**கற்றற் பேறுகள் :**

- சிறுகதை என்றால் என்ன என்பது பற்றிக் கூறுவார்.
- சிறுகதைக்குரிய பண்புகள் பற்றி விபரிப்பார்.
- பாத்திரங்களின் கருப்பொருள், பாத்திரவார்ப்புக்கள் பற்றி விளக்குவார்.
- சிறுகதையில் கையாளப்பட்ட உத்திகள் பற்றி எடுத்துரைப்பார்.
- சிறுகதையை வாசிக்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டியவை பற்றி விபரிப்பார்.
- சிறுகதையில் நயந்த பகுதிகள் பற்றி ஏனையோருடன் கலந்துரையாடி விமர்சிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- ஏற்கெனவே வாசித்த சிறுகதைகள் பற்றிக் கலந்துரையாடல்.
- சிறுகதை என்றால் என்ன? என்பது பற்றிக் கலந்துரையாடல்.
- சிறுகதை ஆசிரியர் பற்றிக் கலந்துரையாடுதல்
- சிறுகதையை வாசிக்கும்போது கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள் பற்றி விளக்கமளித்தல்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி சிறுகதையைத் தனித்தனியாக வாசிக்கச் செய்தல்.
- வாசித்த சிறுகதையைப் பற்றி பின்வரும் தலைப்புக்களில் குழுக்களிடையே கலந்துரையாடச் செய்தல்.
    - கதைக்கரு
    - கதை நிகழ்வுக்களம்
    - பாத்திரப் படைப்பு
    - மொழிநடை
    - கதையினூடாக வெளிப்படுத்தப்படும் படிப்பினைகள்
- பொருத்தமான கணிப்பீட்டினை மேற்கொண்டு மதிப்பிடல்.

**முதன்மைப் பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- ஆசிரியர் அறிமுகம்:
    - ஓட்டமாவடி அறபாத் என்று எழுதிவரும் எஸ்.எச்.அறபாத் மட்டக்களப்பு ஓட்டமாவடியைச் சேர்ந்தவர். இவரது சிறு கதைகள் ஆண்மரம், நினைந்தழுதல், உடைந்த கண்ணாடிகளில் மறைந்திருக்கும் குருவி எனத் தொகுதிகளாக வெளிவந்துள்ளன. ‘எரி நெருப்பிலிருந்து’, ’வேட்டைக்குப் பின்’ என்னும் கவிதைத் தொகுப்புகளையும் தந்துள்ளார்.

- சிறுகதை என்றால் என்ன என்பதன் விளக்கம்

- ஓர் உணர்ச்சியை / ஓர் அனுபவத்தை / ஒரு பிரச்சினையை வெளிப்படுத்துவது.
- நிகழ்ச்சிக் கோர்வை ஊடாகவோ உரையாடல் மூலமாகவோ பாத்திரங்களின் செயற்பாடுகள் ஊடாகவோ வளர்க்கப்படுவது
    - படைப்பின் போக்கு – ஆரம்பம், படிப்படியான வளர்ச்சி, முடிவு
    - யதார்த்தப் பண்பு

- சிறுகதையை கற்பிக்கும் போது கவனத்திற் கொள்ள வேண்டியவை:

    - எழுத்தாளனும் பின்னணியும்
    - கதைக்கரு
    - கதைப்பின்னல்
    - பாத்திரப் படைப்பு
    - உத்திகள்
    - நயந்த பகுதிகள்
    - விமர்சனம்
    - படிப்பினைகள் / விழுமியங்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- சிறுகதை - மூத்தம்மா
- எழுதுகருவி
- எழுதுதாள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- கதையின் களம், கருப்பொருள் பற்றிக் கூறுவார்.
- கதைக்கும் கதைத் தலைப்பிற்குமான பொருத்தப்பாட்டை விபரிப்பார்.
- கதாபாத்திரங்களின் இயல்புகள் பற்றி எடுத்துரைப்பார்.
- கதையின் மொழிநடை வர்ணனைச் சிறப்பை இனங்கண்டு எழுதுவார்.
- கதையின் வாயிலாக ஆசிரியர் கூறவந்த வாழ்வியல் அம்சங்களை விமர்சிப்பார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | : | 13.0 | மொழியின் இலக்கணத்தையறிந்து அதற்கு அமைய மொழியைச் செம்மையாகக் கையாள்வார். |
| **தேர்ச்சி மட்டம்** | : | 13.2 | சொற்களின் வகையையும் இயல்பையும் அறிந்து அவற்றைப் பிரயோகிப்பார். |
| **விடய உள்ளடக்கம்** | : | | வினைச் சொல் - ஏவல் வினையும், வியங்கோள் வினையும். |
| **பாடவேளை** | : | 01 | |

**கற்றற் பேறுகள் :**

- ஏவல் வினையினை இனங்கண்டு விளக்குவார்.
- ஏவல் வினையினை வகைப்படுத்திக் கூறுவார்.
- வியங்கோள் வினையினை இனங்கண்டு விளக்குவார்.
- வியங்கோள் வினையின் விகுதிகளை இனங்கண்டு கூறுவார்.
- ஏவல், வியங்கோள் வினைகளைப் பயன்படுத்தி பொருத்தமான வாக்கியங்கள் எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- மாணவர்கள் கற்றுள்ள வினைச்சொல் வகைகள் பற்றிக் கலந்துரையாடல் (பாடப் பிரவேசமாக அமையலாம்).
- பந்தியொன்றை வழங்கி அதில் இடம்பெற்றுள்ள ஏவல், வியங்கோள் வினைகளை இனங்காண வழிப்படுத்தல்.
- ஏவல் வினையின் இயல்பினையும் விகுதிகளையும் கலந்துரையாடி விளக்கல்.
- வியங்கோள் வினையின் இயல்பினையும் விகுதிகளையும் கலந்துரையாடி விளக்கல்.
- கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளல்.

**முதன்மைப் பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- முன்னிலையில் இருப்போரை இன்னது செய்யுமாறு கட்டளையிடும் / ஏவும் வினை வடிவம் ஏவல் வினை ஆகும்.

- வாழ்த்தல், வைதல், வேண்டல், விதித்தல் என்ற பொருள்களில் க, இய, இயர், அ, அல் ஆகிய விகுதிகளைப் பெற்றுவருவது வியங்கோள் வினை ஆகும்.

- இருதிணை ஐம்பால் மூவிடத்திற்கும் பொதுவாக அமைந்து ஒருமை, பன்மை வேறுபாடின்றி வியங்கோள் வினை அமையும்.

  உதாரணம் :- வாழ்க, வாழிய, வாழியர், வீழ்க, தருக.

**ஏவல் வினை**

1. நீங்கள் **வாருங்கள்**
2. நீங்கள் **குடியுங்கள்**
3. நீர் **அமரும்**
4. நீ இங்கே **வந்துவிடு**

**வியங்கோள் வினை**

1. அவர்கள் **வாழ்க!**
2. இறைவா **அருள்க!**
3. தமிழ் **வாழிய வாழியவே!**
4. கொடுமைகள் **வீழ்க!**

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- வியங்கோள் வினைகளும் வாக்கியங்களும் எழுதப்பட்ட டிமைன் தாள்கள்
- எழுது கருவி
- எழுது தாள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- மாணவர்கள் கற்றுள்ள வினைச்சொல் வகைகள் பற்றிக் கலந்துரையாடுவார்.
- பந்தியொன்றில் இடம்பெற்றுள்ள ஏவல் வினைகள், வியங்கோள் வினைகள் என்பவற்றை இனங்கண்டு எழுதுவார்.
- ஏவல் வினையின் இயல்பினையும் விகுதிகளையும் கூறுவார்.
- வியங்கோள் வினையின் இயல்பினையும் விகுதிகளையும் கூறுவார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | : | 11.0 | படைப்புக்களை வாசித்த அனுபவங்களின் ஊடாகப் படைப்பாக்க நுட்பங்களை அறிந்து ஆக்கங்களைச் சுயமாக எழுதுவார். |
| **தேர்ச்சி மட்டம்** | : | 11.1 | பல்வேறு ஆக்கங்களை எழுதுவார். |
| **விடய உள்ளடக்கம்** | : | | சிறுகதை எழுதுதல் |
| **பாடவேளை** | : | 01 | |

**கற்றற் பேறுகள் :**

- சிறுகதையின் கருப்பொருள், வடிவம், தலைப்பு முதலானவை பொருத்தமுற எழுதுவார்.
- கதை நிகழும் களத்துக்குரிய பாத்திர உரையாடலைப் பயன்படுத்துவார்.
- சிறுகதைகளிற் பயன்படும் உத்திகளை அறிந்து பிரயோகிப்பார்.
- எழுத்துப் பொறிமுறைகளையும் எழுத்தாக்க நுட்பங்களையும் அனுசரித்து எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- பாடப்பகுதியில் இடம்பெற்ற சிறுகதை ஒன்றை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடுதல்.
- கருப்பொருள் தெரிவு, கதை உருவாக்கல், கதைக்களம் என்பனபற்றிக் கலந்துரையாடல்.
- பாத்திர உரையாடல்களின் அமைப்புத் தொடர்பாகக் கலந்துரையாடல்.
- சிறுகதைகளிற் பயன்படுத்தப்படும் உத்திகள், தொடக்கம், வளர்ச்சி, முடிவு என்பன பற்றி விளக்குதல்.
- வழங்கப்படும் கருப்பொருளை அடிப்படையாகக் கொண்டு சிறுகதை எழுத நெறிப்படுத்தல்.

**முதன்மைப் பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- குறித்ததொரு சம்பவத்தின் அடியாக மனிதமனம் இயங்குகின்ற முறையைச் சித்திரிப்பதாகச் சிறுகதை அமைந்திருத்தல்.
  யன்னலின் ஊடே உலகைப்பார்ப்பது போல ஒரு குறுகிய பகுதியே கருப்பொருளாதல்.
  பாத்திரங்கள் இடம்பெற்ற போதிலும் நாவல் போன்று அவை வளர்க்கப்படுவதில்லை.
  கதை நிகழ்களத்திற்கேற்ற பாத்திர உரையாடல்

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- மாதிரிச்சிறுகதை.
- எழுது கருவி
- எழுது தாள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- சிறுகதை எழுதும்போது கவனிக்கவேண்டிய அம்சங்களை அறிந்து கூறுவார்.
- தரப்பட்ட கருப்பொருளுக்குரிய சிறுகதையை எழுதுவார்.
- கதை நிகழ் களத்திற்குப் பொருத்தமான பாத்திர உரையாடலைப் பயன்படுத்துவார்.
- சிறுகதைகளிற் பயன்படுத்தப்படும் உத்திகளை அறிந்து பிரயோகிப்பார்.

**தேர்ச்சி** : 13.0 மொழியின் இலக்கணத்தையறிந்து அதற்கு அமைய மொழியைச் செம்மையாகக் கையாள்வார்.

**தேர்ச்சி மட்டம்** : 13.2 சொற்களின் வகையையும் இயல்பையும் அறிந்து அவற்றைப் பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : இடைச் சொற்கள் - இணைப்பிடைச் சொற்கள்

**பாடவேளை** : 01

**கற்றற் பேறுகள் :**

- இணைப்பிடைச் சொற்களை இனங்கண்டு கூறுவார்.
- இணைப்பிடைச் சொற்களின் பயன்பாட்டினை அறிந்து விபரிப்பார்.
- இணைப்பிடைச் சொற்களைப் பயன்படுத்தி வாக்கியங்களை இணைத்து எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- இடைச்சொற்கள் தொடர்பான (தரம் 10) விடயங்களைப் பாடப் பிரவேசமாக மீட்டல்.
- இணைக்கப்பட்ட வாக்கியங்களை முன்வைத்துக் கலந்துரையாடுவதன் மூலம் இணைப்பிடைச் சொற்களை இனங்காண வழிப்படுத்தல்.
- இணைப்பிடைச் சொற்களின் பயன்பாடு பற்றி விளக்கல்.
- இணைப்பிடைச் சொற்களின் வகைகள் பற்றிக் கலந்துரையாடி விளக்கல்.
- இணைப்பிடைச் சொற்களைப் பயன்படுத்தி வாக்கியங்களை இணைத்து எழுத நெறிப்படுத்தல்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளல்.

**முதன்மைப் பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- வாக்கியங்களை இணைப்பதற்குப் பயன்படும் இடைச்சொற்கள், இணைப்பிடைச் சொற்கள் எனப்படுகின்றன.
- இணைப்பிடைச் சொற்கள் பல்வேறுபட்ட பொருள்களை உணர்த்தும் வண்ணமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

    - சமநிலை வாக்கியங்களை இணைக்கப் பயன்படுத்துவது.

    - காரணப் பொருளை உணர்த்தி இணைக்கப் பயன்படுத்துவது.

      அதனால், அதன் காரணமாக.

- மாற்றுப் பொருளை உணர்த்தி இணைக்கப் பயன்படுத்துவது.
  அல்லது, ஆதல், ஆவது, இல்லாவிட்டால், ஓ.

- மறுப்புப் பொருளை உணர்த்தி இணைக்கப் பயன்படுத்துவது.
  ஆயின், ஆயினும், ஆனால், எனினும், ஆனாலும்.

- இணக்கப் பொருளை உணர்த்தி இணைக்கப் பயன்படுத்துவது.
  ஆயினும், ஆனாலும், இருந்தாலும், இருப்பினும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- டிமைன் தாள்கள்
- எழுது கருவிகள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- இணைப்பிடைச் சொற்களை இனங்கண்டு எழுதுவார்.
- இணைப்பிடைச் சொற்கள் இணைக்கும்போது பொருள் உணர்த்துவதன் அடிப்படையில் அவற்றை வகைப்படுத்திக் கூறுவார்.
- இணைப்பிடைச் சொற்களைப் பயன்படுத்தி வாக்கியங்களை இணைத்து எழுதுவார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | : | 3.0 | பல்வேறு பாத்திரங்களை ஏற்று அவற்றின் இயல்புகளையும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்திப் பேசுவார். |
| **தேர்ச்சி மட்டம்** | : | 3.1 | பாத்திரங்களின் இயல்புகளுக்கேற்ப நடித்துப் பேசுவார். |
| **விடய உள்ளடக்கம்** | : | | அற்றைத் திங்கள் (நாடகம்) |
| **பாடவேளை** | : | 03 | |

**கற்றற் பேறுகள் :**

- நாடகத்தின் கதைக்கருவினை அறிந்து கூறுவார்.
- பாத்திரப் பண்புகளை வெளிப்படுத்தி நடிப்பார்.
- நாடகத்தின் கருப்பொருளை நடைமுறை வாழ்வுடன் தொடர்புபடுத்தி ஒப்பிட்டுக் கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- பாடப்பகுதியின் கதையினை சுருக்கமாக விபரித்தல்.
- மாணவர்களை குழுக்களாக்கி அனைவரும் நடிப்பில் பங்குபற்ற வழிப்படுத்தல்.
- பொருத்தமான பாத்திரத்தை ஏற்று நடிக்கச் செய்தல்.
- நாடகத்தின் கருப்பொருள் தற்காலத்திற்குப் பொருந்துமாறு விளக்குதல்.

**முதன்மைப்பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- ஆசிரியர் அறிமுகம் :
  இந்நாடகத்தை எழுதியவர் இன்குலாப். இவரது இயற்பெயர் சாகுல் ஹமீத். அடிப்படையில் இவர் ஒரு கவிஞர் ஆவார். குறள்கள், எதிர்ச்சொல், புலிநகச் சுவடுகள், பொன்னிக்குருவி, என்பவை இவரது கவிதைத் தொகுப்புக்களாகும். ஔவை, மணிமேகலை, குறிஞ்சிப்பாட்டு என்பவை இவரது பிற நாடகங்கள் ஆகும்.

- அற்றைத்திங்கள் வரலாற்றுச் சுருக்கம்.
    - பாரிமன்னன் சிறந்த கொடையாளி. அதனால் சேர, சோழ, பாண்டியன் எனும் மூவேந்தர்கள் அவன் மீது பொறாமை கொண்டு மூவரும் அவன் மீது படையெடுத்து பாரியைக் கொன்றார்கள். அதன்பின் பாரிமீது மிகுந்த அன்பும் மதிப்பும் கொண்ட கபிலர் பாரியின் மகள்களான அங்கவை, சங்கவை இருவரையும் பராமரித்து வருகின்றார். இச்சந்தர்ப்பத்தில் எழுதப்பட்டதே அற்றைத் திங்கள் என்ற புறநானூற்றுப் பாடலாகும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- பாட நூல்
- எழுது தாள்
- எழுது கருவி

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- நாடகத்தின் கதைக் கருவினையும் கதைப்போக்கினையும் அறிந்து கூறுவார்.
- நாடகத்தை நடித்துக் காட்டுவார்.
- செய்யுள் இலக்கியங்களைப் பொருத்தமான வகையில் நாடகமாக எழுதுவார்.
- நாடகக் கதையானது தற்காலத்திற்கு பொருந்துமாற்றை விபரித்துக் கூறுவார்.

**தேர்ச்சி** : 11.0 படைப்புக்களை வாசித்த அனுபவங்களின் ஊடாக, படைப்பாக்க நுட்பங்களை அறிந்து ஆக்கங்களைச் சுயமாக எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம்** : 11.1 பல்வேறு ஆக்கங்களை எழுதுவார்.

**விடய உள்ளடக்கம்** : உரைச்சித்திரம்.

**பாடவேளை** : 01

**கற்றற் பேறுகள் :**

- உரைச்சித்திரத்தின் அமைப்பினையும் இயல்பினையும் உள்வாங்கி எழுதுவார்.
- விடயத்திற்குப் பொருத்தமாக அவதானிப்புகள், சிந்தனைகளை வெளிப்படுத்தி எழுதுவார்.
- விடயத் தொடர்ச்சியுடன் கேட்போரைக் கவரும் வகையில் எழுதுவார்.
- பொருத்தமான மொழிநடையில் விளக்கமாக எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- வானொலியில் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகள் பற்றிக் கேட்டுக் கலந்துரையாடி உரைச்சித்திர நிகழ்ச்சியை அறிமுகப்படுத்தல் (பாடப் பிரவேசமாக அமையலாம்)
- மாதிரி உரைச்சித்திரம் ஒன்றினை ஒலிபரப்புதல்.
- உரைச்சித்திரத்தின் அமைப்பு இயல்பு தொடர்பில் கலந்துரையாடல்.
- விடயத் தலைப்புக்களை வழங்கி, பொருத்தமான உரைச்சித்திரங்களை மாணவர்கள் எழுத வழிப்படுத்தல்.

**முதன்மைப்பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- உரைச்சித்திரம் என்பது பெரும்பாலும் வானொலியில் ஒலிபரப்பாகும் ஒரு நிகழ்ச்சியாகும்.
- குறித்ததொரு விடயம் தொடர்பில் 2-4 குரல்கள் மாறிமாறி ஒலிக்கும் வண்ணமாக அமையும் நிகழ்ச்சி இதுவாகும்.
- சாதாரண உரையாடல் முன்னிலையிலுள்ளவரை விளித்துக் கூறுவதாக அமையும். உரைச்சித்திரம் அவ்வாறு அமைவதில்லை.
- உரைச்சித்திரத்தில் கருத்துச் செறிவுள்ள, நியம மொழிநடை கையாளப்படும்.
- உரைச்சித்திரத்தில் பாத்திரங்களுக்கோ, பாவங்களுக்கோ முக்கியத்துவம் இருக்காது. குரல்வளத்திற்கே முன்னுரிமை வழங்கப்படும்.

- உரைச்சித்திரம் எழுதுவதற்காக வழங்கப்படக்கூடிய மாதிரித் தலைப்புகள்.

    - இலக்கிய கலாநிதி ஏ. பெரியதம்பிப்பிள்ளை.
    - தமிழில் சினிமா
    - விகிதாசாரத் தேர்தல் முறை
    - வாசிப்பை நேசிப்போம்
    - தமிழர் பண்டிகைகள்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- உரைச்சித்திரம் அடங்கிய இறுவட்டு
- இறுவட்டு
- டிமைன் தாள்
- எழுதுகருவிகள்.

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- உரைச்சித்திரத்தின் அமைப்பினையும் இயல்பினையும் இனங்கண்டு கூறுவார்.
- விடயத்திற்குப் பொருத்தமாகத் தொடர்ச்சியுடன் எழுதுவார்.
- பொருத்தமான மொழிநடையைக் கையாண்டு எழுதுவார்.
- எடுத்துக்கொண்ட விடயத்தில் கவர்ச்சிகரமாக உரைச்சித்திரம் ஒன்றினை எழுதுவார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | : | 13.0 | மொழியின் இலக்கணத்தை அறிந்து அதற்கு அமைய மொழியைச் செம்மையாகக் கையாள்வார். |
| **தேர்ச்சி மட்டம்** | : | 13.2 | சொற்களின் வகையையும் இயல்பையும் அறிந்து அவற்றைப் பிரயோகிப்பார். |
| **விடய உள்ளடக்கம்** | : | | இயல்பு வழக்கு, தகுதி வழக்கு. |
| **பாடவேளை** | : | 01 | |

**கற்றற் பேறுகள் :**

- இயல்பு வழக்கு, தகுதி வழக்கு என்பவற்றை இனங்கண்டு பிரயோகிப்பார்.
- இயல்பு வழக்கு, தகுதி வழக்கு என்பவற்றைச் சுருக்கமாக விளக்குவார்.
- இயல்பு வழக்கில் அடங்கும் இடக்கரடக்கல்,மங்கலம், குழூ உக்குறி என்பவற்றை பொருத்தமுறப் பிரயோகிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- இயல்பு வழக்கு, தகுதி வழக்கு ஆகியவற்றை சுருக்கமாக விளக்கிக் கூறும் வகையில் மாணவர்களை வழிப்படுத்தத் திட்டமிடல்.
- இவ்வழக்குகள் தமிழில் பாரம்பரியமாக இருந்து வருவன என்பதை விளக்குதல்.
- மொழிப்பிரயோகத்தில் ஒரு பண்பு நிலையை இது விளக்குவதாகும் என்பதை உணரச் செய்தல்.
- இவ்விரு வழக்கின் பிரிவுகள் யாவற்றுக்கும் விளக்கமும் உதாரணமும் கொடுத்தல்.

**முதன்மைப்பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- இயல்பு வழக்கு, தகுதி வழக்கு என்பன தமிழில் நீண்ட காலமாக வழங்கிவரும் வழக்குகள் ஆகும்.
- இயல்பு வழக்கு இலக்கணமுடையது, இலக்கணப்போலி, மரூஉ என மூன்றாகும்.
- தகுதி வழக்கு இடக்கரடக்கல், மங்கலம், குழூஉக்குறி என மூன்றாகும்.

## இயல்பு வழக்கு

1. **இலக்கணமுடையது** :-

இலக்கண விதியின்படி அமைந்த சொற்களும் தொடர்களும் இலக்கணமுடையது என பொருள்படும்.

உதாரணம் :- மலை, மண், கட்புலன், கயல்விழி, கற்றூண்.

2. **இலக்கணப்போலி :-**

சொற்றொடர்களில் அமைந்த சொற்களை முன்பின்னாக மாற்றினாலும் சொற்றொடர்களிடையே வரும் எழுத்துக்கள் சிலவற்றுக்குப் பதிலாக வேறு எழுத்துக்களை மாற்றினாலும் அவ்வாறான சொற்கள் அல்லது சொற்றொடர்கள் இலக்கணப் போலி எனப்படும்.

| | | |
|---|---|---|
| உதாரணம் :- இல்முன் | - | முன்றில் |
| பொதுகில் | - | பொதியில் |
| நகர்ப்புறம் | - | புறநகர் |

3. **மரூஉ :-**

சொற்றொடர்களிடையே சில எழுத்துக்கள் குறைந்து அச்சொற்றொடர்கள் குறுகிய வடிவில் அமைவது ''மரூஉ'' எனப்படும்.

உதாரணம் :- அருமருந்தன்ன பிள்ளை - அருமந்த பிள்ளை

## தகுதி வழக்கு

1. **இடக்கரடக்கல்**

சபையில் சொல்லத் தகாததை குறிப்பாகவே சொல்லால் சொல்வது இடக்கரடக்கல் எனலாம்.

உதாரணம் :- கால் கழுவி வந்தேன்.
குளத்துக்குப் போய் வந்தார்.

2. **மங்கலம்**

இறந்தவரை அமரரானார் என்பது.

தாலி அறுந்தது என்று கூறாமல் தாலி பெருகிற்று எனல்.

3. **குழூஉக்குறி**

ஒரு குழுவினர் தமக்குள் மட்டும் விளக்கத்தக்கதாகப் பயன்படுத்தும் சொற்கள் குழூஉக்குறி என அழைக்கப்படும்.

| | | |
|---|---|---|
| பொன் | - | பறி (நகைத்தொழில் சார்ந்தோர்) |
| கள் | - | சொல்விளம்பி (வேடர்) |

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- டிமைன் தாள்கள்.
- எழுது கருவிகள்.
- எழுது தாள்கள்.

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- இயல்பு வழக்கு, தகுதி வழக்கினை விளங்கிக் கூறுவார்.
- இயல்பு வழக்கு, தகுதி வழக்குகளுக்கு உதாரணங்களை எடுத்துக் காட்டுவார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | : | 1.0 | பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ப வினைத்திறனுடன் கேட்டுக்கிரகித்துத் துலங்குவார். |
| **தேர்ச்சி மட்டம்** | : | 1.4 | செயற்றிறனும் வினைத்திறனும் உள்ள கேட்போராகச் செயற்படுவார். |
| **விடய உள்ளடக்கம்** | : | | நாடகத்தை நயத்தல். |
| **பாடவேளை** | : | 02 | |

**கற்றற் பேறுகள் :**

- கேட்டலில் விருப்புடன் ஈடுபடுவார்.
- விடயத்தைக் கிரகித்துக் கூறுவார்.
- நாடகத்தின் கதைக்கருவையும் பாத்திரங்களின் முக்கியத்துவத்தையும் கூறுவார்.
- நாடகத்தில் நயந்த பகுதிகளையும் அதற்கான காரணத்தையும் கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- மாணவர்கள் அண்மையில் பார்த்து நயந்த நாடகம் பற்றிக் கேட்டுக் கலந்துரையாடல்.
- அவர்கள் நயந்த விடயங்களைப் பட்டியற்படுத்துதல்.
- குறித்த நாடகத்தை வாசிக்கச் செய்து கலந்துரையாடல்.
- கலந்துரையாடப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நாடக விமர்சனம் எழுத நெறிப்படுத்தல்.

**முதன்மைப்பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- நாடகத்தை விளங்கிக் கொண்டு அதிலுள்ள சிறந்த பகுதிகளை நயந்து கூறுதல்.
- நயக்கப்படும் ஆக்கத்தின்
    - கருப்பொருள்
    - நாடகமாக்கப்பட்ட முறைமை
    - காட்சிமாற்றங்கள்
    - பாத்திர உரையாடல்கள் மூலம் வெளிப்படும் பாத்திரங்களின் பண்புகள்
    - நாடகத்தை நகர்த்திச் செல்லக் கையாளப்பட்ட உத்திகள்

    என்பவற்றைக் கருத்தில் கொள்க.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- மாதிரி நாடக எழுத்துரு.
- எழுது கருவி.
- எழுது தாள்.

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- நாடகமொன்றின் கருப்பொருளை அறிந்து கூறுவார்.
- நாடகத்தின் நயக்கத்தக்க பகுதிகளையும், அதற்கான காரணங்களையும் இனங்கண்டு கூறுவார்.
- நாடக எழுத்தாளர் பயன்படுத்திய உத்திகளை அறிந்து கூறுவார்.
- பாத்திரங்களின் பண்புகளையும் குணாம்சங்களையும் கூறுவார்.

**தேர்ச்சி** : 9.0 வாசித்துக் கிரகித்தவற்றைத் தெளிவாக எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம்** : 9.1 வாசித்த விடயம் தொடர்பான கருத்துக்களை உள்வாங்கி எழுதுவார்.

**விடய உள்ளடக்கம்** : சுருக்கம் எழுதுதல்.

**பாடவேளை** : 03

**கற்றற் பேறுகள் :**

- பிரதான கருத்தை இனங்கண்டு எழுதுவார்.
- துணைக்கருத்துக்களை எழுதுவார்.
- சுருக்கம் எழுதும் நுட்பங்களை உள்வாங்கி எழுதுவார்.
- கேட்கப்பட்ட சொற்களுக்குள் சுருக்கி எழுதுவார். மூன்றில் ஒன்றாக எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள் :**

- மாணவர்கள் தமது கருத்துக்களைச் சுருக்கமாகக் கூறவேண்டிய சந்தர்ப்பங்களைக் கேட்டுக் கலந்துரையாடல் (பாடப்பிரவேசமாக அமையலாம்).
- சுருக்கம் எழுதும்போது கவனிக்கவேண்டிய விடயங்கள் பற்றிக் கலந்துரையாடல்.
- மாதிரிப் பந்தியொன்றினைக் காட்சிப்படுத்தி எவ்வாறு முதல், துணைக் கருத்துக்களைத் தெரிவு செய்வது என்பது பற்றிக் கலந்துரையாடல்.
- மாணவர்களின் பாடப்பரப்பிலுள்ள பந்தியொன்றினைத் தெரிவு செய்து சுருக்கி எழுத நெறிப்படுத்துதல்.

**முதன்மைப்பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- சுருக்கம் எழுதத் தொடங்கும் முன்னர் கவனிக்கவேண்டியவை:
    - வாசித்தலும் கிரகித்தலும் - தரப்பட்ட பகுதி கூறும் விடயத்தைத் தெளிவாக அறிந்து கொள்ளப் பலமுறை வாசித்தலும் கிரகித்தலும்.
    - குறிப்பெடுத்தல் - பிரதான விடயங்கள் யாவற்றையும் குறித்துக் கொள்ளல்.
    - ஒழுங்கமைத்தல் - குறித்துக்கொண்ட அம்சங்களை ஒழுங்குபடுத்தல்.
    - எழுதுதல் - ஒழுங்குபடுத்தப்பட்ட குறிப்புக்களை ஆதாரமாகக்கொண்டு சுருக்கம் எழுதுதல்.

- சுருக்கம் எழுதும்போது கவனிக்கப்படவேண்டியவை:
    - சொல் எண்ணிக்கை (மிக முக்கியமானது)
    - இடம்பெறும் அணிகளை நீக்கி மையக் கருத்தை எழுதுதல்.
    - உதாரணங்களை நீக்குதல்.
    - தொடர் மொழிக்கு ஒருமொழி என்பதனைப் பயன்படுத்தல்.
    - புள்ளிவிபரங்கள், மேற்கோள்களை நீக்கி மையக்கருத்தை மட்டும் எழுதுதல்.
    - தேவையற்ற வர்ணனைகளை நீக்குதல்.
    - சொந்த மொழிநடையில் எழுதுதல்.

**மாதிரிச் சுருக்கம்.**

உலகம் இனிது நடைபெறுவதற்கும் மக்கள் உயர் நலமுறுவதற்கும் இலட்சியங்கள் கருவியாகின்றன. இலட்சியம் பழைமையிற் பழைமையும், புதுமையும் பெற்று நிலைபேறடைந்து திகழ்கின்றது. இலட்சியத்தினதும், பழையது வேறொன்றில்லை. புதியதும் வேறொன்றில்லை. முன்னோரும் இட்சியத்தால் ஈடேறினர். நாமும் இலட்சியத்தால் ஈடேறுகின்றோம். இலட்சியமே நம் பின்னோரையும் ஈடேற்றும் வழியாயமையும் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

**பிரதான கருத்து.**

- மக்கள் உயர்வடைய இலட்சியம் பிரதானமானது.

**துணைக் கருத்துக்கள்.**

- எமது முன்னோர்கள் இலட்சியத்தால் ஈடேறினர்.
- நாமும் இலட்சியத்தால் ஈடேறுகிறோம்.
- பின்னோர்களும் இலட்சியத்தால் ஈடேறுவார்கள்.

**சுருக்கம்.**

மக்கள் உயர்வு அடைய இலட்சியங்கள் பிரதானமானவை, ஏனெனில், முன்னோர்களின் ஈடேற்றத்திற்கும் எமது முன்னேற்றத்திற்கும் உதவியதால் பின்னோருக்கும் உதவும்.

(13 சொற்கள்)

## தரவிருத்தி உள்ளீடுகள் :

- மாதிரிச் சுருக்கம்
- எழுது கருவிகள்
- எழுது தாள்

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள் :

- சுருக்கம் எழுதும்போது கவனிக்க வேண்டிய விடயங்களை அறிந்து கூறுவார்.
- சுருக்கம் எழுதவேண்டிய விதிமுறைகளைப் பின்பற்றி மாதிரிப்பந்தியைச் சுருக்கி எழுதுவார்.
- கிரகித்த விடயங்களைத் தர்க்க ரீதியாக முன்வைப்பார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | : | **4.0** | தமது எண்ணங்களைக் கேட்போர் உள்ளங்கொள்ளத்தக்க வகையில் எடுத்துரைப்பார். |
| **தேர்ச்சி மட்டம்** | : | **4.2** | எடுத்துக் கொண்ட விடயத்துக்குப் பொருத்தமாக பொருட்செறிவோடு பேச்சு நுட்பங்களைக் கையாண்டு பேசுவார். |
| **விடய உள்ளடக்கம்** | : | | விவாதம். |
| **பாடவேளை** | : | 03 | |

**கற்றற் பேறுகள் :**

- தலைப்பினைப் புரிந்துகொண்டு பொருத்தமாகப் பேசுவார்.
- தனது கருத்தை வலியுறுத்தியும் (ஒட்டியும்) எதிர்த்தரப்பார் கருத்தை நிராகரித்தும் (வெட்டியும்) பேசுவார்.
- பிரதான விடயங்களுக்கு அழுத்தங்கொடுத்து தர்க்கித்துப் பேசுவார்.
- பொருத்தமான மொழிநடையினைக் கையாண்டும், முகபாவம், தொனி என்பவற்றை அனுசரித்தும் பேசுவார்.
- நேரக்கட்டுப்பாட்டினை அனுசரித்துப் பேசுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள் :**

- சிறிய விவாதம் ஒன்றைக் காட்சிப்படுத்தி அது தொடர்பாகக் கலந்துரையாடல் (பாடப்பிரவேசமாக அமையும்)
- விவாதமொன்றில் ஈடுபடும்போது கவனிக்க வேண்டிய விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடலினூடாக விளக்குதல்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி விவாதத்திற்குரிய தலைப்புக்களை வழங்கி மாணவர்கள் விவாதத்திற்குத் தயார்ப்படுத்திக் கொள்ள வழிப்படுத்தல்.
- மாணவர்கள் விவாதத்தில் பங்குபற்றுவதற்குச் சந்தர்ப்பமளித்தல்.

**முதன்மைப்பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- தலைப்பு / விடயத்திற்குப் பொருத்தமாக ஒட்டியும் வெட்டியும் கருத்துக்களை முன்வைத்தலே விவாதம் ஆகும்.
- காரண, காரியத் தொடர்புகாட்டித் தர்க்கித்தலே விவாதத்தின் அடிப்படையாகும்.
- தமது அணிசார்பான கருத்துக்களை வலியுறுத்துவதோடு எதிரணி சார்பான கருத்துக்களை உரிய காரணங்காட்டி நிராகரிப்பதும் அவசியமாகும்.
- பொருத்தமானதும் பண்பானதுமான மொழிநடையை கையாள்தல் அவசியமானது.
- நேரக்கட்டுப்பாட்டினை அனுசரித்தல் இன்றியமையாதது.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- மாதிரி விவாத இறுவட்டு.
- காகிதாதிகள்.
- எழுது கருவிகள்.

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- விடயத் தலைப்பினை விளங்கிக்கொண்டு விவாதிப்பார்.
- தலைப்பிற்கேற்ப ஒட்டியும் வெட்டியும் பேசுவார்.
- பிரதான கருத்துக்களை வலியுறுத்திக் கூறுவார்.
- தர்க்க நடையைக் கையாண்டு விவாதிப்பார்.
- பண்புடன் பேசுவார்.
- நேரக்கட்டுப்பாட்டினை அனுசரித்துப் பேசுவார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | : | 12.0 | சொற்களஞ்சியத்தை விருத்தி செய்து பொருத்தமான வகையில் பிரயோகிப்பார். |
| **தேர்ச்சி மட்டம்** | : | 12.2 | சொற்றொடர்களின் பொருளையும் வகையையும் அறிந்து செம்மையாகப் பிரயோகிப்பார். |
| **விடய உள்ளடக்கம்** | : | | அருஞ்சொற்றொடர்கள் |
| **பாடவேளை** | : | 05 | |

**கற்றற் பேறுகள் :**

- அருஞ்சொற்றொடர்களை இனங்கண்டு கூறுவார்.
- அருஞ்சொற்றொடர்களின் பொருளறிந்து விளக்குவார்.
- அருஞ்சொற்றொடர்களை வாக்கியங்களில் கையாண்டு எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- அருஞ்சொற்றொடர்கள் அடங்கிய வாக்கியமொன்றை அறிமுகப்படுத்தி பாடத்தை ஆரம்பித்தல்.
- அருஞ்சொற்றொடர்கள் அடங்கிய சொல்லட்டைகளை முன்வைத்து அவற்றின் பொருள் தொடர்பில் கலந்துரையாடல்.
- அருஞ்சொற்றொடர்களைக் கையாண்டு பொருத்தமுற வாக்கியங்கள் அமைக்க வழிகாட்டல்.
- அருஞ்சொற்றொடர்களின் முக்கியத்துவம், பயன்பாடு தொடர்பில் கலந்துரையாடல்.

**முதன்மைப்பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- கருத்துச் செறிவும் நயமும் நிறைந்த சொற்றொடர்களை அருஞ்சொற்றொடர்கள் என்பர்.
- அருஞ்சொற்றொடர்கள், வாக்கியங்களை அழகுபடுத்துவதோடு, கருத்தினைத் தெளிவாகவும் அழுத்தமாகவும் உணர்த்துகின்றன.
- இவை இலக்கியங்களிலும் பத்திரிகை, வானொலி முதலிய ஊடகங்களிலும் பயின்று வந்து மொழிவளத்திற்கு ஆக்கந் தருகின்றன.
- அருஞ்சொற்றொடருக்குச் சில உதாரணங்கள்:-

  - அகமும் முகமும் மலர்ந்து.
  - அண்ட சராசரம் அனைத்தும்.
  - அருணெறி போற்றாது மருணெறி போற்றி.
  - ஆடையின்றி வாடையின் மெலிந்து.
  - உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசி.
  - ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்கும்.

- தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்.
- நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும்.
- நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த.
- மனம்போன போக்கிற் சென்று.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- சொல்லட்டைகள்.
- டிமைன் தாள்கள்.
- எழுது கருவிகள்.

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- அருஞ்சொற்றொடர்களை இனங்கண்டு விளக்குவார்.
- அருஞ்சொற்றொடர்களை பொருத்தமாக வாக்கியங்களில் பிரயோகிப்பார்.
- அருஞ்சொற்றொடர்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து துலங்குவார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | : | 12.0 | சொற்களஞ்சியத்தை விருத்தி செய்து பொருத்தமான வகையில் பிரயோகிப்பார். |
| **தேர்ச்சி மட்டம்** | : | 12.2 | சொற்றொடர்களின் பொருளையும் வகையையும் அறிந்து செம்மையாகப் பிரயோகிப்பார். |
| **விடய உள்ளடக்கம்** | : | | அடுக்கிடுக்குத் தொடர் |
| **பாடவேளை** | : | 05 | |

**கற்றற் பேறுகள் :**

- அடுக்கிடுக்குத் தொடர்களை இனங்கண்டு கூறுவார்.
- அடுக்கிடுக்குத் தொடர்களின் பொருளறிந்து விளக்குவார்.
- பொருத்தமான இடங்களில் அடுக்கிடுக்குத் தொடர்களை வாக்கியங்களில் அமைத்து எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- பாடப்பிரவேசத்தினைப் பொருத்தமாகத் திட்டமிடல்.
- இரட்டைக்கிளவி, அடுக்குத் தொடர், அடுக்கிடுக்குத் தொடர் முதலியன உள்ளடங்கிய பந்தியொன்றை வழங்கி, அவற்றினை வகைப்படுத்தி இனங்காண வழிப்படுத்தல்.
- அடுக்கிடுக்குத் தொடர்களின் தனித்துவத்தை இனங்காட்டி விளக்கல்.
- அடுக்கிடுக்குத் தொடர்களை வாக்கியங்களில் அமைத்துக் கூற / எழுத வழிப்படுத்தல்.
- பொருத்தமான பயிற்சிகளை வழங்கல்.
- கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளல்.

**முதன்மைப்பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- வாக்கியங்களை அழகுபடுத்தவும் அர்த்தமுடையதாக்கவும் உதவும் தொடர்களில் அடுக்கிடுக்குத் தொடரும் ஒன்றாகும்.
- அடுக்குத் தொடர்கள் முன்மொழி விகாரமடைந்து, மிகுதிப்பொருளை உணர்த்தி அடுக்கிடுக்குத் தொடராக பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

| | |
|---|---|
| சிறிய சிறிய | சின்னஞ்சிறிய |
| சிவந்த சிவந்த | செக்கச் சிவந்த |
| தெளிவு தெளிவு | தெள்ளத் தெளிவு |

- எல்லா அடுக்குத் தொடர்களும் அடுக்கிடுக்குத் தொடராக மாறாது.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- சொல்லட்டைகள்.
- எழுது தாள்கள்.
- எழுது கருவிகள்.

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- அடுக்கிடுக்குத் தொடர்களின் தனித்துவத்தை இனங்கண்டு விளக்குவார்.
- அடுக்கிடுக்குத் தொடர்களின் பயன்பாட்டினை இனங்கண்டு கூறுவார்.
- அடுக்கிடுக்குத் தொடர்களை பொருத்தமாக வாக்கியங்களில் அமைத்து எழுதுவார்.

**தேர்ச்சி** : 9.0 வாசித்துக் கிரகித்தவற்றைத் தெளிவாக எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம்** : 9.1 வாசித்த விடயம் தொடர்பான கருத்துக்களை உள்வாங்கி எழுதுவார்.

**விடய உள்ளடக்கம்** : அபிப்பிராயம் எழுதுதல்.

**பாடவேளை** : 03

**கற்றற் பேறுகள் :**

- விடயமொன்றை வாசித்து, மையக்கருத்தையும் துணைக்கருத்தையும் உள்வாங்கி எழுதுவார்.
- வாசித்த விடயம் தொடர்பான தமது அபிப்பிராயங்களை எழுதுவார்.
- பொருத்தமான மொழிநடையினைக் கையாண்டு எழுதுவார்.
- காரணகாரியத் தொடர்புடன் எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- பொருத்தமானதும் சுருக்கமானதுமான விடயம் / செய்தியொன்றைக் காட்சிப்படுத்தி, அது தொடர்பான மாணவர்களின் அபிப்பிராயங்களைக் கேட்டுக் கலந்துரையாடுவதன் மூலமாக ஆளுக்கு ஆள் அபிப்பிராயங்கள் வேறுபடுவதனை இனங்காட்டல் (பாடப்பிரவேசமாக அமையும்).
- அபிப்பிராயம் எழுதும்பொழுது அனுசரிக்க வேண்டிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடல்.
- மாணவர்கள் கற்ற கவிதை / சிறுகதை அல்லது பொருத்தமான விடயம் ஒன்றை வழங்கி மாணவர்கள் அதனை வாசிக்கச் சந்தர்ப்பம் வழங்கல்.
- மேற்படி விடயம் தொடர்பாக மாணவர்களின் அபிப்பிராயங்களைக் கேட்டுக் கலந்துரையாடல்.
- மாணவர்கள் தமது அபிப்பிராயங்களை ஒழுங்குபடுத்தி எழுத வழிவகுத்தல்.

**முதன்மைப்பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- அபிப்பிராயம் என்பது ஆளுக்காள் வேறுபடுவது ஆகும்.
- ஒருவர் விரும்பும் ஒன்றை ஏதோவொரு காரணத்திற்காக பிறிதொருவர் விரும்பாமல் இருக்கலாம்.
- ஒருவர் தனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்தும்போது தெளிவாகவும் உரிய காரணத்தோடும் வெளியிடுவது சிறப்பானதாகும்.
- அபிப்பிராயம் தெரிவிக்கையில் பிறருக்குரிய கௌரவத்தை வழங்கி பண்புடன் தெரிவிப்பது அவசியமாகும்.
- அபிப்பிராயம் எழுதும் பொழுது எளிமையானதும், தெளிவானதுமான காரணகாரியத் தொடர்புடைய மொழிநடையைப் பயன்படுத்துவது உகந்தது.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- எழுது தாள்கள்
- எழுது கருவிகள்

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- வாசித்தலினூடாக மையக்கருத்து, துணைக்கருத்து என்பனவற்றை இனங்கண்டு கூறுவார்.
- தமது அபிப்பிராயங்களை தெளிவாகவும் சுருக்கமாகவும் எழுதுவார்.
- அபிப்பிராயம் எழுதுவதற்குப் பொருத்தமான மொழிநடையினைப் பிரயோகித்து எழுதுவார்.
- காரண காரியத் தொடர்புகாட்டி அபிப்பிராயத்தினை விளக்கமாக எழுதுவார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | : | 11.0 | படைப்புக்களை வாசித்த அனுபவங்களின் ஊடாக படைப்பாக்க நுட்பங்களை அறிந்து ஆக்கங்களைச் சுயமாக எழுதுவார். |
| **தேர்ச்சி மட்டம்** | : | 11.2 | நடைமுறைத் தேவைகளுக்காக எழுதுவார். |
| **விடய உள்ளடக்கம்** | : | | நேர்காணல். |
| **பாடவேளை** | : | 02 | |

**கற்றற் பேறுகள் :**

- நேர்காணலின் இயல்பினையும் அமைப்பினையும் விளங்கிக்கொண்டு எழுதுவார்.
- விடயத்தினைப் பொருத்தமாகவும் விளக்கமாகவும் எழுதுவார்.
- வாசகர்களை ஈர்க்கும் வகையில் கவர்ச்சிகரமாக எழுதுவார்.
- நேர்காணலுக்குப் பொருத்தமான மொழிநடையைக் கையாண்டு நாகரிகமாக எழுதுவார்.
- இலக்கண வழுவின்றிச் செம்மையாக எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- சிறிய நேர்காணல் ஒன்றை ஒலி / ஒளிபரப்பி அது தொடர்பில் கலந்துரையாடல் (பாடப்பிரவேசமாக அமையும்)
- பத்திரிகைகள், சஞ்சிகைகளில் நேர்காணல் எழுத்து வடிவில் பிரசுரமாவது தொடர்பிலும் அவற்றை மாணவர்கள் வாசித்திருப்பது தொடர்பிலும் கேட்டுக் கலந்துரையாடல்.
- மாதிரி நேர்காணல்களை வழங்கி மாணவர்கள் அவற்றை வாசிக்க வழிப்படுத்தல்.
- மேற்படி நேர்காணல்களை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடி நேர்காணல்களின் இயல்பு, அமைப்பு, மொழிநடை என்பன பற்றி விளக்கல்.
- மாணவர் ஒருவரை பிரமுகர் ஒருவராகப் பாவித்து வேறொரு மாணவர் அவரை நேர்காண வழிப்படுத்தல்.
- நேர்காணல் ஒன்றை எழுதுவதற்குத் தேவையான (ஒருவரை நேர்கண்டு பெறப்பட்டதான) தகவல்களை வழங்கி அவற்றைச் சஞ்சிகையொன்றில் பிரசுரிப்பதற்கு ஏற்ற வகையில் நேர்காணலாகத் தொகுத்து எழுத நெறிப்படுத்தல்.
- பொருத்தமான கணிப்பீட்டு, மதிப்பீட்டு செயற்பாடுகளை திட்டமிட்டுச் செயற்படுத்தல்.
- மேலதிகச் செயற்பாடாக மாணவர்கள் சுயமாக முக்கியஸ்தர் ஒருவரை நேர்கண்டு, நேர்காணலை எழுதும் வகையில் ஒப்படைச் செயற்பாட்டினை வழங்கலாம்.

**முதன்மைப்பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- ஒருவரோடு வினாக்களைத் தொகுத்து உரையாடுவதன் மூலம் விடயமொன்று அல்லது விடயங்கள் தொடர்பாக கருத்துக்களைப் பெறுவதே நேர்காணல் ஆகும்.
- நேர்காணலொன்றை மேற்கொள்ளுவதற்கு முன் நேர்காணப்படுபவருக்கு முன்னறிவித்தல் கொடுத்து அவரது அனுமதியையும் நேரவொதுக்கீட்டையும் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
- நேர்காண்பவர் வினவவுள்ள வினாக்களைத் திட்டமிட்டுத் தயாரித்துச் செல்லல் வேண்டும். வினாக்கள் எளிமையானவையாகவும், நேரடியானவையாகவும், பண்பானவையாகவும், ஒழுங்கமைப்பில் உள்ளனவையாகவும் இருத்தல் வேண்டும்.

- நேர்காணும் போது கவனிக்கவேண்டிய விடயங்கள்
  - குறித்த நேரத்திற்குப் பிரசன்னமாதல்.
  - விடயத்திற்குப் பொருத்தமாகவும் தெளிவாகவும் பண்பாகவும் வினவி உரையாடுதல்.
  - பொருத்தமான முறையில் விளித்தல்.
  - தயாரிக்கப்பட்ட வினாக்களை விடவும் தேவைக்கேற்ப சமயோசிதமாகவும் வினவுதல்.
  - அவசரமின்றி மிகவும் அவதானத்துடன் கண்வழித் தொடர்புடன் கேட்டல்.
  - தனிப்பட்ட வகையில் எவரையும் புண்படுத்தாதவாறு உரையாடல்.

- நேர்காணலை எழுதும்போது கவனிக்கவேண்டிய விடயங்கள்.
  - குறிப்பெடுத்த விடயங்களை ஒழுங்குபடுத்தலும் தெரிவு செய்தலும்.
  - சாதாரண விடயங்களிலிருந்து கடினமான விடயங்களுக்குச் செல்லல்.
  - பிரதானமான விடயங்களுக்கு முதன்மையளித்தல்.
  - தவிர்க்க வேண்டியவற்றைத் தவிர்த்தல்.
  - பொருத்தமான மொழிநடையைத் தெரிவுசெய்தல்.
  - நேர்காணலின் வடிவத்தினை அனுசரித்தல்.

- நேர்காணலில் இடம்பெறவேண்டியவை.
  - நேர்காணப்படுபவரின் அறிமுகம்.
  - நேர்காணல் வடிவத்தினை அனுசரித்து அமைதல். நேர்காணல் தொகுத்தும் எழுதப்படலாம். எனினும் வினாவிடையாக எழுதப்படுவதே சிறந்தது.
  - விடயங்கள் தொடர்ச்சியும் ஒழுங்குமுறைஉடையனவாகவும் இருத்தல் வேண்டும்.
  - பொருத்தமானதும் கவர்ச்சிகரமானதுமான நடையினைப் பயன்படுத்தல்.

- எளிமையானதும், நியாயமானதுமான மொழியைக் கையாள்தலே சிறந்தது. எனினும் தேவையாயின் பேச்சுவழக்கைப் பயன்படுத்தலாம். அவ்வாறாயின் சரியான சொற்பிரயோகங்களைக் கையாளவேண்டும்.

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- மாதிரி நேர்காணல் இறுவட்டு.
- மாதிரி நேர்காணல் துண்டங்கள் (எழுத்து வடிவம்)
- எழுது தாள்கள்.
- எழுது கருவிகள்.

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- நேர்காணலின் அமைப்பினைக் கூறுவார்.
- நேர்காணலை விடயப் பொருத்தத்தோடு விளக்கமாக எழுதுவார்.
- பொருத்தமான மொழிநடையைக் கையாண்டு கவர்ச்சிகரமாக எழுதுவார்.
- இலக்கண வழுவின்றி வாசகர் புரிந்துகொள்ளும் வகையில் எழுதுவார்.

**தேர்ச்சி** : 13.0 மொழியின் இலக்கணத்தை அறிந்து, அதற்கமைய மொழியைச் செம்மையாகக் கையாள்வர்.

**தேர்ச்சி மட்டம்** : 13.3 சொற்றொடர் வாக்கியம் என்பவற்றின் வகையையும் அவற்றின் இயல்பையும் அறிந்து அவற்றைப் பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : சொற்றொடரும் வாக்கியமும்.

**பாடவேளை** : 04

**கற்றற் பேறுகள் :**

- சொற்றொடர், வாக்கியம் என்பவற்றின் இயல்பினை அறிந்து கூறுவார்.
- சொற்றொடர், வாக்கியம் என்பவற்றின் அமைப்பினை இனங்கண்டு பிரயோகிப்பார்.
- சொற்றொடர் வகைகளைப் பாகுபடுத்தி விளக்குவார்.
- சொற்றொடர்களை அவற்றின் வகைக்கேற்ப பொருத்தமாகப் பிரயோகிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- பொருத்தமாகப் பாடப்பிரவேசத்தினைத் திட்டமிட்டுப் பாடத்தை ஆரம்பித்தல்.
- சொற்றொடர் வாக்கியங்கள் தனித்தனியாக எழுதப்பட்ட அட்டைகளை கலந்து வழங்கி மாணவர்கள் வேறுபிரிக்க வழிப்படுத்தல்.
- சொற்றொடர் ஒன்றையும், வாக்கியம் ஒன்றையும் காட்சிப்படுத்திக் கலந்துரையாடுவதன் மூலம் சொற்றொடர், வாக்கியம் என்பவற்றின் அமைப்பு, இயல்பு என்பவற்றினை விளக்கல்.
- உதாரணங்களைக் காட்சிப்படுத்தி கலந்துரையாடுவதன் மூலம் சொற்றொடர் வகைகளை விளக்கல்.
- பொருத்தமான பயிற்சிகளை வழங்குவதன் மூலம் மாணவர் மேலதிக விளக்கம் பெற உதவுதல்.
- பொருத்தமாகத் திட்டமிட்டு கணிப்பீட்டு, மதிப்பீட்டுச் செயற்பாட்டை முன்னெடுத்தல்.

**முதன்மைப்பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- சொற்கள் தொடர்ந்து வந்து முற்றுப் பொருளைத் தராது பொருளை மேலும் அவாவி நிற்கும் தொடர் சொற்றொடர் எனப்படலாம்.

  உ-ம் - அந்தப் பையன்

  இங்கு சொற்கள் தொடர்ந்து வந்து பொருள் உணர்த்துகின்ற போதிலும் அது முற்றுப்பெற்ற பொருள் அல்ல.

  அவன் (அந்தப் பையன்) என்ன செய்தான்? என்ற வினாவுக்கு விடை தெரியவில்லை.

  விடையை உணர்த்தக்கூடிய பொருளை தொடர் அவாவி நிற்கிறது.

- தொடர் நிலையில் ஒரு சொல்லே ஒரு சொற்றொடராகவும் தொழிற்படுவதுண்டு.

- சொற்கள் தொடர்ந்து வந்து முற்றுப்பெற்ற பொருளை உணர்த்தும் பொழுது அது வாக்கியமாகின்றது.

  உ-ம் -: அந்தப் பையன் கமலனை அடித்தான்.

- வாக்கியம், உறுப்புக்களைக் கொண்டிருக்கும். சொற்றொடர், உறுப்புக்களைக் கொண்டிருப்பதில்லை. சொற்றொடர் வாக்கியத்தின் ஒரு உறுப்பாகும்.

**குறிப்பு** :

| - ஒரு தொடர் முற்றுப் பொருளைப் பெறாமல் வந்தால் அது சொற்றொடர் எனலாம். |
|---|
| - ஒரு தொடர் முற்றுப் பொருளைப் பெற்று வந்தால் அது வாக்கியம் எனலாம். |

- சொற்றொடர்களைப் பிரதானமாக நான்காக வகைப்படுத்தலாம்.

1. பெயர்த்தொடர்

   பெயர்ச்சொல்லைத் தலைமை உறுப்பாகக் கொண்ட தொடர்.

   உ-ம் -: அழகான பூ, ஒரு அழகான பூ, ஏதோ ஒரு அழகான பூ

2. வினைத்தொடர்

   வினைச்சொல்லைத் தலைமை உறுப்பாகக் கொண்ட தொடர்.

   உ-ம் -: இனிமையாகப் பாடினான், மிக இனிமையாகப் பாடினான்,
   மிக மிக இனிமையாகப் பாடினான்.

3. பெயரடைத்தொடர்

   ஒரு பெயரடையைத் தலைமை உறுப்பாகக் கொண்ட தொடர்.

   உ-ம் -: மிகப்பெரிய, மிக மிகப் பெரிய, உலகிலேயே மிக மிகப் பெரிய

4. வினையடைத்தொடர்

   ஒரு வினையடையைத் தலைமை உறுப்பாகக் கொண்ட தொடர்.

   உ-ம் -: மிக விரைவாக, மிக மிக விரைவாக,
   எல்லாவற்றையும் விட மிக மிக விரைவாக.

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- சொல்லட்டைகள்
- டிமைன் தாள்
- எழுது கருவிகள்

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- சொற்றொடரின் அமைப்பினையும் இயல்பினையும் கூறுவார்.
- வாக்கியத்தின் அமைப்பினையும் இயல்பினையும் கூறுவார்.
- சொற்றொடர்களை வகைப்படுத்தி உதாரணங்காட்டி விபரிப்பார்.
- சொற்றொடர்களை பொருத்தமாகப் பிரயோகிப்பார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | : | 13.0 | மொழியின் இலக்கணத்தை அறிந்து அதற்கமைய மொழியைச் செம்மையாகக் கையாள்வர். |
| **தேர்ச்சி மட்டம்** | : | 13.3 | சொற்றொடர் வாக்கியம் என்பவற்றின் வகையையும், அவற்றின் இயல்பையும் அறிந்து அவற்றைப் பிரயோகிப்பார். |
| **விடய உள்ளடக்கம்** | : | | வேற்றுமை. |
| **பாடவேளை** | : | 04 | |

**கற்றற் பேறுகள் :**

- வேற்றுமைகளின் உருபு, பொருள் என்பவற்றை அட்டவணைப்படுத்துவார்.
- வேற்றுமைகளுக்குப் பொருத்தமான உதாரணங்களைத் தந்து விளக்குவார்.
- வேற்றுமைகளின் உருபுகளையும் பொருளையும் அறிந்து அவற்றைப் பிரயோகிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- வேற்றுமைகளின் உருபுகள் இடம்பெறும் வாக்கியங்களைக் காட்சிப்படுத்தல்.
- உருபுகள் மூலம் பொருள் மாற்றம் ஏற்படுவதை எடுத்துக் காட்டல்.
- பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்துவதே வேற்றுமை என விளக்குதல்.
- வேற்றுமை உருபுகளையும் பொருளையும் அட்டவணைப்படுத்தல்.
- வாக்கியங்களைக் கொடுத்து வேற்றுமை, உருபு, பொருள் என்பவற்றை இனங்காண நெறிப்படுத்தல்.

**முதன்மைப்பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்துவதே வேற்றுமை.
- வேற்றுமை உருபை ஏற்பது பெயர்ச் சொல்லின் சிறப்பிலக்கணம்.
- முதலாம், எட்டாம் வேற்றுமைகளுக்கு உருபுகள் இல்லை.
- ஏனைய வேற்றுமைகள் ஒன்று / ஒன்றுக்கு மேற்பட்ட உருபுகளைக் கொண்டுள்ளன.
- வேற்றுமைகள் தங்களுக்கெனப் பொருள்களைக் கொண்டுள்ளன.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- மாதிரி வாக்கியங்களின் அட்டவணை.
- வேற்றுமை உருபு, பொருள் அட்டவணை.
- எழுது கருவிகள்
- எழுது தாள்.

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- வேற்றுமை என்றால் என்னவெனக் கூறுவார்.
- வேற்றுமைகளின் உருபையும் பொருளையும் இனங்காண்பர்.
- வாக்கியங்களில் உருபு, பொருள் என்பவற்றை இனங்கண்டு எழுதுவார்.
- வேற்றுமைகளை வாக்கியங்களிற் செம்மையாகப் பிரயோகிப்பர்.

**தேர்ச்சி** : 11.0 படைப்புக்களை வாசித்த அனுபவங்களின் ஊடாக, படைப்பாக்க நுட்பங்களை அறிந்து, ஆக்கங்களைச் சுயமாக எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம்** : 11.2 நடைமுறைத் தேவைகளுக்காக எழுதுவார்.

**விடய உள்ளடக்கம்** : விமர்சனம் எழுதுதல்.

**பாடவேளை** : 03

**கற்றற் பேறுகள் :**

- விமர்சனத்தின் நோக்கினையும் இயல்பினையும் புரிந்துகொண்டு எழுதுவார்.
- ஆக்கத்தின் பலம், பலவீனங்களை இனங்கண்டு வெளிப்படுத்தி எழுதுவார்.
- தெளிவாகவும் தர்க்கரீதியாகவும் நேர்த்தியாகவும் எழுதுவார்.
- விமர்சனப் பார்வையினை வெளிப்படுத்தி நாகரிகத்துடன் எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- விமர்சனங்களை வாசித்த சந்தர்ப்பங்களை மாணவர்களிடம் கேட்டுக் கலந்துரையாடல். (பாடப் பிரவேசமாக அமையலாம்)
- சிறிய மாதிரி விமர்சனமொன்றை வாசித்து / ஒலிபரப்பி அதுதொடர்பில் கலந்துரையாடல்.
- விமர்சனத்தின் இயல்புகள், அமைப்பு என்பன தொடர்பிலும் விமர்சனம் எழுதும் போது கவனிக்கப்படவேண்டிய விடயங்கள், கையாளப்படவேண்டிய மொழிநடை பற்றியும் விளக்குதல்.
- மாணவர்கள் பாடப்பகுதியில் படித்த கவிதை சிறுகதை அல்லது வேறு ஆக்க இலக்கியப் பகுதியொன்றை வழங்கி, மாணவர்கள் விமர்சனம் எழுத நெறிப்படுத்தல்.

**முதன்மைப்பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- ஆக்கமொன்றின் பலம், பலவீனம் என்பவற்றினை வெளிப்படுத்துவதே விமர்சனமாகும். அந்த ஆக்கத்திலுள்ள நயக்கத்தக்க விடயங்களைச் சுட்டிக்காட்டும் அதேவேளையில் தவிர்க்கப்படவேண்டிய / மாற்றியமைக்கப்பட வேண்டிய விடயங்களையும் விமர்சனம் எடுத்துக் காட்டும்.
- விமர்சிக்கப்படும் ஆக்கத்தின்
    - மையக்கருத்து
    - கையாளப்பட்ட உத்திகள்
    - அமைப்பின் பொருத்தப்பாடு
    - அணி, வர்ணனை முதலியவற்றின் பயன்பாடு
    - தலைப்பின் பொருத்தப்பாடு
    - மொழியாட்சி
- முதலிய விடயங்கள் பக்கச்சார்பின்றி நடுநிலையுடனும் விமர்சன நோக்குடனும் எழுதப்படும்.

- தர்க்கரீதியானதும் அதேவேளை தெளிவானதுமான மொழிநடை கையாளப்படுதல் வேண்டும்.

- விமர்சனம் எழுதும் போது ஆக்கத்தின் பலமான, நயக்கத்தக்க அம்சங்களை முதலில் எழுதி பின்னர் பலவீனமான, சீர்ப்படுத்த வேண்டிய விடயங்களைச் சுட்டிக்காட்டுதல் பொருத்தமானதாகும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- மாதிரி விமர்சனம்.
- எழுது கருவிகள்.
- எழுதுதாள்.

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- ஆக்கமொன்றை விமர்சிக்கும்போது கவனஞ்செலுத்த வேண்டிய விடயங்களை அறிந்து கூறுவார்.
- ஆக்கமொன்றின் நயக்கத்தக்க பகுதிகளை இனங்கண்டு எழுதுவார்.
- ஆக்கமொன்றின் சீரமைக்கப்படவேண்டிய அல்லது முரண்பாடான அம்சங்களைச் சுட்டிக்காட்டி எழுதுவார்.

- விமர்சனப் பார்வையோடு தர்க்க ரீதியாக எழுதுவார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | : | 13.0 | மொழியின் இலக்கணத்தையறிந்து அதற்கு மொழியை செம்மையாகக் கையாள்வார். |
| **தேர்ச்சி மட்டம்** | : | 13.3 | சொற்றொடர், வாக்கியம் என்பவற்றின் வகையையும் அவற்றின் இயல்பையும் அறிந்து அவற்றைப் பிரயோகிப்பார். |
| **விடய உள்ளடக்கம்** | : | | அடைமொழிகள் |
| **பாடவேளை** | : | 01 | |

**கற்றற் பேறுகள் :**

- அடைமொழிகளை இனங்கண்டு விளக்குவார்.
- அடைமொழிகளை வகைப்படுத்தி விபரிப்பார்.
- பெயரடை, வினையடைகளின் பண்புகளைக் கூறுவார்.
- அடைமொழிகளைப் பொருத்தமாகப் பிரயோகித்து வாக்கியங்கள் எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- அடைமொழிகள் அடங்கிய பந்தியொன்றை வழங்கிப் பொருத்தமாகக் கலந்துரையாடுவதன் மூலம் அடைமொழிகளை இனங்காண வழிப்படுத்தல்.
- அடைமொழிகளின் இயல்புகளையும் பண்பாட்டினையும் கலந்துரையாடி விளக்குதல்.
- அடைமொழிகளை வகைப்படுத்த உதவுதல்.
- அடைமொழிகளைப் பொருத்தமுற வாக்கியங்களில் அமைத்து எழுத சந்தர்ப்பமளித்தல்.
- கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளல்.

**முதன்மைப்பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- பெயர் / வினைச் சொற்களைச் சிறப்பித்து / விபரித்து வருவது அடைமொழி ஆகும்.
- பெயர்ச்சொல்லின் பண்பை உணர்த்தப் பயன்படும் அடை பெயரடை.

உதாரணம் :- நல்ல மனிதன்
புதிய வீடு

**பெயரடை**

- எப்படிப்பட்ட? என்ற வினாவுக்கு விடையாக (எப்படிப்பட்ட மனிதன்? நல்ல மனிதன்)
- மிகவும், ஆகவும், மிகமிக ஆகிய மிகைச் சொற்களால் மிகைப்படுத்தக்கூடியது.
  (மிகவும் புதிய, மிகமிகப் புதிய)

- வினை நிகழும் முறை, வினை நிகழும் இடம் போன்றவற்றை உணர்த்தப் பயன்படுவது **வினையடை.**

உதாரணம் :- வேகமாக ஓடுகிறான்.
நேற்றுப் பாடினான்.
வெளியே செல்கிறான்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- அடைமொழிகளைக் கொண்டுள்ள உரைப்பகுதி / செய்யுட்பகுதி.
- எழுது தாள்கள்.
- எழுது கருவிகள்.

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- அடைமொழிகளை இனங்கண்டு கூறுவார்.
- அடைமொழிகளை வகைப்படுத்திக் காட்டுவார்.
- பெயரடைகள், வினையடைகள் என்பவற்றின் பண்புகளை எடுத்துரைப்பார்.
- பெயரடை, வினையடைகளைப் பொருத்தமாகப் பிரயோகித்து எழுதுவார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | : | 11.0 | படைப்புக்களை வாசித்த அனுபவங்களினூடாக படைப்பாக்க நுட்பங்களை அறிந்து, ஆக்கங்களைச் சுயமாக எழுதுவார். |
| **தேர்ச்சி மட்டம்** | : | 11.1 | பல்வேறு ஆக்கங்களை எழுதுவார். |
| **விடய உள்ளடக்கம்** | : | | கட்டுரை எழுதுதல். |
| **பாடவேளை** | : | 02. | |

**கற்றற் பேறுகள் :**

- கட்டுரையின் தலைப்பு, வடிவம், அமைப்பு முதலியவை பொருந்த எழுதுவார்.
- அவதானிப்புக்கள், அனுபவங்கள், சிந்தனைகளை உள்வாங்கி எழுதுவார்.
- பந்திகளைத் தொடர்புபட அமைத்துத் தெளிவாக எழுதுவார்.
- பொருத்தமான மொழிநடையில் தெளிவாக எழுதுவார்.
- வாசிப்போருக்குப் புரியும் வகையில் எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- மாதிரிக் கட்டுரை ஒன்றை வாசிக்கச் செய்து கலந்துரையாடுதல்.
- கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு கட்டுரையின் வகைகள் பற்றி விளக்குதல்.
- இக்கட்டுரையின் சட்டகம் பற்றிக் கலந்துரையாடுதல்.
- மொழிநடை, ஒழுங்கமைப்பு, தர்க்கரீதியான முன்வைப்புப் பற்றிக் கலந்துரையாடுதல்.
- வேறொரு தலைப்பில் மாணவர்கள் கட்டுரை எழுத வழிப்படுத்தல்.

**முதன்மைப்பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- கட்டுரையின் வகைகளை விளக்குதல்.
  - விளக்கக் கட்டுரை
  - கற்பனைக் கட்டுரை
  - விமர்சனக் கட்டுரை
  - தற்சார்புக் கட்டுரை
  - வரலாற்றுக் கட்டுரை

- பொருத்தமான தலைப்பினையிட்டுச் சட்டகம் தயாரித்தல்.
- முகவுரை, உடல், முடிவுரை என்பன அமைந்திருக்கும்.
- செம்மையான மொழிநடை.
- பொருத்தமான எழுத்தாக்க நுட்பங்கள், எழுத்துப் பொறிமுறைகளின் பயன்பாடு.
- தெளிவாகவும், திருத்தமாகவும், தர்க்கரீதியாகவும் கருத்துக்களை முன்வைத்தல்.
- சொல் எண்ணிக்கை கருத்திற்கொள்ளப்படல்.
- கேட்கப்பட்ட வடிவத்தில் எழுதுதல்
  (விளக்கக் கட்டுரை, உரையாடல், சொற்பொழிவு).

**மாதிரிக் கட்டுரை:**

மனிதனுடைய அத்தியாவசியத் தேவைகளுள் ஒன்று வீடு ஆகும். இதனை மனிதன் வீடு, இல்லம், உறையுள் எனப் பல பெயர்களால் அழைக்கின்றான். இயற்கை அனர்த்தங்களிலிருந்தும், கொடிய விலங்குகளிலிருந்தும் அவனை வீடுதான் பாதுகாக்கின்றது. இங்குதான் அவன் குடும்பத்தை நடாத்தி மகிழச்சியைப் பெற்றுக் கொள்கிறான். இன்றைய போர் இயற்கை அனர்த்தங்கள் காரணமாக பெருந்தொகையான வீடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன. இவற்றை மீளமைத்துக் கொடுப்பதற்கு தனவந்தர்களும் அரச, சமூக நிறுவனங்களும் முன்வர வேண்டும். இவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒரு விளக்கக் கட்டுரை எழுதுக.

**மாதிரிச் சட்டகம்:**

- அறிமுகம் - மனிதனின் அடிப்படைத் தேவைகளில் வீடு.
- வீட்டினால் ஏற்படும் பயன்கள் -
    1. பாதுகாப்பாக வாழ்வதற்கு.
    2. மகிழச்சியான குடும்ப வாழ்விற்கு.
    3. உறவுகளை வளர்ப்பதற்கு.
- வீடிழப்பிற்கான காரணங்கள் -
    1. போர்.
    2. இயற்கை அனர்த்தம்.
    3. வன்முறைகள்.
- இழந்த வீடுகளை மீளப்பெறும் வழிகள்.-
    1. தனவந்தர்களின் நன்கொடை.
    2. அரசு, சமூக நிறுவனங்களின் உதவி.
    3. சுய முயற்சி.
- முடிவுரை.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- மாதிரிக் கட்டுரை.
- எழுது கருவிகள்.
- எழுது தாள்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- கட்டுரை எழுதும்போது கவனிக்கவேண்டிய விடயங்களை அறிந்து எழுதுவார்.
- தலைப்பிகேற்ப சட்டகம் தயாரிக்கும் முறைகளை அறிந்து எழுதுவார்.
- பந்திகளை அமைத்துப் பொருத்தமான மொழிநடையில் தெளிவாக எழுதுவார்.
- தர்க்கரீதியாகக் கருத்துக்களை முன்வைப்பார்.

# மூன்றாந் தவணை

| இல. | தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | பக்கம் |
|---|---|---|---|---|
| 01 | 9.0 | 9.1 | தத்தைவிடு தூது | 95-96 |
| 02 | 12.0 | 12.2 | தொகைச் சொற்கள் | 97-98 |
| 03 | 11.0 | 11.2 | விளம்பரம் எழுதுதல் | 99-100 |
| 04 | 3.0 | 3.1 | தனிநடிப்பு | 101-102 |
| 05 | 13.0 | 13.3 | வாக்கிய வகைகள் | 103-104 |
| 06 | 9.0 | 9.1 | கிருட்டிணன் தூதுச் சருக்கம் | 105-106 |
| 07 | 1.0 | 1.3 | அறிவித்தல் ; அறிவுறுத்தல் | 107-108 |
| 08 | 4.0 | 4.1 | சம்பவ விபரிப்பு | 109 |
| 09 | 3.0 | 3.2 | அறிவிப்பு | 110 |
| 10 | 7.0 | 7.1 | தமிழ்ப் பண்பாடு | 111-112 |
| 11 | 8.0 | 8.2 | பழமொழிகள் | 113-114 |
| 12 | 13.0 | 13.3 | வாக்கிய இயைபு | 115-116 |
| 13 | 2.0 | 2.1 | விவரணச் சித்திரம் | 117-118 |
| 14 | 13.0 | 13.2 | ஆகுபெயர் | 119 121 |
| 15 | 11.0 | 11.2 | அறிக்கை எழுதுதல் | 122-123 |
| 16 | 3.0 | 3.2 | நேர்முக வர்ணனை | 124-125 |

**தேர்ச்சி** : 9.0 வாசித்துக் கிரகித்தவற்றைத் தெளிவாக எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம்** : 9.1 வாசித்த விடயம் தொடர்பான கருத்துக்களை உள்வாங்கி எழுதுவார்.

**விடய உள்ளடக்கம்** : தத்தைவிடுதூது.

**பாடவேளை** : 05

**கற்றற் பேறுகள் :**

- செய்யுள்களைச் சந்திபிரித்தும் கொண்டுகூட்டியும் எழுதுவார்.
- செய்யுள்களின் பொருளறிந்து எழுதுவார்.
- பாடப்பகுதியினூடாக வெளிப்படுத்தப்படும் விடயங்களைத் தொகுத்து எழுதுவார்.
- பாடப்பகுதியில் கையாளப்பட்டுள்ள உத்திகளை இனங்கண்டு எழுதுவார்.
- செய்யுள்களில் கையாளப்பட்டுள்ள அணிகளை நயந்து எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- தூதுரைக்கும் தன்மையிலமைந்த சிறிய பாடலொன்றைக் காட்சிப்படுத்திக் கலந்துரையாடித் தூதுவடிவம் பற்றிக் கூறுதல். (பாடப்பிரவேசமாக அமையும்).
- செய்யுள்களை முன்வைத்து சந்திபிரிக்கவும், அரும்பதங்களுக்கு பொருளறியவும் கொண்டுகூட்டி எழுதவும் வழிப்படுத்தல்.
- செய்யுள்களுக்கு பொருள் எழுத உதவுதல்.
- செய்யுள்களைத் தொகுத்து பாடப்பகுதியினூடாக வெளிப்படுத்தப்படும் விடயங்களைத் தொகுத்து எழுத வழிப்படுத்தல்.
- கையாளப்பட்டுள்ள உத்திகளை இனங்காட்டி விளக்கல்.
- அணிகளை இனங்காணவும் நயந்து எழுதவும் சந்தர்ப்பமளித்தல்.

**முதன்மைப்பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

**ஆசிரியர் அறிமுகம்.**

தி.த.சரவணமுத்துப் பிள்ளை திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். எழுத்தாளராகவும் தமிழ் அறிஞராகவும் தடம் பதித்தவர். 'மோகனாங்கி' என்னும் வரலாற்றுப் புதினத்தை எழுதிய இவர் 'தத்தை விடு தூது' என்னும் பிரபந்தத்தை இயற்றியுள்ளார். இப்பிரபந்தம் பெண் விடுதலை தொடர்பாக எழுந்த முன்னோடி இலக்கியமாகக் கொள்ளப்படுகிறது.

- **புலவர் காதலியிடம் சொல்லுமாறு கிளியிடம் கூறிவிட்ட விடயங்கள்:**
    - சிறுவயதில் முற்றத்தில் விளையாடும் போது தந்தை கூறிய வார்த்தைகள் (இருவருக்கும் திருமணம் செய்துவைப்பதாக) தவறியதேன்? அவளும் என்னை மறந்தது ஏன்?
    - பந்தடித்து விளையாடும்போது அவளாகக் கூறிய வார்த்தைகளை மறந்துவிட்டாளா?
    - நான் சிறுவயதில் ஆம்பல் மாலை அணிவித்ததையும் அவள் அதனால் மகிழ்ந்ததையும் மறந்துவிட்டாளா?
    - பெற்றோர் பார்த்திருக்கும் மணமகன் அவளுக்குப் பொருத்தமற்றவன் என்பதையும், குரங்கின் கையிற் பூமாலை கொடுக்கும் செயல் போன்றது அவளை அவனுக்குத் திருமணம் செய்து வைப்பது.
    - செல்வந்தன் என்பதற்காக ஒருவனைத் திருமணம் செய்து துன்பப்படுவதை விட பொருளற்றவனோடு விரும்பி வாழும் வாழ்வே மகிழ்ச்சியானது. கல்வியறிவுடையவன்தான் சிறந்த துணைவன்.

    - உன்மேற் கொண்ட காதலால் நான் மெலிந்து போவதை என் உயிர் இனியும் நிலைத்திருக்காது என்பதுவும்.

- புலவர் காலத்தில் நிலவிய பெண்ணடிமைத்தனம் பற்றிப் புலவர் கூறும் விடயங்கள்:
    - பெண்கள் விரும்பியவரைத் திருமணம் செய்ய முடியாதிருத்தல்.
    - செல்வர்களுக்கே திருமணம் செய்து கொடுக்கவேண்டும் என்ற எண்ணம் இதற்குக் காரணம்.
    - செல்வம் இருந்தால் மணமகனின் அழகு, இளமை, அறிவு, ஆண்மை என்பவற்றைப் பாராது திருமணம் செய்து கொடுத்தல்.
    - உண்பது, உடுப்பது, ஊர்க்கதைகள் பேசுவதே பெண்கள் தொழிலாகக் கருதப்பட்டது.
    - கல்வி உரிமை மறுக்கப்பட்டிருந்தமை.
    - கூட்டுக் கிளி போல் வீட்டில் அடைத்துவைத்த நிலை.
    - பூனைபோலவும், பசுக்களைப்போலவும் விலங்குகளாகக் கருதப்பட்ட நிலை.

- கவிச்சிறப்புக்கள்
    - தூது என்றும் பழைய பிரபந்த வடிவம் மூலம் பெண்ணடிமைத்தனம் முதலிய நவீன கருத்துக்களைக் கூறுதல்.
    - அணிகளைப் பயன்படுத்தல்.
        - உவமை அணி
          ''என்னிருகண்மணி அனையாள்..''
          ''கூட்டிற் பசுங்கிளி போல்..''
          ''கண்ணை மறைத்தே கொடுபோய்க் காட்டில்விடும் பூனையைப் போல்..''

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- பாட நூல்.
- எழுது தாள்கள்.
- எழுது கருவிகள்.

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- செய்யுளை சந்திபிரித்தும் கொண்டுகூட்டியும் எழுதுவார்.
- செய்யுளின் பொருளறிந்து எழுதுவார்.
- விடயங்களைத் தொகுத்து எழுதுவார்.
- உத்திகளை இனங்கண்டு எழுதுவார்.
- செய்யுளை நயந்து எழுதுவார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | : | 12.0 | சொற்களஞ்சியத்தை விருத்திசெய்து, பொருத்தமான வகையில் பிரயோகிப்பார். |
| **தேர்ச்சி மட்டம்** | : | 12.2 | சொற்றொடர்களின் பொருளையும் வகையையும் அறிந்து செம்மையாகப் பிரயோகிப்பார். |
| **விடய உள்ளடக்கம்** | : | | தொகைச் சொற்கள். |
| **பாடவேளை** | : | 05 | |

**கற்றற் பேறுகள் :**

- தொகைச் சொற்களை இனங்கண்டு கூறுவார்
- தொகைச் சொற்களின் இயல்பினை அறிந்து கூறுவார்.
- தொகைச் சொற்களின் பயன்பாட்டினை விளங்கிக் கூறுவார்.
- தொகைச் சொற்களைப் பயன்படுத்தி வாக்கியம் எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- ‘‘நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகியன மாசடைந்து வருதலால் பெருஞ்சவாலுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது.’’ என்ற வாக்கியத்தைக் காட்சிப்படுத்தி, இவ்வாக்கியத்தை எவ்வாறு சுருக்கி எழுதலாம்? என வினவிக் கலந்துரையாடுவதன் மூலம் தொகைச்சொல்லின் பயன்பாட்டினை இனங்காட்டல்.
- தொகைச்சொற்களுக்கான விரிவுப் பதங்களைக் காட்சிப்படுத்திக் கலந்துரையாடுவதன் மூலம் தொகைச்சொற்களை இனங்காட்டி விளக்கல்.
- தொகைச்சொற்களின் இயல்பு, பயன்பாடு பற்றிக் கலந்துரையாடல்.
- பொருத்தமான கணிப்பீட்டு, மதிப்பீட்டுச் செயற்பாடுகளை திட்டமிட்டுச் செயற்படுத்தல்.

**முதன்மைப்பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- ஒன்றாக வகைப்படுத்தப்படக்கூடிய சொற்களுக்குப் பதிலாக ஒரே சொல் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் உள்ளன.
- தொகைச் சொற்களைப் பயன்படுத்தும் பொழுது சுருக்கமாகவும் அழகாகவும் மொழியைக் கையாள முடிகின்றது.
- தொகைச் சொற்களுக்கு உதாரணங்கள் :-

    - இருவினை – நல்வினை, தீவினை
    - முக்கனி – வாழை, மா, பலா
    - நாற்பாதம் – சரியை, கிரியை, யோகம், ஞானம்
    - பஞ்சாங்கம் – திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம்
    - அறுசுவை – கைப்பு, இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- சொல்லட்டைகள்
- எழுது தாள்
- எழுது கருவிகள்.

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- தொகைச் சொற்களை இனங்கண்டு, அவற்றின் இயல்பிற்கேற்ப பிரயோகிப்பார்.
- தொகைச் சொற்களைத் தேடிப் பட்டியற்படுத்தி எழுதுவார்.
- தொகைச் சொற்களை வாக்கியங்களில் பயன்படுத்தி எழுதுவார்.
- தொகைச் சொற்களைக் கையாள்வதன் மூலம் சுருக்கியெழுதுவார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | : | 11.0 | படைப்புக்களை வாசித்த அனுபவங்களினூடாக படைப்பாக்க நுட்பங்களை அறிந்து ஆக்கங்களைச் சுயமாக எழுதுவார். |
| **தேர்ச்சி மட்டம்** | : | 11.2 | நடைமுறைத்தேவைகளுக்காக எழுதுவார். |
| **விடய உள்ளடக்கம்** | : | | விளம்பரம் எழுதுதல். |
| **பாடவேளை** | : | 03 | |

**கற்றற் பேறுகள் :**

- விளம்பர ஆக்கமுறைகள் பற்றி அறிந்துகொண்டு, விளம்பரம் எழுதுவார்.
- விளம்பரத்தின் பயன்களை அறிந்து துலங்குவார்.
- அமைப்புக்குப் பொருத்தமாக இருக்குமாறு எழுதுவார்.
- விடய உள்ளடக்கத்தைத் தெளிவாகவும் தர்க்கரீதியாகவும் நேர்த்தியாகவும் எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- மாதிரி விளம்பரம் ஒன்றைக் காட்சிப்படுத்தல்.
- விளம்பரத்திலுள்ள அடிப்படை விடயங்கள் பற்றிக் கலந்துரையாடுதல்.
- மாணவர் அறிந்த விளம்பரங்கள் பற்றிக் கூற வழிநடத்துதல்.
- விளம்பரத்தின் பயன்கள் பற்றிக் கலந்துரையாடுதல்.
- மாணவர்கள் குழுவாக அல்லது சுயமாக விளம்பரம் எழுத வழிப்படுத்தல்.

**முதன்மைப்பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- விளம்பரம் செய்வதன் நோக்கம்,
  - விற்பனையைப் பெருக்கல்
  - அறிமுகப்படுத்துதல்
  - பிரசித்தப்படுத்துதல்
  - தகவல் தெரிவித்தல்
  - பிரசாரப்படுத்தல்.
- விளம்பர வகைகள்
  - வர்த்தகம் சார்ந்தவை
  - சுகாதாரம், ஆரோக்கியம் சார்ந்தவை
  - அரசியல் சார்ந்தவை
- விளம்பரங்களில் அமைய வேண்டிய அம்சங்கள்
  - கவர்ச்சியான மொழிநடை
  - சுருங்கச் சொல்லி விளங்கவைத்தல்
  - நம்பவைக்கும் தன்மை
  - தனிப்பட்ட கவனத்தை ஈர்த்தல்
  - பல்வேறு வர்ணங்கள், படங்கள், குறியீடுகள்

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- சொல்லட்டைகள்
- எழுது தாள்
- எழுது கருவிகள்.

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- விளம்பரத்தின் அமைப்பு, நோக்கம் பற்றி அறிந்து துலங்குவார்.
- விளம்பர ஆக்க முறைகளுக்கேற்ப விளம்பரம் எழுதுவார்.
- கேட்கப்பட்ட விடயத்துக்குப் பொருத்தமாக எழுதுவார்.
- உணர்வைத் தூண்டும் வகையில் கவர்ச்சிகரமாக எழுதுவார்.

**மாதிரி விளம்பரம்**

தமிழில் முதல்
இ-பத்திரிகை *தமிழருவி*
பத்திரிகை வடிவத்திலேயே
இணையத்திலும்
தமிழருவியைப் பார்க்க
இங்கே நொடிசெய்தால்
உங்களை

- e-paper

பகுதிக்கு அழைத்துச் செல்லும்

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | : | 3.0 | பல்வேறு பாத்திரங்களை ஏற்று, அவற்றின் இயல்புகளையும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்திப் பேசுவார். |
| **தேர்ச்சி மட்டம்** | : | 3.1 | பாத்திரங்களின் இயல்புகளுக்கேற்ப நடித்துப் பேசுவார். |
| **விடய உள்ளடக்கம்** | : | | தனி நடிப்பு. |
| **பாடவேளை** | : | 01 | |

**கற்றற் பேறுகள் :**

- பல்வேறுபட்ட பாத்திரங்களாகப் பாவனை செய்து பேசுவார்.
- பாத்திரத்தின் உணர்வுகளை வெளிக்கொணரும் வகையில் உச்சரிப்புத் தெளிவுடன் பேசுவார்.
- பொருத்தமான தொனி, அங்க அசைவுகளுடன் பாத்திரங்களின் உணர்வுகள் புலப்படும் வகையில் நடிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- மாணவர் பார்த்த / கேட்ட / வாசித்த சிறிய நாடகம் ஒன்று தொடர்பாகக் கலந்துரையாடல்.
- சிறிய நாடகப் பகுதி ஒன்றை முன்வைத்து நாடகத்திற் காணப்படும் அம்சங்கள் பற்றிக் கலந்துரையாடுதல்.
- தனி நடிப்பை மேற்கொள்ளும் ஒருவர் கவனத்திற் கொள்ளவேண்டிய விடயங்கள் பற்றி விளக்குதல்.
- மாணவர்கள் தாம் விரும்பும் பாத்திரம் ஒன்றைத் தெரிவு செய்து தனிநடிப்பை மேற்கொள்ள நெறிப்படுத்தல்.

**முதன்மைப்பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- ஒருவர் ஒரு சூழ்நிலையை அல்லது ஒரு பாத்திரத்தின் பண்பினை தனிநடிப்பினூடாக வெளிப்படுத்தலாம்.
- தனி நடிப்பின் போது நடிப்பினூடாக தனியொரு பாத்திரத்தின் மூலம் பிரச்சினையை அல்லது விடயத்தினை வெளிக்கொணர்தல்.
- தனி நடிப்பின் போது கவனிக்கவேண்டியவை,
    - தனியொரு பாத்திரத்தின் நடிப்பினூடாகப் பிரச்சினை வெளிக்கொணரப்படல்.
    - கூறப்படும் செய்தி தெளிவாக வெளிவரல்.
    - நடிப்பு.
    - முகபாவம் / உடல்மொழி.
    - தெளிவான உச்சரிப்பு.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- சிறிய நாடகப்பிரதி.
- எழுது கருவி.
- எழுதுதாள்.

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- தனிநடிப்பின்போது கவனிக்கவேண்டிய விடயங்களை அறிந்து கூறுவார்.
- தனிநடிப்பின் மூலம் சமூகத்திற்கு ஒரு செய்தியைக் கூறுவார்.
- நடிப்பு, தொனி, முகபாவனை முதலிய விடயங்களில் கவனம் செலுத்தி நடிப்பார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | : | 13.0 | மொழியின் இலக்கணத்தையறிந்து அதற்கு அமைய மொழியை செம்மையாகக் கையாள்வார். |
| **தேர்ச்சி மட்டம்** | : | 13.3 | சொற்றொடர், வாக்கியம் என்பவற்றின் வகையையும் அவற்றின் இயல்பையும் அறிந்து அவற்றைப் பிரயோகிப்பார். |
| **விடய உள்ளடக்கம்** | : | | வாக்கிய வகைகள். |
| **பாடவேளை** | : | 01 | |

**கற்றற் பேறுகள் :**

- பொருளுணர்த்துவதன் அடிப்படையில் வாக்கியங்களை வகைப்படுத்திக் கூறுவார்.
- கூற்று வாக்கியம், வினா வாக்கியம், மெய்ப்பாட்டு வாக்கியம், ஏவல் வாக்கியம், வியங்கோள் வாக்கியம் என்பவற்றின் தனித்துவ இயல்புகளை விளக்குவார்.
- பொருத்தமான வாக்கியங்களை இனங்கண்டு பிரயோகிப்பார் (எழுதுவார் / பேசுவார்).

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- மாணவர்கள் ஏற்கெனவே கற்றுள்ள (தரம் 10 இல்) அமைப்பு அடிப்படையிலான வாக்கிய வகைகளை நினைவுபடுத்திக் கலந்துரையாடல். (இதனை பாட அறிமுகமாகவும் அமைக்கலாம்).
- பொருளுணர்த்துவதன் அடிப்படையிலான வகைப்படுத்தலுக்கு ஏற்ற வகையில் மாதிரி வாக்கியங்களைக் காட்சிப்படுத்திக் கலந்துரையாடல்.
- வாக்கிய வகைகளையும் அவற்றின் தனித்துவங்களையும் குறித்துக் கலந்துரையாடல்.
- வாக்கிய வகைகளுக்கு ஏற்ப உதாரணங்கள் எழுத வழிப்படுத்தல்.
- பொருத்தமான கணிப்பீட்டினைத் திட்டமிட்டு வழங்கல்.

**முதன்மைப்பதங்கள் எண்ணக்கரு:**

- பொருளுணர்த்துவதன் அடிப்படையில் வாக்கியங்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

**வாக்கியம்**

- கூற்று வாக்கியம் - செய்தியை / தகவலை தெரிவிப்பது.

  உதாரணம் :- நாளை நாடு முழுவதிலும் பரவலாக மழைபெய்யும்

- வினா வாக்கியம் - செய்தியை / தகவலை வினவி எதிர்பார்த்து நிற்பது.

  உதாரணம் :- தவணைப் பரீட்சை எப்பொழுது நடைபெறும்?

- மெய்ப்பாட்டு வாக்கியம் - உணர்வுகளை வெளிப்படுத்தி வருவது.
  உதாரணம் :- ஆகா! அழகான ரோஜா, ஐயோ!

- ஏவல் வாக்கியம் - கட்டளையிடும் தொனியில் அமைவது.
  உதாரணம் :- பாடசாலைக்கு விரைவாகச் செல்.

- வியங்கோள் வாக்கியம் - வாழ்த்தல், வைதல், வேண்டல், விதித்தல் ஆகிய பொருள்களில் அமைவது.
  உதாரணம் :- நீடுழி வாழ்க.
  அழிந்து ஒழிக.
  தருமம் தருவீராக.
  கவனமாகப் படிப்பீராக.

(வியங்கோள் வாக்கியம் க, இய, இயர் முதலிய வியங்கோள் விகுதிகளைக் கொண்டிருக்கும்).

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- வாக்கிய அட்டைகள்.
- டிமைன் தாள்கள்.
- எழுது கருவிகள்.

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- பொருளுணர்த்துவதன் அடிப்படையில் வாக்கியங்களை வகைப்படுத்திக் காட்டுவார்.
- வாக்கிய வகைகளை இனங்காட்டி விளக்குவார்.
- வாக்கிய வகைகளுக்குப் பொருத்தமான உதாரணங்கள் எழுதுவார்.
- ஏவல், வியங்கோள் வாக்கியங்களுக்கிடையிலான வேறுபாட்டை விபரிப்பார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | : | 9.0 | வாசித்து கிரகித்தவற்றைத் தெளிவாக எழுதுவார். |
| **தேர்ச்சி மட்டம்** | : | 9.1 | வாசித்த விடயம் தொடர்பான கருத்துக்களை உள்வாங்கி எழுதுவார். |
| **விடய உள்ளடக்கம்** | : | | மகா பாரதம்<br>“கிருட்டிணன் தூதுச் சருக்கம்.” |
| **பாடவேளை** | : | 05 | |

**கற்றற் பேறுகள் :**

- செய்யுள் ஆசிரியர் பற்றி அறிந்து கூறுவார்.
- செய்யுளைச் சந்தி பிரித்தும் கொண்டு கூட்டியும் வாசிப்பார்.
- படைப்பின் உள்ளடக்கம் பற்றி அறிந்து கூறுவார்.
- படைப்பின் பிரதான கருத்துக்களையும் துணைக்கருத்துக்களையும் சுருக்கியும் விரித்தும் எழுதுவார்.
- பாத்திரங்களின் இயல்புகளை வாசித்து அறிந்து எழுதுவார்.
- படைப்பின் சிறப்புக்களையும் நயங்களையும் தமது அபிப்பிராயங்களையும் எழுதி வெளிப்படுத்துவார்.
- இதுபோன்ற ஆக்கங்களை விமர்சனம் செய்வார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- பொருத்தமான பாடப் பிரவேசம்.
- பாடல்களை வாசித்துக் காட்டுதலும் மாணவர்களை வாசிக்கச் செய்தலும்.
- பாடல்களை சந்தி பிரித்தும் கொண்டு கூட்டியும் மாணவர்களை வாசிக்கச் செய்தல்.
- பாடலிலுள்ள கடினப் பதங்களுக்குப் பொருள் கூறுதல்.
- பாடல்களின் பொருளை விளக்குதல்.
- மாணவர்களை ஓசைநயத்துடன் பாடுவதற்கு, ஓதுவற்கு வழிகாட்டுதல்.
- பாடலிலுள்ள விழுமியக் கருத்துக்கள், படிப்பினைகள், சிறப்புக்கள், நயங்கள் என்பனவற்றை விளக்குதல்.
- மாணவர்கள் பாடல்களின் நயங்கள், சிறப்புக்கள், அணிகள் என்பனவற்றை எழுத வழிகாட்டுதல்.

**முதன்மைப்பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- மகாபாரதம் என்னும் இலக்கியத்தின் கதையும் பாத்திரப் பண்புகளும் விழுமியங்களும் இச்சிறு பகுதியில் சுருக்கமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

- பாடல்தோறும் நயக்கத்தக்க இலக்கிய அம்சங்களை புலவர் பிணித்துள்ளார்.

- பாத்திரங்களின் பண்புகள், புலவர் கூற்று மூலமும் பாத்திரங்களின் உரைகளிலும் மற்றவர் கூறும் கருத்துக்களாலும் கதையோட்டத்தாலும் தெளிவுபடுத்தப்படுகின்றன.

தருமன் :

பஞ்ச பாண்டவர்களில் மூத்தவன். போரை விரும்பாதவன். தருமச் செயல்களில் பற்று மிகுந்தவன்.

வீமன் :

தருமனின் உடன் பிறந்தவன். முன்கோபி.

அருச்சுனன், நகுலன், சகாதேவன் என்போர் தருமனின் ஏனைய சகோதரர்கள்.

திரௌபதி :

இந்தச் சகோதரர்கள் ஐவருக்கும் மனைவி. பாண்டவர்கள் சூதாடித் தோற்றபோது சபையில் வைத்து துச்சாதனனால் (துரியோதனனின் சகோதரன்) துகில் உரியப்பட்டாள்.

துரியோதனன் :

பஞ்ச பாண்டவர்களுக்கு (தந்தை வழியில்) பெரிய தந்தையான திருதராஷ்டினரின் மூத்தமகன். தீயவன். இவனுடன் பிறந்தவர்கள் (சகோதரர்) நூற்றுவர். பஞ்ச பாண்டவர்களுடன் சூதாடி அவர்களது ராஜ்ஜியத்தை எடுத்துக் கொண்டவன்.

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- பாடநூல்.
- செய்யுட் பகுதிகள்.
- அகராதி.
- எழுதுதாள்கள்.

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- பாடலை சந்தி பிரித்தும், கொண்டு கூட்டியும் வாசித்துக்காட்டுவார்.
- படைப்பின் (செய்யுளின்) பிரதான கருத்துக்களையும் துணைக்கருத்துக்களையும் சுருக்கியும் விரித்தும் கூறுவார்.
- பாத்திர இயல்புகளை வாசித்து, அறிந்து எழுதுவார்.
- படைப்பு (செய்யுள்) பற்றிய நயங்களையும் சிறப்புக்களையும் எழுதி முன்வைப்பார்.
- இது போன்ற ஆக்கங்களை முன்வைப்பார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | : | 1.0 | பல்வேறு நோக்கங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்குமேற்ப, வினைத்திறனுடன் கேட்டுக் கிரகித்துத் துலங்குவார். |
| **தேர்ச்சி மட்டம்** | : | 1.3 | கேட்டுக் கிரகித்தவற்றைச் செம்மையாகக் கூறுவார். |
| **விடய உள்ளடக்கம்** | : | | அறிவித்தல், அறிவுறுத்தல். |
| **பாடவேளை** | : | 01 | |

**கற்றற் பேறுகள் :**

- அறிவித்தல்களைச் செவிமடுத்து அவற்றிலுள்ள பிரதான விடயங்களை இனங்கண்டு கூறுவார்.
- அறிவித்தல்களினூடு வெளிப்படுத்தப்படும் விடயங்களைத் தொகுத்துக் கூறுவார்.
- அறிவித்தல், அறிவுறுத்தல் என்பவற்றிற்கிடையேயான வேறுபாடுகளை அறிந்து கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- மாதிரி அறிவித்தல் ஒன்றைக் காட்சிப்படுத்தி அது தொடர்பில் கலந்துரையாடல் (பாடப்பிரவேசமாக அமையும்).
- மாதிரி அறிவித்தல், அறிவுறுத்தல் என்பவற்றைக் கேட்கச் செய்து கலந்துரையாடுவதன் மூலம் அவற்றிற்கிடையேயான வேறுபாடுகளை விளக்கல்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி அறிவித்தல், அறிவுறுத்தல் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு குழுவும் கேட்கச்செய்து அவற்றிலுள்ள பிரதான விடயங்களை கூற நெறிப்படுத்தல்.
- தகவல்களை வழங்கி அவற்றைப் பொருத்தமாகத் தொகுத்து அறிவித்தல்களாக அல்லது அறிவுறுத்தல்களாக கூற வழிப்படுத்தல்.
- கணிப்பீட்டு, மதிப்பீட்டு செயற்பாட்டைப் பொருத்தமாகத் திட்டமிட்டுச் செயற்படுத்தல்.

**முதன்மைப்பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- அறிவித்தல் என்பது ஒரு தகவலை / செய்தியைத் தருவது ஆகும்.

  உ-ம் கூட்டம் தொடர்பான அறிவித்தல்.

  மரண அறிவித்தல்.

- அறிவுறுத்தல் என்பது பின்பற்றவேண்டிய / செய்யக்கூடாதவற்றைத் தெரிவிப்பது.

  உ-ம் பாடசாலையில் பின்பற்ற வேண்டியவை

  புதிய தொலைக்காட்சியைப் பொருத்துவதற்கான வழிகாட்டல்கள்.

### தரவிருத்தி உள்ளீடுகள்:

- மாதிரி அறிவித்தல்கள், அறிவுறுத்தல்கள் இறுவட்டுக்கள்.
- டிமைன் தாள்.
- எழுது கருவிகள்.

### கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- தகவல்களை வழங்கி அவற்றைப் பொருத்தமாகத் தொகுத்து அறிவித்தல்களாக அல்லது அறிவுறுத்தல்களாக கூற முனைவார்.
- மாதிரி அறிவித்தல், அறிவுறுத்தல் என்பவற்றைக் கேட்டுக் கலந்துரையாடுவதன் மூலம் அவற்றிற்கு இடையிலான வேறுபாடுகளை விளக்குவார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | : | 4.0 | தமது எண்ணங்களைக் கேட்போர் உள்ளங்கொள்ளத்தக்க வகையில் எடுத்துரைப்பார். |
| **தேர்ச்சி மட்டம்** | : | 4.1 | ஆக்கச் சிந்தனை வெளிப்படும் விதத்தில் தெளிவாகப் பேசுவார். |
| **விடய உள்ளடக்கம்** | : | | சம்பவ விபரிப்பு. |
| **பாடவேளை** | : | 03. | |

**கற்றற் பேறுகள் :**

- சம்பவமொன்றினை விபரித்துத் தெளிவாகக் கூறுவார்.
- விடயங்களைத் தொடர்புபடுத்தித் தொகுத்துக் கூறுவார்.
- பொருத்தமாக வர்ணித்துப் பேசுவார்.
- தாம் பெற்ற அனுபவங்களையும் உணர்வுகளையும் பிறரும் உணருமாறு பேசுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- சிறியளவில் எழுதப்பட்ட சம்பவ விபரிப்புப் பிரதியொன்றை வாசித்துக் காட்டி, அது தொடர்பில் கலந்துரையாடல். (பாடப்பிரவேசமாக அமையும்)
- சம்பவமொன்றை விபரித்துக்கூறும் போது அனுசரிக்க வேண்டிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடல்.
- கலந்துரையாடுவதன் மூலம் சம்பவ விபரிப்பிற்கு ஏற்ற மொழிநடையினை இனங்காட்டல்.
- மாணவர்கள் ஓரிருவரை எழுமாற்றாக அழைத்து அவர்களின் அனுபவங்கள் ஒவ்வொன்றை விபரித்துக் கூறச் செய்து கலந்துரையாடல்.
- குறிப்பிட்ட சம்பவங்கள் சிலவற்றை வழங்கி அவற்றை மாணவர்கள் விபரித்துக் கூற வழிப்படுத்தல்.

**முதன்மைப்பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- பல்வேறு சந்தர்ப்பங்களில் சம்பவங்களை நாம் விபரித்துக் கூறவேண்டியிருக்கிறது.
- சம்பவங்களை விபரிக்கும் பொழுது விடயங்களை உரிய வகையில் தொகுத்துக் கூறுவதும் அனுபவங்களையும் உணர்வுகளையும் பிறரும் உணரும் வகையில் கூறுவதும் அவசியமாகும்.
- பொருத்தமான வர்ணனையாற்றல் சம்பவத்தை விபரித்துக் கூறுபவருக்குப் பெரிதும் உதவும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- மாதிரிச் சம்பவ விபரிப்பு
- காகிதாதிகள்
- எழுது கருவிகள்.

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள் :**

- விபரிக்கும் ஆற்றலை வெளிப்படுத்திப் பேசுவார்.
- தொடர்புடையதாக சம்பவங்களைத் தொகுத்துக் கூறுவார்.
- வர்ணனையாற்றலை வெளிப்படுத்திப் பேசுவார்.
- அனுபவங்களை கேட்போர் பெறும் வண்ணம் உணர்வுடன் பேசுவார்.

**தேர்ச்சி** : 3.0 பல்வேறு பாத்திரங்களை ஏற்று அவற்றின் இயல்புகளையும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்திப் பேசுவார்.

**தேர்ச்சி மட்டம்** : 3.2 பாவனை செய்து பேசுவார்.

**விடய உள்ளடக்கம்** : அறிவிப்பு.

**பாடவேளை** : 01.

**கற்றற் பேறுகள் :**

- தனது வகிபாகத்தை அறிந்து பாவனை செய்து பேசுவார்.
- அறிவிக்கும் விடயத்திற்கேற்ற உணர்ச்சி வெளிப்பாட்டுடன் பேசுவார்.
- கருத்துத் தெளிவோடும், தொனி வேறுபாடுகளுடனும் பேசுவார்.
- கேட்போரை ஈர்க்கும் வகையில் செம்மையான மொழிநடையுடன் பேசுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- அறிவிப்பு அடங்கிய மாதிரி ஒலிநாடாவை ஒலிக்கச் செய்தல்.
- அறிவிக்கப்பட்ட விடயம் தொடர்பாகக் கலந்துரையாடுதல்.
- அறிவிப்பு விடயங்களிற்கேற்ப உணர்ச்சி வெளிப்பாடு மாறுபடுவதை விளக்குதல்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி வெவ்வேறு விடயங்களை அறிவிப்புச் செய்ய வழிப்படுத்தல்.

**முதன்மைப்பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- அறிவிக்க வேண்டிய பகுதியில்
  - இடம்பெற வேண்டிய தகவல்கள்.
  - விடயத்திற்கேற்ற உணர்ச்சி வெளிப்பாடு
  - கருத்துத்தெளிவு
  - சரியான உச்சரிப்பு
  - தொனி வேறுபாடு
  - செம்மையான மொழிநடை

  என்பவற்றின் முக்கியத்துவத்தை விளக்குதல்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- மாதிரி அறிவிப்பு அடங்கிய ஒலி / ஒளி நாடா.
- எழுது கருவிகள்.
- எழுது தாள்.

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- அறிவிப்பில் இடம்பெற வேண்டிய விடயங்களை அறிந்து கூறுவார்.
- விடயத்திற்கேற்ப உணர்ச்சி வேறுபடும் என்பதை அறிந்து பேசுவார்.
- கருத்துத் தெளிவு, சரியான உச்சரிப்பு, செம்மையான மொழிநடையைப் பயன்படுத்தி அறிவிப்புச் செய்வார்.

**தேர்ச்சி** : 7.0 இரசனைக்காகவும் ஆக்கத்திறனை விருத்தி செய்யும் வகையிலும் வாசிப்பார்.

**தேர்ச்சி மட்டம்** : 7.1 படைப்புக்களை நயந்து வாசிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : தமிழர் பண்பாடும் அதன் சிறப்பியல்புகளும்.

**பாடவேளை** : 0 4

**கற்றற் பேறுகள் :**

- கட்டுரையின் பிரதான கருத்தையும் துணைக்கருத்துக்களையும் இனம் கண்டு வாசிப்பார்.
- கட்டுரையில் பயின்றுவரும் அரும்பதங்களையும் கலைச்சொற்களையும் இனங்கண்டு பொருள் வாசிப்பார்.
- கட்டுரை மூலம் கட்டுரையாசிரியர் கூறுகின்ற கருத்துக்களை தொகுத்து விளக்குவார்.
- கட்டுரையாக்கத்தில் பயன்படுத்தப்பட்ட உத்திகளை இனங்கண்டு வாசிப்பார்.
- கட்டுரையாசிரியரின் மொழிநடைபற்றிக் கருத்துக்களை முன்வைப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- பொருத்தமான முறையில் பாடத்தை அறிமுகம் செய்தல்.
- கட்டுரையாசிரியரைப் பற்றிய சுருக்கமானதொரு அறிமுகம் செய்தல்.
- கட்டுரையின் உள்ளடக்கம் பற்றியும் அது விவரிக்கும் விடையம் பற்றியும் சுருக்கமாகக் குறிப்பிட்டு கட்டுரை மீதான ஆர்வத்தைத் தூண்டுதல்.
- கட்டுரையை, மாணவர்களை மௌனமாக வாசிக்கச் செய்தல்.
- கட்டுரையின் பிரதான கருத்து, துணைக்கருத்து மற்றும் முக்கிய விடயங்கள் போன்றவற்றைக் குறிப்பெடுத்தல்.
- குழுவாகக் கலந்துரையாடி அக்கருத்துக்களை முன்வைத்தல்.
- கட்டுரையில் காணப்படும் அரும்பதங்கள், கலைச் சொற்கள், மேற்கோள்கள் என்பவற்றுக்கு அகராதியின் துணைகொண்டு மாணவர்களை பொருள் / விளக்கம் எழுதச் செய்தல்
- கட்டுரையாசிரியரின் தனித்துவநடை, கட்டுரையாக்க நுட்பம் என்பன பற்றி மாணவர்களைக் கருத்துரை வழங்குமாறு கூறி அவர்கள் கூறுவதற்கு ஆசிரியர்கள் உதவி புரிதல்.

**முதன்மைப்பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- **ஆசிரியர் அறிமுகம்.**

**தவத்திரு தனிநாயகம் அடிகள்:**

இவர் 1913ஆம் ஆண்டு ஆவணி மாதம் இரண்டாம் நாள் தீவகத்தின் நெடுந்தீவில் பிறந்தார். இவரது இயற்பெயர் நாகநாதன் கணபதிப்பிள்ளை. தமிழை உலகெலாம் எடுத்துச் சென்று அதன் உயர்வினை அறியச் செய்த தமிழ்த் தொண்டர். தமிழ்த் தூது, தொல்தமிழ் கவிதையில் இயற்கை, ஒரே உலகம் போன்ற நூல்களை எழுதியுள்ளார். இலங்கையின் தலைசிறந்த தமிழியலாளர்களில் ஒருவர். தமிழை உலகெலாம் எடுத்துச்சென்று அதன் உயர்வினை அறியச்செய்த தமிழ்த் தொண்டர்.

**தமிழர் பண்பாட்டின் சிறப்புக்கள் :**

- தமிழர் பண்பாடு தனித்துவமும் சிறப்பும் மிக்கது.
- இப்பண்பாடு உயர்ந்த விழுமியங்களை உள்ளடக்கிக் காணப்படுகின்ற அதேவேளை, உலகின் ஏனைய பண்பாடுகளுக்கும் ஊற்றாய் அமைந்தது.
- குறிப்பாக இந்திய நாட்டின் பண்பாட்டுருவாக்கத்தில் திராவிடப் பண்பாடு பாரிய பங்களிப்புச் செய்துள்ளது.

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- பாடநூல்.
- அகராதி, கலைக்களஞ்சியம்.
- தமிழர் பண்பாடு தொடர்பான ஏனைய எழுத்தாவணங்கள்.

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- கட்டுரையாசிரியர் பற்றி எடுத்துக் கூறுவார்.
- கட்டுரையின் பிரதான கருத்துக்களைத் தொகுத்துக் கூறுவார்.
- கட்டுரையின் சாராம்சத்தைத் தொகுத்து எழுதுவார்.
- கட்டுரையில் வரும் அரும்பதங்கள், கலைச்சொற்களுக்கு பொருளை எழுதுவார்.
- கட்டுரையாசிரியரின் மொழிநடை பற்றிய கருத்துக்களைக் கூறுவார்.
- கட்டுரையாக்க நுட்பங்களை அறிந்து பின்பற்றுவார்.

**தேர்ச்சி** : 8.0 அவதானமாகக் கிரகித்து, எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து, இலக்கண வழுவின்றி உரிய நிறுத்தக் குறிகளுடன் ஆக்கங்களைத் தெளிவாக எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம்** : 8.2 அவதானித்துக் கேட்டுக் கிரகித்தவற்றை வழுவின்றி எழுதுவார்.

**விடய உள்ளடக்கம்** : பழமொழிகள்.

**பாடவேளை** : 0 2 .

**கற்றற் பேறுகள் :**

- பழமொழிகளைக் கேட்டுக் கிரகித்து எழுதுவார்.
- பழமொழிகளின் பொருளுணர்ந்து எழுதுவார்.
- பழமொழிகளின் பண்புகளை இனங்கண்டு எழுதுவார்.
- பழமொழிகளைப் பொருத்தமாக ஆக்கங்களில் கையாண்டு எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- பழமொழிகள் உள்ளடங்கிய சிறிய பந்தியொன்றை வாசித்து / ஒலிபரப்பி கலந்துரையாடுவதன் மூலம் பழமொழிகளை இனங்காட்டல் (பாடப்பிரவேசமாக அமையும்).
- பழமொழிகள் சிலவற்றை முன்வைத்துக் கலந்துரையாடுவதன் மூலம் அவற்றின் பொருளை விளக்கல்.
- பழமொழிகளின் இயல்பினையும் பயன்பாட்டினையும் கலந்துரையாடலின் மூலம் விபரித்தல்.
- பழமொழிகளையும் அவற்றிற்கான பொருளையும் மாணவர் எழுத வழிப்படுத்தல்.
- பழமொழிகளைப் பொருத்தமாக பந்திகளில் கையாண்டு எழுத நெறிப்படுத்தல்.

**முதன்மைப்பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- முன்னோர்கள் தம் அனுபவத்தின் மூலம் கண்டுகொண்ட உண்மைகளை பொருள் பொதிந்த தொடர்களாகக் கூறியுள்ளனர். அவை பழமையானவை. அவையே பழமொழிகள்/ முதுமொழிகள் எனப்படுகின்றன.
- பழமொழிகள் சுருக்கமாகவும் செறிவாகவும் அழகாகவும் விடயமொன்றை வலியுறுத்துபவை ஆகும்.
- எமது கருத்துக்களைச் சுருக்கமாகவும், உறுதியாகவும், அழகாகவும் கூற பழமொழிகள் உதவும்.
- பழமொழிகளுக்குச் சில உதாரணங்கள்.
    - அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.
    - எடுப்பது பிச்சை ஏறுவது பல்லக்கு.
    - தன்வினை தன்னைச் சுடும்.
    - பதறாத காரியம் சிதறாது.
    - மனமுண்டானால் இடமுண்டு.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- மாதிரிப் பந்தி.
- எழுது தாள்கள்.
- எழுது கருவிகள்.

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- பழமொழிகளை கேட்டுக் கிரகித்து எழுதுவார்.
- பழமொழிகளிற்கு பொருள் எழுதுவார்.
- பழமொழிகளைத் தமத ஆக்கங்களில் பொருத்தமாகக் கையாள்வார்.

**தேர்ச்சி** : 13.0 மொழியின் இலக்கணத்தை அறிந்து, அதற்கமைய மொழியைச் செம்மையாகக் கையாள்வார்.

**தேர்ச்சி மட்டம்** : 13.3 சொற்றொடர், வாக்கியம் என்பவற்றின் வகையையும் அவற்றின் இயல்பையும் அறிந்து அவற்றைப் பிரயோகிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : வாக்கிய இயைபு.

**பாடவேளை** : 03

**கற்றற் பேறுகள் :**

- வாக்கியத்தின் அமைப்பை விளங்கிக்கொண்டு எழுதுவார்.
- வாக்கிய உறுப்புக்களை இனங்கண்டு இயைபுற எழுதுவார்.
- வாக்கியங்களை வழுவின்றி எழுதுவார்.
- மொழியைச் செம்மையாகப் பயன்படுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- வானொலி, பத்திரிகை முதலிய ஊடகங்களில் அல்லது மாணவர் எழுதிய எழுத்தாக்கங்களில் இயைபின்றி வாக்கியங்கள் அமைந்திருப்பதை இனங்காட்டிக் கலந்துரையாடல். (பாடப்பிரவேசமாக அமையும்)
- வாக்கியமொன்றின் அமைப்புத் தொடர்பாகவும் அதன் உறுப்புக்கள் தொடர்பாகவும் கலந்துரையாடலின் மூலம் விளக்கல்.
- எழுவாய், பயனிலை ஆகிய வாக்கிய உறுப்புக்கள் திணை, பால், எண், இடம் ஆகியவற்றின் அடிப்படையில் இயைபுபட்டிருக்கவேண்டியதன் அவசியத்தை விபரித்தல்.
- பொருத்தமான பயிற்சிகளைத் திட்டமிட்டு வழங்குவதன் மூலம் மாணவர் மேலதிக விளக்கத்தைப் பெற உதவுதல்.
- பொருத்தமான கணிப்பீட்டு, மதிப்பீட்டு செயற்பாடுகளைத் திட்டமிட்டுச் செயற்படுத்தல்.

**முதன்மைப்பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- சொற்கள் ஒன்றோடொன்று இயைபுறத் தொடர்ந்து வாக்கியமாகப் பொருளுணர்த்துகின்றன.
- தமிழ் வாக்கியங்களில் பொதுவாக எழுவாய் முதலிலும் பயனிலை முடிவிலும் செயப்படுபொருள் இடையிலும் வரும். பொருள் மயக்கமில்லாதவாறு இடம் மாறியும் அமையலாம்.

- வாக்கியங்களில்
    - பெயரெச்சம் பெயருக்கு முன் வரும்
    - எண்ணுப் பெயரும் சுட்டுப் பெயரும் பெயரடைகளாக வருமிடத்து அவை பொதுவாகப் பெயரெச்சங்களுக்கு முன் வரும்.
    - வினையெச்சம் வினைக்கு முன் வரும்.

- எழுவாயும் பயனிலையும் திணை, பால், எண், இடங்களில் இயைபுபட்டிருத்தல் வேண்டும்.

- இயைபுபடாதவை வழுக்கள் ஆகும்.

    - திணைவழு
    - பால் வழு
    - இட வழு
    - கால வழு

- சில விசேட நிலைமைகளில்

    - ஆண்பாலும் பெண்பாலும் விரவி எழுவாயாகவரின் பயனிலை பலர்பாலில் இருக்கும்.
    - முன்னிலை எழுவாயோடு படர்க்கை எழுவாய் அடுக்கிவரின் பயனிலை முன்னிலைப் பன்மையாக இருக்கும்.
    - தன்மைப் பெயரோடு, முன்னிலைப் பெயரேனும் படர்க்கைப் பெயரேனும் இருவகை பெயருமேனும் அடுக்கி எழுவாயாய் வரின் பயனிலை தன்மைப் பன்மையாய் இருக்கும்.
    - திணையில் ஐயந் தோன்றியவிடத்து, ''உருவு'', ''வடிவு'' என்பன போன்ற பொதுச் சொற்களாலும்; உயர்திணைப் பாலில் ஐயந்தோன்றியவிடத்து, அத்திணைப்பன்மைச் சொல்லாலும்; அ.்.றிணைப் பாலில் ஐயந்தோன்றியவிடத்து பால்பகாவ.்.றிணைச் சொல்லாலும் கூறுதல் வேண்டும். இவ்விதி வினாவிற்குரியது.
    - இருதிணையில் ஒருதிணை துணிந்தவிடத்தும், இருபாலில் ஒருபால் துணிந்தவிடத்தும் மற்றொன்று அல்லாத தன்மையைத் துணிந்த பொருண்மேல் வைத்துக் கூறுதல் வேண்டும். இவ்விதி விடைக்குரியது.

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- மாதிரி வாக்கிய (வழுவுடையவை) அட்டைகள்
- எழுது தாள்கள்
- எழுது கருவிகள்.

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- வாக்கியத்தின் அமைப்பினை இனங்கண்டு கூறுவார்.
- வாக்கிய உறுப்புக்களை இனங்கண்டு கூறுவார்.
- வாக்கிய உறுப்புக்கள் இயைபுபட வாக்கியம் எழுதுவார்.
- பொருத்தமாக வாக்கியங்களை ஒழுங்குபடுத்தி எழுதுவார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | : | 2.0 | சந்தர்ப்பத்துக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ற வகையில் உரையாடுவார். |
| **தேர்ச்சி மட்டம்** | : | 2.1 | தமது உணர்வுகளும் எண்ணங்களும் தெளிவாகப் புலப்படும் வகையில் உரையாடுவார். |
| **விடய உள்ளடக்கம்** | : | | விவரணச் சித்திரம். |
| **பாடவேளை** | : | 01 | |

**கற்றற் பேறுகள் :**

- எடுத்துக்கொண்ட விடயத்திற்குப் பொருத்தமாக தெளிவாக உரையாடுவார்.
- விடயத்திற்கேற்ப விளக்கமாகவும், தெளிவாகவும் பேசுவார்.
- விடயங்களைப் பொருத்தமாகத் தொகுத்துக் கூறுவார்.
- பொருத்தமான வர்ணனைகளோடு விபரித்துக் கூறுதல்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- பொருத்தமான விவரணச் சித்திரத்தின் பகுதியை ஒலிபரப்பி, அது தொடர்பாகக் கலந்துரையாடல் (பாடப்பிரவேசமாக அமையும்).
- கலந்துரையாடலின் மூலம் விவரணச் சித்திரத்தில் உள்ளடங்க வேண்டிய அம்சங்கள், விவரணச் சித்திரத்தின் பண்புகள் என்பனவற்றை விளக்கல்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி, தகவல்களை வழங்கி அவற்றைப் பொருத்தமாகத் தொகுத்து விவரணச் சித்திரமாக வழங்க வழிகாட்டல்.
- கணிப்பீட்டு, மதிப்பீட்டுச் செயற்பாடுகளைப் பொருத்தமாகத் திட்டமிட்டுச் செயற்படுத்தல்.

**முதன்மைப்பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- விவரணச் சித்திரம் விடயமொன்றை / சம்பவமொன்றைப் பற்றியதாக விபரித்துக் கூறும்.
- தகவல்கள், தரவுகள், விளக்கங்கள் கொண்டதாக இது அமையும்.
- பாடல்கள், ஒலிக்கீற்றுக்கள் (பிரமுகர் ஒருவரின் குரலிலேயே அமைந்த கூற்றுக்கள் முதலியன) முதலியவற்றையும் உள்ளடக்கியிருக்கலாம்.
- குரல் வளமும், தொனி வேறுபாட்டுடன் பேசுந்திறனுமே விவரணச் சித்திரத்தின் அடிப்படைகளாகும்.
- விவரணச் சித்திரம் ஒரே குரலிலேயே அமையலாம்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- மாதிரி விவரணச் சித்திர இறுவட்டு.
- திருக்குறள் (பேதமை)
- டிமைன் தாள்.
- எழுது கருவிகள்.

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- விடயப் பொருத்தத்தோடு தெளிவாக உரையாடுவார்.
- விடயத்தை விளக்கி தெளிவுடன் பேசுவார்.
- பொருத்தப்பாட்டுடன் தொகுத்துக் கூறுவார்.
- வர்ணித்தும் விபரித்தும் பேசுவார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | : | 13.0 | மொழியின் இலக்கணத்தையறிந்து அதற்கு அமைய மொழியை செம்மையாகக் கையாள்வார். |
| **தேர்ச்சி மட்டம்** | : | 13.2 | சொற்களின் வகையையும் இயல்பையும் அறிந்து அவற்றைப் பிரயோகிப்பார். |
| **விடய உள்ளடக்கம்** | : | | ஆகுபெயர்கள் |
| **பாடவேளை** | : | 01 | |

**கற்றற் பேறுகள் :**

- ஆகுபெயர் என்பதனை அறிந்து விளக்குவார்.
- ஆகுபெயரின் இயல்பினையும் முக்கியத்துவத்தையும் உணர்ந்து துலங்குவார்.
- ஆகுபெயரினை வகைப்படுத்திக் கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- பாடப்பிரவேசத்தினைப் பொருத்தமாகத் திட்டமிடல்.
- பெயர்ச்சொல்லொன்று இயல்பாகவும் ஆகுபெயராகவும் அமையுமாறு இருவாக்கியங்களைக் காட்சிப்படுத்தல்.
- கலந்துரையாடலின் மூலமாக ஆகுபெயர் என்றால் என்ன என்பதனை விளக்கல்.
- உதாரணங்களைக் காட்சிப்படுத்திக் கலந்துரையாடுவதன் மூலமாக ஆகுபெயர்களை வகைப்படுத்தல்.
- பொருத்தமான பயிற்சிகளை வழங்கல்.
- கணிப்பீடு, மதிப்பீடுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ளல்.

**முதன்மைப்பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- பெயர்ச்சொல் தனது இயல்பான பொருளைக் குறிக்காமல் அப்பொருளோடு தொடர்புபட்ட பிறிதொன்றிற்கு தொன்றுதொட்டு ஆகிவருமாயின் அது ஆகுபெயர் எனப்படும்.

உதாரணம் :-

தமிழ் தினப் போட்டியில் எமது பாடசாலை முதலாம் இடம் பெற்றது.

இங்கு பாடசாலை தனது இயல்பான பொருளைக் குறிக்காமல் பாடசாலை மாணவர்களைக் குறித்து வருவதால் ஆகுபெயர் ஆகியது.

- ஆகுபெயர் பதினாறு வகைப்படும்.

1. பொருளாகு பெயர்

**திராட்சை** மிகவும் சுவையானது.

2. சினையாகு பெயர்

மலைநாட்டுத் தோட்டங்களில் **தேயிலை** மீள்நடுகை செய்யப்படுகின்றது.

3. இடவாகு பெயர்

வெள்ளப்பெருக்கினால் எமது **கிராமம்** இடம்பெயர்ந்து விட்டது.

4. காலவாகு பெயர்

இவ்வாண்டு **மாரி** பொழிந்ததால் நல்ல விளைச்சல் கிடைத்தது.

5. குணவாகு பெயர்

சித்திரைத் திருவிழாவை முன்னிட்டு கோயில் **வெள்ளை** அடிக்கப்படுகின்றது.

6. தொழிலாகு பெயர்

சக்தியின் **தேடல்** எமது கிராமத்தின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியது.

7. தானியாகுபெயர்

**இளநீர்** வெட்டினான்.

8. எண்ணலளவையாகு பெயர்

கன்னத்தில் **ஒன்று** தந்தால் தெரியும்.

9. எடுத்தலளவையாகு பெயர்

**ஒரு இறாத்தல்** வாங்கினால் மூவருக்கும் போதும்.

10. முகத்தலளவையாகு பெயர்

ஒரு நாளைக்கு விளக்கெரிக்க **அரைப் போத்தல்** வேண்டும்.

11. நீட்டலளவையாகு பெயர்

பாடசாலைச் சீருடை தைப்பற்கு **இரண்டு மீற்றர்** தேவைப்படுகின்றது.

12. சொல்லாகு பெயர்

நேற்று வெளியான **கட்டுரை** சர்ச்சையைக் ஏற்படுத்தி விட்டது.

13. கருவியாகு பெயர்

இன்று வானொலியில் ஒலிபரப்பான **வீணை** பரவசப்படுத்தியது.

14. காரியவாகு பெயர்

எழுத்தாளர்கள் தரமான **இலக்கியம்** படைத்தல் வேண்டும்.

15. கருத்தாவாகு பெயர்

**பாரதி**யைப் படிக்காதவர்கள் நவீன கவிதையைப் பற்றி எப்படிப் பேச முடியும்.

16. உவமையாகு பெயர்

**சிங்கம்** வருகிறான்.

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- எழுது தாள்கள்.
- எழுது கருவிகள்.

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- ஆகுபெயர் என்றால் என்ன என்பதனை விளக்குவார்.
- ஆகுபெயரின் வகைகளை இனங்கண்டு துலங்குவார்.
- ஆகுபெயரின் வகைகளுக்குப் பொருத்தமான உதாரணங்களை முன்வைப்பார்.

**தேர்ச்சி** : 11.0 படைப்புக்களை வாசித்த அனுபவங்களினூடாக படைப்பாக்க நுட்பங்களை அறிந்து ஆக்கங்களைச் சுயமாக எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம்** : 11.2 நடைமுறைத்தேவைகளுக்காக எழுதுவார்.

**விடய உள்ளடக்கம்** : அறிக்கை எழுதுதல்.

**பாடவேளை** : 03

**கற்றற் பேறுகள் :**

- தலைப்புக்குப் பொருத்தமாக அறிக்கை எழுதுவார்.
- விடய உள்ளடக்கத்தைத் தெளிவாகவும், தர்க்கரீதியாகவும், நேர்த்தியாகவும் எழுதுவார்
- இலக்கண வழுவின்றி எழுதுவார்
- நடைமுறைத் தேவைகளுக்கு ஏற்றவகையில் எழுதுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற விழா ஒன்றைபற்றிக் கலந்துரையாடுதல்.
- விழாவில் நடைபெற்ற நிகழ்ச்சிகளைச் சட்டகப்படுத்துதல்.
- அறிக்கை என்றால் என்ன? அதில் இடம்பெறும் விடயங்கள் என்பன பற்றிக் கலந்துரையாடுதல்.
- சட்டகத்திலிருந்து எவ்வாறு அறிக்கை தயாரிப்பதென விளக்குதல்.
- மாணவர்கள் அறிக்கை ஒன்றை எழுத வழிப்படுத்தல்.

**முதன்மைப்பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- நடைபெற்ற நிகழ்ச்சிகளுக்கு மட்டுமன்றி எதிர்காலத்தில் நடைபெறத்திட்டமிட்ட முயற்சிகளுக்கும் அறிக்கை எழுதலாம்.
- கூட்ட அறிக்கை, ஆண்டறிக்கை, வெளிக்கள அறிக்கை, சுற்றறிக்கை, செய்தி அறிக்கை எனப்பலவகைப்படும்.
- அறிக்கையில்
    - தலைப்பு
    - அறிமுகம்
    - இடம், காலம், நேரம்
    - நிழச்சிகள், திகதி
    - ஒப்பம் (பதவிப் பெயர், விலாசம்)

  என்பவை இடம்பெறவேண்டும்.

## அறிக்கையின் அமைப்பு

தலைப்பு

அறிமுகம்
இடம், காலம், நேரம்.

நிகழ்வுகள் அல்லது விடயங்கள்.

திகதி

பெயர், பதவி,
நிறுவனம்.

## அறிக்கை எழுதும் சந்தர்ப்பங்கள்.

மன்றங்கள் கழகங்களில் வாசிக்கப்படும் கடந்த காலக் கூட்டத்தின் அறிக்கை.

சமூக நிறுவனங்கள், சங்கங்களின் ஆண்டறிக்கை.

செயற்றிட்டம், நிகழ்வுகள் பற்றி சமர்ப்பிக்கப்படும் விசேட அறிக்கை.

பிரச்சனைகள், சூழ்நிலைகள், எதிர்பாராத சம்பவங்கள் பற்றி ஆராய்ந்து சமர்ப்பிக்கப்படும் அறிக்கை.

அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் போன்றவற்றின் செயற்பாடுகள் பற்றி அந்நிறுவனத் தலைவருக்கு சமர்ப்பிக்கப்படும் முன்னேற்ற அறிக்கை.

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- மாதிரி அறிக்கை
- எழுது தாள்.
- எழுது கருவிகள்.

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- அறிக்கையின் வகைகளை அறிந்து எழுதுவார்.
- அறிக்கையில் இடம்பெறவேண்டிய விடயங்களைப் பிரயோகிப்பார்.
- சட்டகங்களை ஆக்குவதன் மூலம் அறிக்கை எழுதுவார்.

| | | | |
|---|---|---|---|
| **தேர்ச்சி** | : | 3.0 | பல்வேறு பாத்திரங்களை ஏற்று, அவற்றின் இயல்புகளையும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்திப் பேசுவார். |
| **தேர்ச்சி மட்டம்** | : | 3.2 | பாவனை செய்து பேசுவார். |
| **விடய உள்ளடக்கம்** | : | | நேர்முக வர்ணனை. |
| **பாடவேளை** | : | 02 | |

**கற்றற் பேறுகள் :**

- தனக்குரிய நிகழ்ச்சியை அறிந்து கொண்டு அதற்கேற்ப நேர்முகவர்ணனை செய்வார்.
- தொனி வேறுபாடுகளுடன் பேசுவார்.
- விடயத் தெளிவுடன் சரளமாகப் பேசுவார்.
- கேட்போரை ஈர்க்கும் வகயில் பேசுவார்.
- கேட்பவர்கள் நிகழ்ச்சியைப் புரிந்து கொள்ளும் வகையிற் காட்சிப்படுத்திப் பேசுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- மாணவர் கேட்ட / பார்த்த நேர்முகவர்ணனை இடம்பெற்ற சந்தர்ப்பங்களை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடல்.
- சிறிய நேர்முகவர்ணனைப் பகுதி ஒன்றை ஒலிபரப்பி, அது தொடர்பாகக் கலந்துரையாடுதல்.
- நேர்முகவர்ணனை இடம்பெறும் சந்தர்ப்பங்களையும், பயன்களையும் அட்டவணைப்படுத்தல்.
- நேர்முகவர்ணனை செய்யும்போது கவனிக்கவேண்டிய விடயங்களை விளக்குதல்.
- குறித்த நிகழ்வு ஒன்று தொடர்பாக மாணவர் நேர்முக வர்ணனை செய்ய நெறிப்படுத்தல்.

**முதன்மைப்பதங்கள்** (key words), **எண்ணக்கரு:**

- குறித்த நிகழ்ச்சியொன்றை, அது நடைபெற்றுக்கொண்டிருக்கும் போதே மற்றவர் அறியும்படி வர்ணிப்பதே நேர்முகவர்ணனை ஆகும்.
- இதன்போது கவனிக்கவேண்டியவை:
    - குறித்த நிகழ்வுபற்றி பூரண விளக்கம் இருத்தல்.
    - விளக்கமாகவும் தெளிவாகவும் கூறுதல்.
    - சபையோரைக் கவரும் வகையில் விவரித்து, வர்ணித்துச் சுவைபடக் கூறுதல்.
    - தொடர்ச்சியாகவும், காட்சியை முன்னிலைப்படுத்தியும் கூறுதல்.
    - காட்சியை மனக்கண் முன் கொண்டுவரும் வகையில் வர்ணித்தல்.
    - சரியான உச்சரிப்புடன் சுவைபடப் பேசுதல்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- மாதிரி நேர்முகவர்ணனை உள்ள ஒலி / ஒளிநாடா.
- எழுது கருவிகள்.
- எழுதுதாள்.

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- நேர்முகவர்ணனை செய்யும்போது கவனிக்கவேண்டிய விடயங்களை அறிந்து கூறுவார்.
- குறித்த நிகழ்ச்சி கேட்பவர் மனக்கண்முன் தோன்றும் வகையில் நேர்முகவர்ணனை செய்வார்.
- சரியான உச்சரிப்புடனும் தொடர்ச்சியாகவும் பேசுவார்.
- குறித்த நிகழ்ச்சி பற்றிய விளக்கத்துடன் பேசுவார்.